# திசை
THISAI



கம்பியூட்டர் கல்வி

புதிய வகுப்புகள் ஆரம்பம்

| | |
|---|---|
| BASIC | 21-10-89 |
| BASIC (for school children) | 16-10-89 |
| d. Base III + | 21-10-89 |
| LOTUS 1. 2, 3 | 23-10-89 |
| WORD PROCESSING | 16-10-89 |

Contact ;

School of Business Administration

( LEADERS IN COMPUTER EDUCATION )

16, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

( O. L. R. தேவாலய மேற்குப் பக்கம் ) A-26



திசை 1 | 27-10-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 42


# யுத்தமுனையில் மலையகத் தமிழர்

## இராணுவ ரீதியில் கைமாறும் தலைமை

**தமது இரத்தத்தை தேனீராக்கி இலங்கையை வாழவைத்த மலையகத் தமிழர், இப்போது நேரடி இரத்தப் பலிக்கு இழுக்கப் பட்டுள்ளனர். ஏறக்குறைய 25,000 மலையக இளைஞர்களை அரசு ஆயுதபாணிகளாக்கி தோட்டங்களைப் பாதுகாக்கப் போகிறதாகச் செய்தி வெளிவந்துள்ளது.**

வேலைநிறுத்தம், ஹர்த்தால் போன்ற நடவடிக்கைகளின் மூலம் அரசுக்கு எதிரான பொருளாதார ஸ்தம்பிதத்தையேற்படுத்த முனைந்த ஜே.வி.பி. , அதில் தோல்விய டையவே இப்போது நேரடிப் பொருளாதார அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அதன் ஓர் அம்சமாக பெருந் தோட்டத் தொழில் தீக்கிரையாக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தடுக்க அரசு, மலையக இளைஞர்களைத்தான் கருவியாக்குகிறது, தமது தேவைக்கேற்ப முன்னர் மலையக மக்களின் வாக்குரிமையையும் பிரஜா உரிமையையும் பறித்து நாடற்றவர்களாக்கிய அதே அரசு இப்போது தமது பொருளாதாரப் பாதுகாப்புக்காக இரத்தக் களத்திற்கு அவர்களை இழுத்துள்ளது. இதுவரை உழைப்பால் இரத்தத்தை கறந்து வந்த அரசு இப்போது நேரடியாக இரத்தத்தை கோரி நிற்கிறது.

அரசபடையைச் சேர்ந்த 3 பேரின் தலைமையின் கீழ் ஏறக்குறைய 50 இளைஞர்கள் ஒவ்வொரு தோட்டத்தையும் பாதுகாப்பதில் ஈடுபடுவர். இவ்வாறு 25,000 இளைஞர் இதில் ஈடுபடுத்தப்படுவர்.

ஜே. வி. பி. யும் பலாத்காரமாக மலையக இளைஞர்களை தமது இராணுவ நடவடிக்கைகட்குப் பயன்படுத்துவதாகத் தெரிய வருகிறது. இப்படியாயின் இரு முனைகளிலும் சிங்கள இனவாதிகளின் ஆயுதத் தலைமையில் மலையக இளைஞர்கள்தான் அழிக்கப்படுவர் என்ற சந்தேகம் எழுகிறது.

இதில் தொண்டமானினதும் ஏனைய தொழிற் சங்கங்களினதும் கரங்கள் பின் தள்ளப்பட்டு, நேரடியாக அரசின் இராணுவ அரசியலுக்கு கீழ் மலையக மக்கள் உட்படுத்தப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு புறம் அரசின் கரம் மலையக மக்கள் மத்தியில் வலுக்கிறது, மறுபுறம் மலையக மக்கள் பலிக்கடாவாக இரத்தக்களரிக்குள் தள்ளப்படுகின்றனர்.

சூழ்நிலையைத் தனக்குச்சாதகமாகப் பயன்படுத்தி மலையகத் தமிழரை அரசு பலவீனப்படுத்த முயல்கிறது என மேலும் எண்ணவேண்டியுள்ளது.

இஞ்சி, உள்ளி போன்ற பயிர்ச் செய்கைகளின் பெய

(16ஆம் பக்கம் பார்க்க)

## 500 உப தபால் நிலையங்கள்எரிப்பு

கடந்த 9 ஆம் திகதி சர்வதேச தபால் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது தெரிந்ததே.

சர்வதேச தபால் தினத்தன்று இலங்கையில் 500 க்கும் மேற்பட்ட உபதபால் நிலையங்கள் தீவிரவாதிகளால் எரிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளது.

## ஸ்ரீமாவைக் கொல்ல சதி முயற்சி

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைக் கொலைசெய்ய ஒரு சதி முயற்சி இடம் பெற்றதாகவும், அதனை இலங்கைப் பொலிசார் கண்டுபிடித்து விட்டதாகவும் பி. பி. சி. செய்தி ஒன்று கூறுகின்றது.

இச்சதி முயற்சியில் மார்க்ஸிஸ குழு ஒன்று சம்பந்தப்பட்டிருந்ததாக, அச்செய்தி கூறுகிறது. இது பற்றி சரியான தகவல்களோ, அன்றி மேலதிக விபரங்களோ இன்னும் தெரியவரவில்லை.

## ஜே. ஆர் - இறுதி நிலை

ஐ. தே. க. விலிருந்து ஜே. ஆர். முற்றாக வெளியேறிவிட்டார்.

முதலில் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விடுபட்ட ஜே. ஆர், பின்பு தனது கட்சித் தலைமைத்துவத்திலிருந்தும் விடுபட்டார். தற்போது தனது கட்சியின் அங்கத்தவர் நிலையிலிருந்தும் விலகியுள்ளார்.

இவருக்குப்பல அரசியல் அபிலாசைகள் இருந்து வந்ததாகவும், அதன் பொருட்டு இவர் ஏதோ ஒரு வகையில் செயற்பட்டு வந்ததாகவும், இறுதியாக இவர் நம்பிக்கை அற்ற சூழலில் முற்றாகவே அரசியலிலிருந்து ஒதுங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்றும் மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

## கிராமசேவகர் சம்பள முரண்பாடு — ஈழத் தொழிற்சங்க சம்மேளன மகஜர்

"கிராம சேவகர்கள் மூன்று விதமாக நியமனம் வழங்கப்பட்டிருப்பதால் சம்பள, வேலை நிபந்தனைகளில் முரண்பாடுகள் இடம் பெற்றுள்ளது. கிராம சேவை அலுவலர்களாக நேரடி நியமனம் வழங்கப்பட்டவர்கள், விசேட சேவை அலுவலர்களாக இருந்து கிராம சேவகராக மாற்றப்பட்டவர்கள், பயிர்ச் செய்கை உத்தியோகத்தராக இருந்து கிராம சேவகர்களாக மாற்றப்பட்டவர்கள் இதில் அடங்குவர். கிராம சேவகர்கள் மத்தியில் உள்ள சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு, அனைத்து கிராம சேவகர்களுக்கும் அடிப்படைச் சம்பளமாக ரூ 1560/- நிர்ணயிக்கப்படவேண்டும்" —இவ்வாறு ஈழத் தொழிற்சங்க சம்மேளன தேசிய அமைப்பாளர் திரு. வீ. ஏ. கந்தசாமி பொது நிர்வாக உள்நாட்டு மாகாணசபைகள் அமைச்சருக்கு சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

மகஜரில் மேலும் கண்டிருப்பதாவது:

"பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக இருந்து கிராம சேவகராக நியமனம் பெற்றவர்களுக்கு சிங்களத் தேர்ச்சி விதிவிலக்கு உண்டு. தமிழ் அரசாங்கமொழி ஆக்கப்பட்டதால் தமிழ் கிராம சேவையாளர்களுக்கு சிங்களத் தேர்ச்சி விதிவிலக்களிக்கப்படுவதுடன் சிங்களத் தேர்ச்சியின்மையால் சம்பள உயர்வு மறுக்கப்பட்டவருக்கு உரிய சம்பள உயர்வு மீள வழங்கப்படவேண்டும்."

## உலகஉயிர் பாதுகாப்புவாரம் ஒக். 30 — நொவ. 4 வரை

"உலக உயிர் பாதுகாப்பு வாரம் உலக மக்களிடையே உயர் சிந்தனையையும் அன்பையும் தூண்டி, உலக அமைதிக்குவழிகாட்டும்". இவ்வாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும் அது தனது அறிக்கையில் தெரிவிப்பதாவது: "உயிர்காப்பு வாரத்தின் முக்கியத்துவத்தை இன்று பத்திரிகைகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் உலகெங்கும் பரவச்செய்து, இக்கொள்கை சிறப்புற நிறைவேற உதவ வேண்டும்."

## சோவியத் யூனியனுடன் உறவு வலுப்படுத்தப்படும்

—வி. பி. சிங்

தேசிய முன்னணி தான் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் ராஜீவ் நிர்வாகத்தின் வெளியுறவுக் கொள்கையைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இது பற்றி வி. பி. சிங் விளக்குகையில் கூறியதாவது: தாம் பதவிக்கு வந்தால் சோவியத் யூனியனுடன் உறவை வலுப்படுத்தப் போவதாகவும், அதேவேளை அமெரிக்காவுடன் சிநேகபூர்வ உறவை மேற்கொள்ள உள்ளதாகவும் கூறியுள்ளார்.

ராஜீவ் பதவிக்கு வந்தபின்பு சோவியத் யூனியனிலிருந்து படிப்படியாக விலகி அமெரிக்காவுடன் உறவை வலுப்படுத்தி வந்ததாக, அரசியல் ஆய்வாளர் கூறிவந்தது அனைவரும் அறிந்ததே.

எனவே இத்தேர்தலில் அமெரிக்கச் சார்பு மேற்குலகம் ராஜீவுக்கு அனுகூலமான முறையிற்தான் நடந்து கொள்ளும் என, அவதானிகள் கருதுகின்றனர்.

இந்நிலையில் தேசிய முன்னணி பதவிக்கு வந்தால், புதிய சூழலில் மேலும் ஒரு பரிசோதனை வெளியுறவுக் கொள்கையில் இடம் பெறும் என்பதில், ஐயமில்லை. எப்படியோ ராஜீவின் கொள்கைக்கு இது ஒரு நெருக்கடி என்பது தெளிவு. ஆனல் அடுத்த கொள்கை ?

## அம்பாறையிலிருந்து அமைதிப்படை வெளியேற்றம்

இரண்டு வருடங்களாக அம்பாறை மாவட்டத்தில் முகாமிட்டிருந்த இந்தியப் படை கடந்த ஞாயிறு 50 வாகனங்கள், கவசவாகனங்கள் ஜீப்புகள் சகிதம் வெளியேறியது.

இச்சம்பவத்தை மக்கள் பெருந்திரளாக வீதியோரங்களில் கூடிநின்று கவனித்தனர்.

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

# யாழ்.மாவட்டத்தில் சாரணியம்எங்கே?

“என்னுல் கூடுமான வரை எனது சமயம், தேசம் இவைகட்கு எனது கடமைகளைச் செய்யவும் எக்காலத்திலும் பிறருக்கு உதவிபுரியவும் சாரணவிதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் என்னுடைய கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கிறேன்” என்று கூறி சாரணியத்தில் சேர்ந்த யாழ்.மாவட்டச் சாரணர்கள் யாவரும், கடந்த மூன்று வருடங்களாக தாங்கள் யாரின் கட்டளைகளுக்குப் பணிந்து நடப்பது என்றும், தமது ஆணையாளர், உதவி மாவட்ட ஆணையாளர்கள் யார்யார் என்று தெரியாத நிலையிலும் அங்கலாய்த்துக் கொண்டு இருக்கிறுர்கள்.

இதற்கு நமது நாட்டின் கடந்தகால, தற்போதைய அரசியல் நிலைமைகள் ஒரு சிறு காரணமாக அமைந்தாலும் இதன் முழுப் பொறுப்பும், யாழ்மாவட்ட சாரணர் கிளைச் சங்க ஆணையாளரிலும் உதவி மாவட்ட ஆணையாளர்களிலுமே சுமத்தப்பட வேண்டும்.

மேலும் வருடாவருடம் நடாத்தப்படும் போட்டிப் பாசறையும் மூன்று வருடமாக நாட்டுப் பிரச்சினையைச் சாட்டாகவைத்து நடாந்தப்படவில்லை. ஆனுல் காங்கேசன் துறை மாவட்டத்தில் எல்லாம் நடாத்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை அங்கு பிரச்சினைகள் இல்லையோ என்னவோ தெரியவில்லை.

அத்துடன் 1982 இற்குப் பின்னர், யாழ் மாவட்ட சாரணர்கள் எவரும் பிறநாடுகளில் நிகழும் ஜம்போறி விழாவிற்குச் சென்றதாகவும் தெரியவில்லை. ஆனுல் இலங்கையிலிருந்து வருடாவருடம் பல சாரணர்கள் இவ்வாறுன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறுர்கள். சாதி, இன, மொழி, மத வேறுபாடுகள் அற்ற உன்னத இயக்கமான சாரணியத்திலும் இவ்வாறுன துவேஷங்கள் புகுந்து விட்டதோ அல்லது தகுதியான சாரணர்கள் யாழ். மாவட்டத்தில் இல்லையோ தெரியவில்லை.

எனவே, இவ்வறிக்கைக்கு பதில் அறிக்கை தயாரிப்பதில் நேரத்தைச் செலவு செய்வதை விடுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், பெயருக்காகப் பதவியில் இருக்காது பதவியில் இருந்து பெயரெடுக்குமாறும் உரியவர்களை பணிவாக வேண்டிக் கொள்கிறேன்.

முன்னுள் சாரணன்
கொழும்பு.



## இன்னுஞ் சில இலக்கிய விஷயங்கள்

மேற்படி தலைப்பிலான என் கடிதத்தைப் பிரசுரித்தமைக்கு நன்றி. எனினும் அதில் தாங்கள் நீக்கி விட்ட சில பகுதிகளை விட்டிருந்தால் நல்லாயிருக்குமென்று இன்னமுந்தான் படுகிறது...........

நிற்க;

நான் எழுத வந்த விஷயமே வேறு. ‘திசை’ சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதையைப் படித்ததும் திகைத்துப் போனேன். திரு. டானியல் அன்ரனி அவர்கள் எழுதி, முசலில் ‘மல்லிகை’ யிலும் (1982 – ?), பின்னர் அவருடைய ‘வலை’ என்னும் சிறு கதைத் தொகுதியிலும் (1987) இடம்பெற்ற ‘ஒரு வெறும் மனிதனின் மரணம்’ என்ற கதையின் அதே கரு! ஒன்றில் கிறிஸ்தவம்; மற்றதில் இஸ்லாம். அதைவிட, கையாண்ட முறையிலும் அதிக வித்தியாசம் இல்லை. ‘திருட்டு’ என்று நான் சொல்ல வருவதாக எண்ணுதீர்கள். அந்த ‘அருட்டுணர்’விலும் எழுதியிருக்கலாம்; இல்லாமலுமிருக்கலாம். ஆனல் – ? அதற்குப் பரிசைப் பார்த்துக் கொடுத்திருக்கக் கூடாதா? இங்கே தவறு, கதாசிரியரில் அல்ல, தெரிவு செய்தவர்களில் என்றுதான் படுகிறது.

இரத்ன. விக்ன. ராஜ்.
திருநெல்வேலி.

குறிப்பு: கடிதமூலம் இவருடன் தொடர்பு கொண்டோம். இவர் எம்மை வந்து சந்திக்கவோ, கடிதத்திற்குப் பதில் அனுப்பவோ இல்லை. இது, இவர் தன்னைப்பற்றிக் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை அல்ல என்ற எமது சந்தேகத்தை, உறுதிப் படுத்துவதாய் இருக்கிறது. எனினும், அவர் எழுப்பியுள்ள பிரச்சினையின் முக்கியம் கருதி இக்கடிதம் பிரசுரிக்கப்படுகிறது; இது தொடர்பான நடுவர் குழுவின் விளக்கம் 10 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

—ஆர்—


தென்மராட்சி கிழக்கு
தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) - கொடிகாமம்

பதவி வெற்றிடம்:
1. தட்டெழுத்தாளர் பதவி (தமிழ், ஆங்கிலம்)
வயது: 18 தொடக்கம் 40 வரை.

கல்வித் தகமைகள்:
1. க. பொ. த. (சாதாரண கரம்) பரீட்சையில் நான்கு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
2. தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சம்பள அளவுத் திட்டம்:
சம்பள குறியீட்டு இல: 14. 760–25×10-35×5–1185.
இத்துடன் அரசினுல் காலத்துக்கு காலம் அங்கீகரிக்கப்படும் படிகளும் சேர்த்து வழங்கப்படும்.
அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் மேற்கூறிய சம்பளத்திட்டத்தில் பொருத்தமான ஓர் சம்பள எல்லையில் அமர்த்தப்படுவார்கள்.
மேற்கூறப்பட்ட தகமையுடையவர்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பம் பூர்த்தி செய்து

தலைவர், தென்மராட்சி கிழக்கு,
தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், கொடிகாமம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் 6–11–89க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம், கூ. சேவையிலுள்ள,
எஸ். ரட்ணசிங்கம்
பொது முகாமையாளர்.



திசை
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 225/-
அரைவருடம்–ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.



தோழமையுடன் தீபாவளி வாழ்த்துக்கள்

பிறைற் ஹவுஸ்

210, பிரதான சாலை
யாழ்ப்பாணம்.

சென்ற முறை! இந்த இடம் ஞாபகம் இருக்கின்றதா?

○ எம்பாமிங், ○ மலர் வளையங்கள்
○ ஊர்தி வாகனங்கள்

அனைத்தும் ஒரே கூரையின் கீழ்
அங்கும் இங்கும் அலையாமல்
பெற்றுக் கொள்ள —
நிறைவான நிலையம்

— பிறைற் ஹவுஸ் —

உங்கள் கடைசிப் பயணத்தை
நாங்கள் நிறைவாக முடித்து வைக்கின்றோம்.

விளம்பர வடிவமைப்பு:
ஜோ. எகட்டன் செனித் ADS.



PATRICIAN Institutes

தொழினுட்ப பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Computer Programming Course**

PATRICIAN INSTITUTES AND BUSINESS PROMOTORS (PVT) LTD. } JOINT VENTURE

**Word Processing**
Duration—3 Months

**Lotus 1—2—3 Spread Sheet Analysis**
Duration—6 Months
Commence—15-11-89
Week Days Classes— (Theory 2 Practicals)

**Lecturers** — Miss M. Varatharajah - Management Accountant Passed Finalist C.I.M.A. (Lon.)
AND
Mr. R. N. Varendran A. C. A.

**Data Processing and Basic Language**
Duration —6 Months (Weekend Classess)
Commence—04-11-89
Lecturer — Mr. Sundrarajah
B. Sc. (Eng) Hons (U. K.) M.C.S.

Equipment Used—Laser XT/2, XT/3, 386
(I. B. M. Compatibles)
and Apple II Computers

பின்வரும் பயிற்சி நெறிகள் 01-11-89 புதன்கிழமை
காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்

**Diploma Course in Draughtsmanship**
Subjects: (i) Darughtsmanship Including Reinforced Concrete Detailing,
(ii) Building Technology
(iii) Land Surveying (Theory & field work)
(iv) Builders Quantities & Estimating.
Duration—6 Months
CITY AND GUILDS OF LONDON INSTITUTE.

**Quantity Surveying**
Part I (6 Months) Part II (6 Months)

**Electrical Wiring** - மின்சார இணைப்பு
(3 மாதகால பயிற்சி)

**Motor Mechanism** - மோட்டர் மெக்கானிசம்
(6 மாதகால பயிற்சி)

**Motor Winding** - மோட்டர் வைன்டிங்
(4 மாதகால பயிற்சி)

**Arc Welding** - மின் ஒட்டுவேலை
(3 மாதகால பயிற்சி)

**Lathe Operation** - கடைச்சல் இயந்திர இயக்கம்
(3 மாதகால பயிற்சி)

மேற்படி பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.
கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

மேலதிக விபரங்கட்கு,
Registrar,
Patrician Institute of Higher Studies
59, St. Patrick’s Road, Jaffna.



# தீபாவளிச் சிறப்பிதழ்

# தீபாவளிச் சிந்தனை

திசைணியன்

### தீபாவளி என்றால் என்ன?

தீபாவளி என்பது தீபங்களின் வரிசை. தீபங்கள் வரிசை இட, இல்லங்களை அலங்கரித்து கொண்டாடுவதே தீபாவளி. இதுவே சத்தியபாமையைப் படைத்துணையாகக் கொண்டு கண்ணனால் அழிக்கப்பட்ட நரகாசுரன், இறக்குமுன்னர் கண்ணனிடம் விடுத்த இறுதி வேண்டுகோளாகும்.

நரகாசுரன் அவ்வாறு ஏன் வேண்டிக் கொண்டான்?

சாகும்போது அவனுக்கு மெய்யுணர்வு ஏற்பட்டதால், தான் செய்த அசுரத்தனங்களுக்கு பிராயச்சித்தமாக, தான் இறந்த தினத்தை எல்லா மக்களும் மகிழ்ந்து கொண்டாட வேண்டுமென்றும் அப்படிக் கொண்டாடுவோர் நரகம் சேராது மோட்சம் அடைய வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான்.

நமது சமயப் புராணங்கள் கூறும் கதைகள்எல்லாம், அசுரருக்கும் தேவருக்கும் இடையே நடந்த யுத்தங்களாக விபரிக்கப் பட்டுள்ளனவே, அது ஏன்?

சுரர் என்றால் மேலோர்; அறிவு வாய்க்கப்பெற்ற சான்றோர். அசுரர் என்றால் அதற்கு எதிரானவர்கள்; அறிவை மதியாது ஆணவத்தை, சுயநலத்தை முன் நிறுத்தியோர்.

அப்படியென்றால் புராணங்கள் கூறும் அசுர-தேவ யுத்தங்கள் என்பது. அறிவுக்கும் அறியாமைக்கும் இடையே நிகழ்ந்த யுத்தங்கள் என்று சொல்லலாம்தானே?

நிச்சயமாக அப்படிச் சொல்லலாம். உலக இதிகாசங்களில் அநேகமாக இவற்றைக் காணலாம். அறிவுக்கும் அறியாமைக்கும் இடையே ஏற்பட்ட இந்த யுத்தங்கள், இலக்கிய வடிவங்கொண்ட கதைகளாகப் படைத்துக் கொடுக்கப்பட்டபோதே, அவற்றைச் சாதாரண மக்கள் நயக்கவும், அவற்றின் நன்மை-தீமை, நீதி-அநீதிகளைப் புரிந்து கொள்ளவும் செய்தனர்.

ஆனால் இப்புராணக் கதைகளில் வரும் பாத்திரங்களின் குணங்கள், கோலங்கள்-இன்னும் இவற்றை விபரிக்கும் முறைகளில் கையாளப்படும் வித்தியாசங்களுக்கும் காரணம் உண்டா? உதாரணமாக வெட்ட வெட்டத் தழைக்கும் சூரன், இதன் அர்த்தம் என்ன?

முருகனால் வெட்ட வெட்டத் தழைக்கும் சூரன் என்பது; அறிவின் தாக்குதலைத் தாங்க முடியாது, அறியாமையானது மறைந்து கொள்ள எடுக்கும் தோற்றங்களாகும். ஈற்றில் அறிவுக்கே அத்தோற்றங்கள் வாகனமாகிவிடுதலையே —முருகனுக்கு வாகனமாகும் மயில், சேவல்—சூரசங்காரம் காட்டி நிற்கிறது. இவை பழைய கதைகள் என்றாலும் அவ்வக்காலங்களில் அறிவும் அறியாமையும் அதன் குணங்களும் இயங்கும் தளங்களுக்கேற்ப, அதன் பாத்திரங்களும் கோலங்களும் தோற்றம் கொள்கின்றன. இன்றைய உலகு புறரீதியாக அணு ஆயுதத்தளம் என்றும், அகரீதியாக ராஜதந்திரம் என்றும், சதி உளவுத்தளம் என்றும் இயங்குவதுபோல அன்றைய புராணப் பாத்திரங்கள் புற அக சூக்கும அறிவுத் தளங்களினதும் அவற்றுக்குரிய தமஸ், ரஜஸ், சாத்வீக என்னும் குணக் கலவைகளினதும் வார்ப்புகளாக தோற்றங்கொண்டு வெளிப்பட்டன.

வேறு உதாரணங்கள் காட்ட முடியுமா?

இராமாயணத்தில் வரும் இராவணன், கும்பகர்ணன், விபூஷணன் ஆகிய மூன்று பாத்திரங்களும் அறிவின் தளங்களையும் (தரங்கள்) அவற்றின் குணங்களையும் காட்டி நிற்கின்றன எனலாம். அறிவிழந்த வெற்றுச் செயல் வேகம் (ரஜஸ்) ராவணன். அறிவும் அறியாமையும் மாறிச் செயல்படும் மந்த குணம் (தமஸ்) கும்பகர்ணன். சத்திய அறிவேறிய குணம் (சாத்வீகம்) விபூஷணன்.

அப்படியானால் இன்றும் இந்த அறிவும்—அறியாமைக்குமுரிய அசுர-தேவ யுத்தங்கள் தொடர்கின்றன என்று சொன்னால் அது பிழையாகாது, இல்லையா?

நிச்சயமாகச் சொல்லலாம். நவீன புராணங்களாக ஜோர்ஜ் ஓர்வெல் (George Orwell) எழுதிய ''1984''; ''மிருகப் பண்ணை'' (Animal Farm), அல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxly) எழுதிய ''மகத்தான புதிய உலகு'' (The Brave New World) போன்றவற்றைக் காட்டலாம். ஹிட்லர், ஸ்ரலின் போன்றவர்களின் அசுரப் போக்குகளையும் அதற்கெதிராகப் போராடும் அறிவுக்குரிய சக்திகளை முதல் இரண்டு நூல்களிலும், வெறும் புறவிஞ்ஞானம் என்னும் அசுரனின் வளர்ச்சிப் பிடியில் சிக்குண்டு தவிக்கும் மனித குலத்தைப் பின்னதிலும் காணலாம். நீங்கள் சொல்வதுபோல் இன்று இலங்கையிலும் உலகிலும் இதே போராட்டங்கள் பல தள-(தர) வித்தியாசங்களில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

இதற்கு முடிவே இல்லையா?

முடிவு ஏற்பட்டால் வளர்ச்சி நின்று விட்டதென்றே அர்த்தம். ஒவ்வொரு தள அறிவுப் பாய்ச்சலிலும் அதற்குரிய அறியாமையும் சேர்ந்து எழுகிறது. அதுவே இயக்கவியல்—வளர்ச்சி. அசுர—தேவ, அறிவு-அறியாமை, ஆண்டான்—அடிமை, பிரபுத்துவ—முதலாளித்துவ, முதலாளி வர்க்கம்-தொழிலாளி வர்க்கம் என்று காலத்திற்கேற்ற நாமம் தரித்து இது நடந்து கொண்டே இருக்கிறது □

## இருளும் ஒளியும்

இருளை அரக்கன் என்பதா? அரக்கனை இருள் என்பதா?
அரக்கனே இருளாக அடர்ந்து கௌவ
அட்டதிக்குப் பாலகரும் திக்குற்று வீழ
எங்கணும் இருளின் ஆட்சி.

ஒளியின்றிப் பார்வை இல்லை எனினும்
இருளையும் துழாவும் கண்ணன் ஒருவன் இருப்பானேயாகில்
அனைவர்க்கும் ஒளியாவானே?
ஆதலால் அரக்கன் சட்டம் ஒன்று இட்டான்
இருள் பொது விதியாகுமாறு அனைவர்
கண்களையும் புண் செய்க என்றான்.

இட்டது சட்டமாக இருள்பெற்ற அசுரரெல்லாம்
கோல் கொண்டுதிரியலானார் கண்களைக் குருடு செய்ய
புண்ணுண்ட கண்ணாரைக் கண்ட சகமனிதர்கள் என்ன
வானார்?
கண்ணோக்கு அற்றார் கருத்திலாக் குருடர் ஆனார்.

'கண்ணற்றுப் போனார் எல்லாம்' செய்தியை அரக்கன்
கேட்டான்.

இடிமுழக்கென நகைக்கும் போதில்
திக்குகள் அதிர்ந்ததாலே மின்னல் தெறிக்கலாம் என்றஞ்சி
கண்களை ஒருகால் இறுக்கியே மூடலானான்.

அரக்கனும் கண்ணைமூடும் காலம் வந்துறுகையில்
பெரும் பிறப்பொன்று நேர்வதுண்டு
ஆதலால் கண்ணன் வந்தான்
அகக் கண்ணிலே ஒளி பெருக்கி.

அகத்திலே ஒளிப்பெருக்கின் திரட்சியைக் கூர்மைசெய்து
நோக்கிய நோக்கில் நுழைந்த பேர்சக்தி
ஈட்டியாய்ப் பாய்ந்தது
அரக்கனின் ஈரற்குலை பிளந்திற்றது.

இருளதன் பிளவினூடே நகைக்கீற்றுகள் என்னத்
தீபங்கள் ஏந்திவந்தார் அட்டதிக்கின் பாலகர்கள்;
சாகும்போது அரக்கன் கேட்ட வரம் தீபாவளியாச்சு.

குதூகலம் கொண்டாட்டம்
கோலாகலமயம் உலகென்றார்த்தார்
அரக்கனின் வரத்தின் பேரும்
சடங்கினுள் மூழ்கிப் போனார்
அகக் கண்ணனை மறந்தே போனார்.

இற்றைநாள் வரையும் வெற்றுடம்பினைப் போஷிக்கின்றார்
இதற்கப்பால் என்ன கண்டார்?
அரக்கன் விட்டதே தொடருகின்றார்.

உலகையே மேயும் கண்கள் உறங்கையில்
கனவையே மேயும் மனமோ காலையில்மீண்டும்
பழசையே பிசைந்துதின்னும்
பழகிய தடத்தில்ஊரும் வெற்றுச் சடங்கெனும் வாழ்வில்
அகக் கண்ணனை யார் நினைந்தார்?

கண்ணா! அரக்கன் வாய்விட்டுச் சிரித்தான்
கோர்வை வெடியினைப் போல
'சடங்கினில் வாழும் நானே சர்வ வல்லமை உடையேன்
வரங்களும் தருவேன்' என்றான்.
பட்டியல் வாசிக்கின்றான்!
'புத்தாடை தருவேன் புலால் படைப்பேன்
இரவைப் பகல்செய்யும் மத்தாப்பு, வாணங்கள் ......'

இடை மறித்தொருவன் கேட்டான்
'இவைக்கெலாம் விலையென்ன எங்கள் அகக்கண்ணா?'
அரக்கனோர் சமிக்ஞை செய்தான்
அகக் குருடர்கள் கும்பல் சேர்ந்து
கேள்வியை வளைத்துப் போட்டு கும்மினார்
கும்பலின் கீழாக அவன் மெல்ல நழுவினான்
கேள்விக்கு கிடைக்காத விடையைப் போல.

கேள்வியை மறந்துபோனார் அகக்
கண்ணனை மறந்தோரெல்லாம்
அரக்கனைத் தொழுதுநின்றார் வரங்களை வாங்கிச் செல்ல
ஆயினும் கேள்வி ஓர்நாள் அகக் கண்ணினைத் திறக்கும்
போது
சடங்கினுள் வாழும் அரக்கிருள் கிழிந்தே போகும்
அகத்தீபம் அங்கு சுடரும்.

— சு. வில்வரத்தினம் □

## ○ ஞாயிறு ○

ஒளியே, நீ யார்? ஞாயிற்றின் மகளா? அன்று. நீ ஞாயிற்றின் உயிர். அதன் தெய்வம்.

ஞாயிற்றின் இடத்தே நின்னைத்தான் புகழ்கிறோம். ஞாயிற்றின் வடிவம் உடல்; நீ உயிர். ஒளியே, நீ எப்போது தோன்றினாய்? நின்னை யாவர் படைத்தனர்? ஒளியே, நீ யார்? உனதியல்பு யாது?

நீ அறிவின் மகள் போலும்! அறிவுதான் தூங்கிக்கிடக்கும். தெளிவு நீ போலும்! அறிவின் உடல் போலும்! ஒளியே, நினக்கு வான வெளி எத்தனை நாட் பழக்கம்? உனக்கு அதனிடத்தேஇவ்வகைப்பட்ட அன்பு யாது பற்றியது? அதனுடன் நீ எப்படி இரண்டறக் கலக்கின்றாய்? உங்களை எல்லாம் படைத்தவள் வித்தைக்காரி. அவள் மோஹினி, மாயக்காரி; அவளைத் தொழுகிறோம். ஒளியே நீ வாழ்க.

தீ தான் வீரத்தெய்வம். தீ தான் ஞாயிறு.

தீயின் இயல்பே ஒளி. தீ எரிக. அதனிடத்தே நெய் பொழிகின்றோம். தீ எரிக. அதனிடத்தே தசை பொழிகின்றோம். தீ எரிக. அதனிடத்தே செந்நீர் பொழிகின்றோம். தீ எரிக. அதற்கு வேள்வி செய்கின்றோம். தீ எரிக.

(15ஆம் பக்கம் பார்க்க)

தீபாவளிச் சிறப்பிதழ் தீபாவளிச் சிறப்பிதழ் தீபாவளிச் சிறப்பிதழ்

# ஒரு பூதத்தின் அழிவு

## ஆபிரிக்க நாட்டுப்புறக் கதை

தென் ஆபிரிக்கக் காட்டில் ஒருமலைக்குகை இருந்தது. அதிலே தனது பிள்ளைகளுடன் ஒரு பெண் வாழ்ந்துவந்தாள். தன்பிள்ளைகளுக்கு உணவு தேடப் போகையில் மிருகங்களினால் தொந்தரவு ஏற்படாமல் காவலாயிருக்குமாறு ஒரு காட்டு முயலைக் குகைவாசலில் விட்டு விட்டுப் போவாள். அதுவும் மிருகங்களுக்கு அஞ்சாமல் காவல் புரியும். அப்படி ஒரு நாள் அவள் சென்றபோது அந்த மலையில் வாழும் பூதம் ஒன்று அங்கே வந்ததைக் கண்ட முயலோ என்றுமில்லாதவாறு தன் உயிருக்கு அஞ்சி ஓடியது.

ஓடிப்போன முயல் இடை வழியில் திரும்பி 'என்னதான் நடக்கிறது பார்ப்போம்' என்று நின்று பார்த்தபோது, மலைப்பூதம் முயலைப் பார்த்து "இவை யாருடைய பிள்ளைகள்?" எனக் கேட்டது. "அந்தப் பிள்ளைகள் ஒரு பெண்ணினுடையவை" என்றது முயல். 'ஹா' என்று பெரிய வாயைப் பிளந்தபடி "நான் இவர்களை எல்லாம்விழுங்கப்போகிறேன்" என்று கூறியவாறு, அந்தப் பிள்ளைகளை ஒரேயடியாகவிழுங்கியது அந்த மலைப்பூதம்.

அது போனபின்பு குகைக்கு வந்த பெண் "எனது பிள்ளைகள் எங்கே?" என்று முயலைக் கூப்பிட்டுக் கேட்டாள். கண்ணீரும் கம்பலையுமாக வந்த முயல் பிள்ளைகளைப் பூதம் விழுங்கிய கதையைச் சொல்லி பூதம் போகும் பாதையையும் காட்டியது. முயலை ஏதும் பழி கூறாமல் ஒரு கட்டு சுள்ளி விறகுகளையும் சேகரித்துக் கொண்டு, ஒரு தீமூட்டும் கல்லையும், கத்தி ஒன்றையும் எடுத்துக் கொண்டு பூதத்தைப் பின் தொடர்ந்து சென்றாள் அந்தப் பெண். பூதம், தான் ஆட்சி செய்யும் காட்டுப் பிரஜைகளாகிய விலங்குகளின் குறைகளைக் கேட்பதற்கென ஒரு சின்னக் குன்றின் மீது அமர்ந்து கொண்டது.

□ அநுசுயா □

"பிரதான பரிபாலகரே" என்று பூதத்தை நோக்கி அந்தப் பெண் குரல் கொடுத்தாள். "என்னுடைய பிள்ளைகள்எங்கே?" என்றுகேட்டாள். பூதமோ தன்காதருகே கையை வைத்து ஒன்றும் கேட்காத பாவனையோடு "ஒன்றும் தெளிவாகக் கேட்கவில்லை. கிட்ட வந்து சொல்லு" என்றது. பூதத்தின் முன்போய் நின்றாள் பெண். உடனே விறகுகள், கத்தி, கல் இவற்றோடு சேர்த்தே அவளைத்தூக்கி வாய்க்குள் போட்டது பூதம்.

பூதத்தின் குகை போன்ற வயிற்றினுள் தனது பிள்ளைகள் உயிரோடிருப்பதையும், அவர்கள் பசியால் வாடியிருப்பதையும் கண்ட பெண், மிகக் கவலையுற்றாள். தனது தீமூட்டும் கல்லை எடுத்தாள். சுள்ளிகளையும் எடுத்தாள். தீயை மூட்டியபின்னால், கத்தியை எடுத்து அந்தப் பூதத்தின் முதுகெலும்பினுள்ளிருக்கும் குருத்தை வெட்டி எடுத்து, தீயில் வாட்டி, பிள்ளைகளுக்குத் தின்னக் கொடுத்தாள். அங்கே தன்னுடைய பிள்ளைகளோடு வேறு மக்களும், சில மாடுகளும், சில நாய்களும் இருப்பதைக் கண்டாள். மனிதரும் 'தமக்கும் பசிக்கிறது' என்றார்கள். மீண்டும் முதுகெலும்பின் கொழுப்புப் பாகங்களை அரிந்து தீயில் வாட்டிக் கொடுத்தாள். எல்லோருக்கும் திருப்தி. இப்படியே பூதத்தின் முதுகெலும்பின் உள்ளே தோண்டத் தோண்ட பூதத்தின் முதுகெலும்பு கோறை விழத் தொடங்கியது.

பூதத்துக்கோ வலிபொறுக்க வில்லை. நோவெடுத்துக் குழறியது. மலையெல்லாம் பூதத்தின் எதிரொலி எழுந்து பெருங் கதறலாய்க் கேட்க, காட்டின் பிரஜைகளாகிய விலங்குகள் ஓடிவந்தன. அவற்றுள் தனது பரிபாலகர் குழுவை அழைத்த பூதம், தனது வலிக்குத் தக்க பரிகாரம் காணுமாறு சொன்னது. விலங்குகள் ஒன்றை ஒன்று பார்த்து விழித்தபடி எட்டவே நின்றபடி ஒரு குரங்கை அழைத்து 'என்னவென்று பார்' என்றன. ஆனால் அங்கு நின்ற குரங்கோ வேறு வழியின்றி ஆற்றிலும் சேற்றிலும் அடித்துப் புரண்டது. பூதமோ வலிபொறுக்க முடியாமல் கதறியது, குழறியது. குழறிக் குழறியே ஒரேயடியாகச் செத்துப் போனது. "செத்தா போனது? பார்த்துவா" என்று குரங்கை மீண்டும் ஏவின விலங்குகள். குரங்கோ எட்டிப் பார்த்து நடுங்கியவாறே கொப்பில் தாவி இப்படிச் சொன்னது. "மலைகளில் வசிப்போர் உச்சிக்கு ஏறச் சிக்கெடுப்பீர். தரையில் வாழ்வோர் வெளியில் ஓர் எல்லை வரைக்கும் ஓடிக் களைப்பீர். மரத்துக்கு மரம் தொங்கித் தொங்கியே காட்டின் தொங்கலுக்கு நான் தாவுகிறேன் பார்" என்று தாவியே போனது. ஒரு கணம் தான். செத்த மாட்டில் உண்ணி கழன்றது போல எல்லா மிருகங்களும் ஓடிப் போயின. பூதம் மட்டும் செத்துப் புரண்டு கிடந்தது மலையில்.

செத்துப்போன பூதத்தின் வயிற்றைக் கத்தியால் கிழித்தவாறு வெளியேறி வந்தாள் பெண். சூரியவெளிச்சம் தெரிந்தது. பூதத்தின் இருண்ட குகையை விட்டு பிள்ளைகளும் வந்தனர். மனிதர்களும் வந்தார்கள்; மாடுகள் வந்தன; நாய்களும் வந்தன.

'உம்பா உம்பா' எனக்கு யார் உதவியது ? மாடு கேட்டது. வௌ வௌ வொ, எனக்கு உதவியது யார் ? நாய் கேட்டது. த்சோ த்சோ எனக்கு உதவியது யார் ? மனிதன் கேட்டான். "இதோ இவள் தான்! எங்கள் தாய்! இந்தப் பெண்தான்." என்று பிள்ளைகள் சொன்னார்கள். "அப்படியென்றால் அவளை நானே திருமணம் செய்கிறேன்" என்றான் மனிதன். "இவளேதான் இனி எங்கள் தலைவி" என்றனர் மக்கள். "அவளது வயலை நாமே உழுவோம்; பாலும் தருவோம்" என்றன மாடுகள். "நானும் எனது நண்பரும் வேட்டையாடிவருவோம்; அவளின் வீட்டைக் காப்போம்" என்றது நாய். சொன்னபடி எல்லாம் செய்தன. அவளுடைய சந்ததி மேலும் மேலும் பெருகியது. ஆற்றல் மிக்க அந்தச் சந்ததிகளின் உழைப்பால் பாண்டு என்னும் தேசம் விரிந்தது. □

# மூன்றுவது கண்

ஜா. வாசுதேவன்

இன்று நாம் அறிவியலின் துணை கொண்டு அறிவுக் கெட்டாதவற்றை அறிய முயல்கிறோம். ஆனால் நம் மூதாதையர்கள் பலவற்றை தமது கூர்த்த மதி ஞானத்தால் உணர்ந்து அறிவித்தார்கள்.

மூன்றுவது கண் என்று ஒன்று இருப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த மூன்றுவது கண் மனித மூளையிலுள்ள ஒரு சுரப்பி என்று அறிவியலார் கருதுகிறார்கள். அது பைன் மர கூம்புவடிவில் இருக்கிறதாம்.

இந்த மூன்றுவது கண்; இன்னொரு மனிதனுடைய எண்ணங்களையும் காணும் ஆற்றல் பெற்றது. மனிதனே எண்ணங்களின் பிரதிபலிப்புத்தான்.

சில பெரியவர்கள் வரும் போது அவர்களுடன் பெருந்தன்மையும் வருவதாக நாம் உணர்கிறோம். அவர்களைக் காணும்போது நம்மை அறியாமலே நம் உள்ளத்தில் மரியாதை எழுகிறது.

வேறு சிலர் வரும் போது கலகலப்பும் சிரிப்பும்கூட வருவதை உணர்கிறோம். நாமும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆனால் வேறு சிலர் வரும் போது முகம் சுழிக்கிறோம். அவர்கள் வெறுப்பை சுமந்து வருவதையும் அறிகிறோம்.

### இது எப்படி நிகழ்கிறது?

அவரவர் எண்ணங்களின் பிரதிபலிப்பாகவே அவரவர் தோற்றம் அமைகிறது. எனவே, அவர்களைக் காணும் போது அவர்களது எண்ணமும் நம்மை வந்தடைந்து விடுகிறது.

மனிதரிடமிருந்து எண்ண அலைகளால் சில கதிர்கள் பரவுகின்றன என்றும் மூளையை ஊடுருவும் நியூட்ரினோ என்ற கதிர்கள் தான் எண்ண ஆற்றலைச் சுமப்பவை என்றும் இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது.

மனிதர்களைச் சுற்றி ஒரு வகை ஒளி இருக்கிறதென்றும், அந்த ஒளிக்குச் சிவப்பு, ஊதா, கறுப்பு போன்ற நிறங்களிருப்பதாகவும், அவை அவரவர் பண்புகளுக்கும், உணர்ச்சிகளுக்கும், ஏற்பமாறுபாடுவதாயும் இன்றைய மனோதத்துவ நிபுணர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

சில சமயங்களில் நாம் ஒருவரை முதல் முதலாகச் சந்திக்கிறோம். சந்தித்த உடனேயே அவர் நல்லவரா, தீயவரா என்பதை முடிவு செய்து விடுகிறோமே, அது எப்படி?

நமது எண்ண அலைகளும் வருபவரது எண்ண அலைகளும் ஒத்துப் போகுமிடத்து அவரை நாம்நல்லவராகக் கருதுகிறோம். இருவரது எண்ண அலைகளும் மாறுபடுமானல் கெட்டவராகக் கருதுகிறோம்.

ஆக எண்ண அலைகள் நம் மையுமறியாமல் பரவுகின்றன

## இப்படி ஒன்று இருப்பது உண்மையா?

என்பது தெளிவு. மேலும் மனத்தில் எண்ண அலைகள் பிரபஞ்ச அறிவுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. இந்தப் பிரபஞ்ச அறிவு எங்கே இருக்கிறது என்று விஞ்ஞான ரீதியில் கூற இயலவில்லை. ஆனால் நம் எண்ணங்கள் மூன்றுவது கண்ணின் வாயிலாகப் பிரபஞ்ச அறிவுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன என்பது மட்டும் விளங்குகிறது.

மேலே சொன்ன அந்த அறிவுடன் நமது ஞானிகள் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று எண்ண இடமிருக்கிறது. சிவபெருமானை முக்கண்ணனாகக் குறிப்பிடுவதை இங்கே கவனிக்க வேண்டும்.

"அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்" என்ற திருமந்திரத் தொடரில் கூறப்படும் 'அகத்தில் கண்' இம் மூன்றுவது கண்ணு என்பதும் சிந்தனைக்குரியது.

திபேத்தில் மூன்றுவது கண் பெற்றுப் பிரபஞ்ச அறிவுடன் தொடர்பு கொண்ட பல லாமாக்கள் இருந்தது பற்றித் தெரியவந்திருக்கிறது.

ஒரு திபேத்தியலாமா தமது சுய சரிதையிலே தமது மூன்றுவது கண் அனுபவத்தைத் தெளிவாக விவரித்திருக்கிறார். 'ஒவ்வொருவருக்கும் இம் மூன்றுவது கண் உண்டென்றும் பயிற்சியின் மூலம் அதை வளர்த்துக் கொள்ளலாமென்றும்அவர் குறிப்பிடுகிறார்.

நம் எல்லோருக்குமே காந்த ஒளி உண்டு. இது உடலைச் சுற்றியிருக்கும் ஒரு வர்ணக் கோடு போன்றது. இதைக்காணும் வல்லமை பெற்றவர்கள் இவ்வண்ணங்களின் வேறுபாட்

(15ஆம் பக்கம் பார்க்க)

அன்பர்களுக்கு எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்

Colombo Studio

SPECIALISTS IN BLOCKS, PROCESS, COMMERCIAL ARTS, STICKERS, RUBBER STAMPS, PRINTINGS. Etc.

ESTABLISHED NAME FOR: PHOTOGRAPHY, COLOR PROCESSING, BLOCK MAKING, COMMERCIAL DESIGNING, STICKERS & RUBBER STAMPS.

Best Compliments from

NEWTONE ELECTRICALS

founded in 1951

Importers, Electrical Contractors

Dealers: Distributors of Electrical Goods

Manufacturers of NEI Electric Water Pumps

141, 143, Stanley Road, Jaffna.
Tel : 23016

Branch: 440, 442, Hospital Road, Jaffna.
Tel : 23724

# அத்தருணம் வந்துவிட்டது:

## சுவாமி லோகேஷ்வரானந்தா

கல்கத்தாவிலுள்ள ராமகிருஷ்ண மடத்தில் கலாசாரக் கழகத்தின் தலைவரான சுவாமி லோகேஷ்வரானந்தா, ரஷ்ய சத்திய சமயத் திருச்சபையின் விருந்தினராகக் கடந்த கோடையில் நடைபெற்ற ரஷ்ய சத்திய சமயத் திருச்சபையின் ஆயிரமாவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் அதன் விருந்தினராகக் கலந்து கொண்டார். லித்தரதுர்னயா கஸெத்தாவின் விமர்சகர் மமலாத்ஜேவுக்கு அவர் அளித்த பேட்டியின் சுருக்கத்தை இங்கு வழங்குகிறோம்.

**கேள்வி:** சுவாமிஜி அவர்களே, ரஷ்ய சத்திய சமயத் திருச்சபையின் ஆயிரமாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களின் போது திருப்பணி நடைபெற்ற கீவ் - பெச் செரிலாவ்ரா குகைகளில் உங்களைக் கண்டேன். இத்தகைய குகைகளும், இறந்த துறவிகளின் உடல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் ஆலயங்களும் வேறுவிதமான சடங்குகளுக்கு பழக்கப்பட்டிருக்கும் உங்களுக்கு விநோதமாகத் தோன்றியிருக்கும். அந்த இடத்தில் அக்காட்சி, எமது மக்களின் இறை நம்பிக்கை உள்ளவர்களின் உள்ளங்களில் எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா?

**பதில்:** மதச் சடங்குகளில் நான் அதிக அக்கறை செலுத்துவதில்லை. ஆனால் என் வாழ்நாளில் இதுபோன்ற எதையும் நான் பார்த்ததே இல்லை. இது குறித்துத் தீர்ப்புக் கூறுவதும் என் வேலையல்ல. இதை இயற்கையானது என்று மக்கள் கருதுவார்களேயானால் இது இயற்கையானதுதான். குகைகளில் இருந்தபோது அவ்வப்போது எனக்கு நானே பின்வருமாறு சொல்லிக் கொண்டேன். "கடந்த காலங்களின் மகத்தான மனிதர்கள் இங்கு வாழ்ந்து மடிந்தனர். அவர்கள் இறைவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே வாழ்ந்து மடிந்தனர்." அப்புனிதர்களைப் பற்றிச் சிந்திக்கும் போது ஒரு துறவியான எனக்கே உத்வேகம் பிறந்தது. புனிதமான சூழ்நிலையை உணர்ந்தேன். அச்சவப் பெட்டிகளைத் தொட்டு வணங்கும்போது அவை உருவகப்படுத்தும் புனிதத் தன்மையுடன் தொடர்பு கொள்ளும் உணர்வையும் பெற்றேன்.

**கேள்வி:** மதச் சடங்குகளில் தாங்கள் அதிக அக்கறை செலுத்துவதில்லை என்று கூறும்போது, எமது தெய்வீக சேவையின் பாரம்பரியமான சடங்குகளையே நீங்கள் அர்த்தப்படுத்துகிறீர்களா?

**பதில்:** ஆம், உங்களது சடங்குகளின் பகட்டும் படாடோபமும் எனக்கு விநோதமாகத் தோன்றுகிறது. ஒருவருடைய மனநிலையை மேம்படுத்துவதற்கு அது உதவுகிறது என்று நான் கருதவில்லை. எது எப்படியாயினும் இது எங்களுக்குப் பழக்க மில்லாத ஒன்றாகும். தனிப்பட்ட முறையில் இவ்வளவு பகட்டாரவாரங்களை நான் விரும்பவில்லை. அடக்கமும் ஆரவாரமுமின்றி இறையுணர்வை வெளிப்படுத்துவது தான் மக்களுடைய உணர்வின் மீது பலமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன்.

**கேள்வி:** இந்த ஆயிரம் ஆண்டு நெடுகிலும் அப் "படாடோபம்" எமது நாட்டவர் பலரின் சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஊட்டி வளர்த்து வந்துள்ளது. அதில் அவர்கள் ஆழ்ந்த அர்த்தத்தையும் அழகையும் காண்கிறனர். சத்திய சமயத்தில் நம்பிக்கையுள்ள ஒருவரின் மனப்பாங்கை இச் சடங்குகள் ஓரளவிற்கு உருவாக்கவில்லையா?

**பதில்:** உருவாக்கியிருக்கலாம். ஆனால் காலம் மாறி விட்டது. இன்றுள்ள உங்களது இளம் மக்களை இத்தகைய புனிதர்கள் என்றழைக்கிறோம். ஆடம்பரம் கவரும் என்று நான் கருதவில்லை. இளம் மக்கள் அறிவுக் கூர்மையுடையவர்கள். திருவிழாக்கள் மக்களை மிரளச் செய்கின்றன. மக்கள் தூய்மையான மத உணர்வுகளை விரும்புகின்றனரேயன்றி படாடோபங்களை அல்ல

**கேள்வி:** கடவுளையும் மதத்தையும் பற்றிய உங்களது சொந்தக் கருத்திலிருந்து இதைக் கூறுகிறீர்கள் என்று கருதுகிறேன்,

**பதில்:** ஒவ்வொரு மனிதனும் தெய்வீக உணர்வுள்ளவன் தான். ஆனால் சிலரிடம் இக்குணங்கள் சற்று அதிகமாக உள்ளன. இன்னும் சிலரிடத்தில் குறைவாக உள்ளன. இத்தகைய போற்றத்தகு குணநலன்கள் நிரம்பப் பெற்ற ஒருவர் நம்மிடையே தோன்றும்போது அவரைக் கண்டு நாம் வணங்குகிறோம். அவரை ஒரு முன் மாதிரியானவராக, லட்சிய புருஷராக, நமது வாழ்வை உய்விக்க வந்தவராகக் கருதுகிறோம். நாம் ஏன் அவ்வாறு செய்கிறோம். நமது சொந்த தார்மீக குணங்களை வளர்த்துக் கொள்ள நாம் முயலுகிறோம். இத்தகையவர்களிடமிருந்து நாம் உத்வேகம் பெறுகிறோம். அப்போது நமக்கு நாமே பின்வருமாறு கூறிக் கொள்கிறோம்: "அவர் முழு நிறைவடைந்திருக்கிறார் என்றால் என்னாலும் அவ்வாறே ஆகமுடியும்.!" தார்மீக வளர்ச்சி மற்றும் செம்மையான அறநெறியின் உயர் இலக்குகளை எய்த ஒருவர் விருப்பம் கொள்ள வேண்டும்.

மக்களின் தார்மிக வளர்ச்சியில் நீங்கள் போதிய கவனம் செலுத்தவில்லை. இறுதியாக இப்போது தார்மீகச் செம்மையைப் பற்றி விவாதிக்கத் தொடங்கியிருக்கிறீர்கள். உங்கள் நாட்டில் இப்போது பிரகடனம் செய்யப்பட்டுள்ள மத சுதந்திரத்தைத் திருச்சபை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். இந்த நிலைமை திருச்சபைக்கு ஒரு சவாலாகும். தார்மீகச் செம்மை பெறுவது அவசியம்.

**கேள்வி:** செம்மையான தார்மீக நெறிகளென்பது மிகப் பழையதாயினும், ஒரு சிலரே அதை எய்தக் கூடியவர்களாக இருக்கின்றனர். அத்தகையவர்களை நாம் இந்த மாறுத உலகில், பொய்மையும், திருட்டும், குற்றங்களும் மலிந்து கிடக்கும் இவ்வுலகில் செம்மையான தார்மீக நெறிகளை ஏன் தேடுகிறோம்? துறவிகளால் மட்டுமே இக் கருத்துக்களைக் கடைப்பிடிக்க முடியுமா? நிஜ வாழ்க்கையில் இவற்றை நடைமுறைப்படுத்துவது முடியாதா?

**பதில்:** அப்படியல்ல! எந்தச் சமுதாயத்திலும் செம்மை நிலையடையக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். உதாரணமாக ஏழையாக இருக்கக் கூடிய ஒருவன் பிறருடைய பொருளைத் திருடாதிருக்கலாம். ஏழ்மையும் குற்றமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்று என்னால் நம்பமுடியாது. இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகள்தாம். ஆனால் குற்றங்களின் எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கக்கூடிய நாடாக அது இல்லை. வளர்ச்சியடைந்த நாடுகளில்தான் குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. உதாரணமாக, உண்மை வழியில் நடப்பதாக எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன். ஆகவே நான் எப்போதும் உண்மையானவனாக இருப்பேன். நான் திருடமாட்டேன். ஏனெனில் நான் உண்மையானவன். பொலிசைக் கண்டு பயந்தோ அல்லது என் உண்மைக்கு வெகுமதி கிடைக்கும் என்று நினைத்தோ நான் அவ்வாறு செய்வதில்லை. நான் உண்மையானவன்; ஏனெனில் எனக்கு உண்மையில் நம்பிக்கையிருக்கிறது. உண்மையே மிகச் சிறந்த கொள்கையென்று ஒரு பழஞ்சொல் இருக்கிறது. ஆனால் மகாத்மாகாந்தி அதை, உண்மைதான் ஒரே கொள்கையென்று திருத்தினார்.

**கேள்வி:** ரஷ்யாவிலிருந்துதான் நம்பிக்கையொளி வருகிறது என்று சுவாமி விவேகானந்தர் கூறியதை நாம் அடிக்கடி நினைவு கூருகிறோம். அவருடைய மனதில் இருந்த கருத்து என்ன?

**பதில்:** கடந்த நூற்றாண்டின் 80 களில் சுவாமி விவேகானந்தர், ரஷ்யாவே உலகுக்கு வழிகாட்ட முடியும் என்று சொன்னார். அவருடைய உள்ளக் கிடக்கைகள் என்னவாக இருந்தன என்று கூறுவது, இப்போது கடினம். முதலில் ரஷ்யா விஞ்ஞானத்திலும் இஞ்சினீயரிங்கிலும் உயர் வளர்ச்சி மட்டத்தை எய்தும், பின்னர் முனைப்பான அறநெறி வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பும் என்று, அவர் எப்படியோ அறிந்திருந்தார் என்று கருதுகிறேன். சுவாமி விவேகானந்தர் முன்னறிந்து கூறிய அந்தத் தருணம் இப்போது சோவியத் யூனியனில் வந்து விட்டது என்றே எனக்குத் தோன்றுகிறது. இக் கடினமான பணியில் நீங்கள் விடா முயற்சியுடன் பாடுபட வேண்டும் என்று விரும்புகிறேன்.

நன்றி : புதுப்புனல் (ஜூன் 89) □

அன்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவர்க்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்

தங்க நகை வியாபாரிகள்

அருணா ஜுவல்லறி

177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள் !

கே. கே. வி.
யாழ்ப்பாணம் நகை மாளிகை

தங்க வைர நகை வியாபாரம்
82/4, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 - 22362

தங்கப் பவுண் வைர நகைகள்
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

K. K. V. Jaffna Jewel House
82/4, Kasthuriar Road, JAFFNA.


எங்கள் வாடிக்கையாளர்க்கு
தீபாவளி
நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறோம்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
பொருட்களைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

K. இராசலிங்கம்

இல. 196, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

**தீபாவளிச் சிறப்பிதழ்**



## மனித அடிப்படை உரிமைகளும்

# மாபெரும் சமயங்களும்

தவத்திரு
**லோ. வ. இராயப்பு**
(மா. ம. தி.)
இறையியல் கலாநிதி

"எங்கே நிம்மதி! எங்கே நிம்மதி! அங்கே எனக்கோர் இடம் வேண்டும்" எனத் தவித்து வாழும் இன்றைய மக்கள் மத்தியில் அவர்களது நாட்டிலும், ஏன் அனைத்துலகிலுமே அமைதி நிலை நாட்டப்பட வேண்டுமாகில், முதற்கண் மனித அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட்டுப் பேணிக் காக்கப்பட வேண்டும். இன்றைய உலகின் நிலையை நாம் சிறிது ஆழ்ந்து சிந்திப்போமாகில், நாம் அச்சமும் கவலையுமடையாதிருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் குழப்பமும் கொந்தளிப்பும். அரசுகள் மத்தியில் அமைதியில்லை. தங்கள் அயல்நாடுகளையே சந்தேகக் கண்கொண்டுதான் பார்க்கின்றன. இத்தகைய நிலைமாறி, மக்கள் அமைதியுடனும் மன நிம்மதியுடனும் வாழ வேண்டுமாகில், மனித உரிமைகள் வெறும் பிரகடன நிலையிலிருந்து செயல்களாக மாற வேண்டுமெனச்,சிறப்பாகஇளைஞர் இன்று உறுதி கொண்டுள்ளார்களென, முன்பு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலராகக் கடமையாற்றிய திரு.யு தான்ற்(U Thant) அவர்கள் கூறியுள்ளார்.

மனித அடிப்படை உரிமைகள் பற்றிய மாபெரும் சாசனம் இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன் பிரகடனம் செய்யப்பட்டாலும், இன்று அதை ஏறத்தாழ 150 நாடுகள் ஏற்றுக்கொண்ட பொழுதிலும், இம் மனித உரிமைகள் செயலளவில் முழுமையாகப் பாதுகாக்கப்படவில்லை என, ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதையப் பொதுச் செயலர் திரு. ஹவியேர் பெறேஸ் டெ குவெயார் (Javier Perez de Cuellar) மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு நாளை ஒட்டி அனுப்பிய தனது செய்தியில் கவலை தெரிவித்துள்ளார். எனவே தான் இந்த மனித உரிமைகள் உலகில் மென்மேலும் அறியப்பட வேண்டுமென்றும் தனது செய்தியில் அவர் ஆசிக்கின்றார்.

### மனித உரிமைகளும் மாபெரும் சமயங்களும்

ஐக்கிய சபைகளின் மனித உரிமைகள் பற்றிய மாபெரும் சாசனம், மக்கள் அனைவரும் சமமானவர்கள். அவர்கள் நீதியோடு நடத்தப்படவேண்டும் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த உண்மை கொள்கையளவில் உலகின் எல்லா மாபெரும் சமயங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நீதியென்னும் மனித நற்பண்பின் முக்கியத்துவத்தை எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்டு அதைப் போதித்து வருகின்றன. நீதி என்றால் பிறருக்குரியதை அவர்களுக்கு அளித்தல். பிறருக்குரியது என்றால் அவர்களது உரிமைகள். எனவே நீதியின் மூலம்தான் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட முடியும். இந்த நீதி பற்றி எல்லாப் பெரும் சமயங்களும் வலியுறுத்துகின்றன.

### இந்து சமயம்

இந்து சமயம் நீதி அல்லது மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் என்பதற்கு எத்துணை முக்கியத்துவம் கொடுக்கிறதென்றால், இச்சமயத்தில் நீதிக்கு ஒரு தனிப்பட்ட கடவுளுண்டு. இந்திரன் என்னும் கடவுள் உலகில் நீதி முழுமையாக நிலைநாட்டப்படுவதற்காக இயமன் என்னும் நீதியின் கடவுளாக மாறுகிறார். அவர் அநீதி விளைவிப்போருக்குத் தக்க தண்டனை விதிப்பார்.

இந்து சமயத்தின்படி உண்மையைப் பேசி நன்மையைச் செய்பவர்களே நீதிமான்கள். மக்கள் இறந்த பின்னும் அவர்களைத் தொடரும் உண்மையான நண்பன் நீதியே. மனு என்பவரின் சட்டங்களின்படி அதாவது இந்து சமயத்தின் தர்ம சாஸ்திரத்தின்படி, எந்த ஒரு உயிரினத்துக்கும் தீமை செய்யாதிருப்பதன் மூலமே மக்கள் மறுவுலகுக்குரிய புண்ணியங்களைச் சேகரிக்க முடியும்.

அரசனைப்பற்றிப் பேசும் பொழுது, தனது பிரசைகளை நீதி வழுவாது காப்பதுதான் அரசனின் முக்கிய கடமையென இந்து சமயம் கூறுகிறது. அரசன் நீதியோடு ஆட்சி செய்தால், அனைத்துலகின் மேல் அவன் வெற்றி வாகை சூடவும் ஈற்றில் நிர்வாணம் (மோட்சம்) அடையவும் அது அவனை இட்டுச்செல்லும்,

### புத்த சமயம்

புத்த பெருமானின் போதனையின்படி துன்பத்திலிருந்து விடுதலை அடைவதற்குரிய பாதையின் மாபெரும் உண்மை, நீதியைக் கடைப்பிடித்தலில் தங்கியுள்ளது. நீதி என்றால் அனைத்தையும் சரியான முறையில் செய்வது. (Justice in its original meaning, is from the word 'right'). புத்தர் போதித்த எட்டு வகையான மாபெரும் பாதைகள் (The noble Eight fold Path) எல்லாவற்றையும் சரியான முறையில் செய்வதில் அதாவது நீதியுடன் செயலாற்றுவதில் அடங்கியுள்ளன.

புத்த சமயத்தில் "தம்ம பாத" (புண்ணிய பாதை) என்னும் நூலின்படி "நீதிமான் இவ்வுலகில் மகிழ்ச்சியுடன் வாழ்வான். மறுவுலகில் மகிழ்ச்சியடைவான். இரு உலகிலுமே ஆனந்தம் கொள்ளுவான். அநீதி பயங்கரமான தீமைகளால் தண்டிக்கப்படும்".

### இஸ்லாம்

முகமது நபி அவர்கள் நீதியில் நிலைத்திருக்குமாறு தம் சீடர்களுக்குப் போதித்தார். "நீதியோடு நடப்பவர்களுக்கு அல்லா மன்னிப்பும் மாபெரும் சன்மானமும் வாக்களித்துள்ளார்" என்று கூறுகிறது குர் ஆன் IV. 130. முஸ்லிம்களின் சமயத்தில் நீதியென்னும் நற்பண்பு எத்துணை முக்கியமென்றால், அநீதி மிகவும் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறது. சிறப்பாக அநாதைகள் மட்டில் அனைவரும் நீதியுடன் நடந்துகொள்ள வேண்டும் என முகமது நபி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

### கிறீஸ்தவம்

கிறீஸ்தவம் அன்பின் சமயம். மக்களனைவரும் கிறீஸ்துவில் சகோதரர்களாக வேண்டுமென்பது அதன் போதனை. அப்படியென்றால் அவர்கள் மத்தியில் சமத்துவம் நிலவ வேண்டும். இதைக் குறித்துத்

(15ஆம் பக்கம் பார்க்க)


ஆங்கில மருந்து வகைகளுக்கு
நாடவேண்டிய இடம்

**வசந்தா பார்மஸி அன் குறேசரிஸ்**
(சத்திரச் சந்திக்கு முன்பாக)
280, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் மக்களுக்கு சேவை செய்ய இப்பார்மஸி திறந்திருக்கும்.

தீபாவளிப் பெருநாளை முன்னிட்டு
திசைப் பத்திரிகை நீடூழி வாழ்கவென
வாழ்த்துகிறோம்.

யாழ்நகரில் சிறப்பாகக் கண்ணாடி
வழங்குபவர்



**எஸ். எம். பெர்னாண்டோ**
580, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கையாளருக்கு
மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்களை
அர்ப்பணிக்கின்றோம்.

தலைமையகம் :
**ரி. குமாரசாமி றெக்ஸ்றைல்ஸ்**
43-44, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கிளை :
**சௌபாக்கியாஸ்**
22, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குதூகலம் தங்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்

**பிறிலியன்ற் ஜுவல்லர்ஸ்**
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள்
குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

**பிறிலியன்ற் ஜுவல்லர்ஸ்**
240/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

"ஸ்கந்த சஷ்டி
விரதம்"

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம்போம் – நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் – கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலன் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

மில்க்வைற் மேலுறையிலிருந்து 25 திருக்குறள் அனுப்பி கந்தர் சஷ்டி கவசமும், தஞ்சத்தருள் முருகன் ஸ்ரீக்கரும் பெறுக.

**மில்க்வைற்,**
யாழ்ப்பாணம்.

# ஜே. ஆரின் முப்பது ஆண்டு இனவாதஅரசியல்

## முதலாவது சம்பவம்

ஜே. ஆரின் அரசியல் பிரவேசம் அவர் 1946ஆம் ஆண்டு அரசாங்க சபைக்குள் களனி தொகுதிஉறுப்பினராக பிரவேசம் செய்ததைத் தொடர்ந்து ஆரப்பமானது. அரசாங்க சபையில் அவர் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதுதான் ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களம் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்பதாகும். ஆனால் இப்பிரேரணை பின்னர் அரசாங்க சபை உறுப்பினர்களால் சிங்களமும் தமிழும் அரசாங்க பாஷையாக இருக்கவேண்டும் என்ற திருத்தத்துடன் நிறைவேற்றப்பட்டது.

களனி தொகுதிக்கு இலங்கையின் நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் ஒரு சிறப்புத் தகுதி இருக்கிறது. அதாவது இத்தொகுதிதான் சிங்கள பௌத்த கலாசாரத்தின் பீடமாகக் கருதப்படுகின்றது. (Seat of Sinhala - Buddhist Civilization ). 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் முக்கிய பங்கு வகித்த பௌத்த பிக்கு பெரமுனையின் தலைவரான புத்தர கித்தர தேரோ களனி ரஜமகாவிகாரையின் பிரதம பீடாதிபதியாவார். அத்தோடு காலத்திற்குக் காலம் இத்தொகுதியின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிக்கும் எம்.பியானவர் தான்தான் சிங்கள பௌத்த மக்களின் காவலன் என்ற தோரணையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதோடு தமிழின விரோத நடவடிக்கையிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வந்துள்ளார். நாடாளுமன்ற அரசியல் தொகுதிவாரியான தெரிவு முறை நீக்கப்பட்டு விகிதாசார பிரதிநிதித்துவ முறை அமுல் செய்யப்படும் வரை களனித் தொகுதி எம். பியாக இருந்தவர்களின் அரசியல் அரிச்சுவடு சிங்கள பௌத்தம் பற்றியதாகவே இருந்து வந்தது. 1977 இல் களனி தொகுதி பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட சிறில் மத்தியூ வரை இந்த அடிச்சுவட்டைப் பின்பற்ற தவறவில்லை. இப்படிப்பட்ட சிறப்புத் தகமை பெற்ற களனி தொகுதி சட்டசபை

நேதாஜி

உறுப்பினராக 1944இல் தெரிவு செய்யப்பட்ட ஜே. ஆர். சிங்களம் மட்டும் அரசகரும மொழியாகவிருக்கவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தமை ஒன்றும் அரசியல் விபத்து அல்ல. இதைத் தொடர்ந்து சிங்கள பௌத்த அரசியல் சிலம்பம் ஆடிய ஜே. ஆர் சரியாக முப்பது ஆண்டுகள் கழித்து 1974 ஆம் ஆண்டு திரு. கே.டபிள்யூ தேவநாயகம் தலைமையில் இலங்கைச் சிறுபான்மை மக்களது மொழியுரிமைகள் உட்பட அவர்களுக்குள்ள குறைபாடுகளை ஆராய்ந்து யு. என். பி. கட்சிக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு குழுவை நியமித்தார். 1975ஆம் ஆண்டு இலங்கையின் பொதுத்தேர்தலை எதிர்பார்த்த ஜே. ஆர் தேர்தல் ஆதாயம் கருதியே இக்குழுவை நியமித்தார். குழுவை நியமித்த ஜே. ஆர், தேவநாயகம் குழுவின் சிபார்சுகளை தாம் ஐ. தே. க. பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார். ஆனால் சிறிமாவோ அம்மையார் தேர்தலை 1975இல் நடத்தாமல் 1977வரை ஒத்திவைத்தமையால் தேவநாயகம் தலைமையிலான குழுவின் அறிக்கையும் குப்பைக் கூடைக்குள் போய்ச் சேர்ந்தது. 1944இல் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் மொழி உரிமையைப் பறிக்க முயன்ற ஜே. ஆர். சுமார் முப்பது ஆண்டுகளின்பின் தமிழ்மொழி உரிமைகள் பற்றிச் சிந்திக்க முனைந்தார். அதுவும் 1944இல் அரசியல் லாபம் கருதியே தமிழையகற்ற முனைந்தார். பின்னர் 1974 இலும் தேர்தல் லாபம் கருதியே, தமிழ் மக்களின் வாக்குகளை தமது கட்சிக்குப்பெற்றுக்கொள்ளவே இந்த தமிழ் மக்களுக்கான சிபார்சுகளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்க முனைந்தார்.

## இரண்டாவது சம்பவம்

1977ஆம் ஆண்டு ஐ. தே. கட்சி பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றமையால் ஜே. ஆர். பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது முதல் நாடாளுமன்ற கூட்டுத் தொடரின் விசேட அமர்வு ஒன்றின்போது முன் வரிசையில் முதல் ஆசனத்தில் ஜே. ஆர் அமர்ந்து இருந்தார். பிரித்தானிய நாடாளுமன்ற சம்பிரதாயத்தைப் பின்பற்றி ஜே. ஆருக்கு அடுத்த படியாக அவருக்கு அருகில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அப்போதைய காங்கேசன்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஜே. ஆருக்கு அடுத்த படியாக அவர் அருகில் அமர்ந்திருந்தார். அதைத் தொடர்ந்து சபை முதல்வர் என்ற முறையில் திரு. ரணசிங்க பிரேமதாசா அமர்ந்திருந்தார். அதைத் தொடர்ந்து நிதி மந்திரி ரொனி டீமெல் பிரேமதாசாவுக்கு அருகில் அமர்ந்திருந்தார். இதைப் பார்த்துவிட்டு ஜே. ஆர் ஒரு ''ஜோக்'' சொன்னார்.

''1947இல் யான் டி. எஸ் சேனநாயக்காவின் மந்திரி சபையில் நிதிமந்திரியாகவிருந்தேன். பின்னர் 1965இல் டட்லி சேனநாயக்கா பிரதம மந்திரியாகவிருந்த போது யான் சபை முதல்வராக இருந்தேன். 1970இல் சிறிமாவோ அம்மையார் பிரதம அமைச்சராகவிருந்தபோது யான் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்தேன். இப்போது 1977இல் யான் பிரதம மந்திரியாகவிருக்கிறேன். ரொனி டீமெல் அமர்ந்திருக்கும் கதிரையிலிருந்து இந்தக் கதிரைக்கு வர (தனது ஆசனத்தைக் காட்டி) எனக்கு முப்பது வருடங்கள் (1947 — 1977) பிடித்தன'' என்றார்.

## மூன்றாவது சம்பவம்

1957 ஆம் ஆண்டு பண்டா — செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே. ஆர் ஜயவர்த்தன கண்டிக்குப் பாதயாத்திரை போனார். இந்தப் பாதயாத்திரை இம்புல்கொட என்ற இடத்தில் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் உத்தரவைத் தொடர்ந்து எஸ். டி. பண்டாரநாயக்காவினால் தடுத்து நிறுத்தப்பட்டது. "இம்புல்கொட வீரயா" (வீரன்) என்ற பட்டம் எஸ் டி. பண்டாரநாயக்காவை சென்றடைந்தது. கண்டிக்குப் பாதயாத்திரை போன ஜே. ஆர். அப்போதுதான் ஏன் பாதயாத்திரை போனேன் என்பதைக் குறிப்பிட்டுக் கூறும் போது பண்டா — செல்வா உடன்படிக்கையில் வடக்கு – கிழக்கு இணைப்புக்கான ஏற்பாடுகள் இருந்தபடியால்தான் கண்டி யாத்திரை போனேன் என்றார். இதன்பின் 1965இல் டட்லி— செல்வா உடன்படிக்கை உருவானது. இந்த உடன்படிக்கையின்படி 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தமிழ் மொழி விசேட விதிகள் சட்டம் நாடாளுமன்றத்திற்கு வந்தது. 1967 ஆம் ஆண்டு மாவட்டசபை அமைப்பதற்கான வெள்ளை அறிக்கை தயாரானபோது நாடாளுமன்ற லொபியில் தந்தை செல்வா, அமரர் கதிரவேற்பிள்ளை, நாகநாதன், எஸ் எம். இராசமாணிக்கம், அமிர்தலிங்கம் மற்றும், தர்மலிங்கம் ஆகிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருமித்து சந்தித்த ஜே ஆர். மாவட்டசபை மசோதா நாடாளுமன்றத்திற்கு வரும் போது நீங்கள் வடக்கு-கிழக்கு இணைப்பு பற்றி வலியுறுத்தக் கூடாது என்றார். பின்னர் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தான் பதவிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகக் கூறி தேர்தல் பிரசாரம் செய்தார். இவரின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் போராட்டம் ஆயுதப்போராட்டமாக பரிணமித்து முனைப்படைந்த நிலையில் 1987 இல் இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான போது ஜே. ஆர். வடக்கு — கிழக்கு தற்காலிக இணைப்புக்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் இட்டார். ஒரு தரப்பின் சார்பில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜே, ஆர். வடக்கு — கிழக்கு நிரந்தர இணைப்பு தொடர்பாக பொது சனவாக்கெடுப்பு நடைபெறும் போது வடக்கு — கிழக்கு இணைப்புக்கு எதிராகத்தான் பிரசாரம் செய்யப் போவதாக கூறினார்.

## நாலாவது சம்பவம்

1958ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டது. இவ்வேளையில் ஐ. தே. கட்சியால் முதல் அடி என்ற பெயரில் ஒரு கைநூல் வெளியிடப்பட்டது. "First Step" என்பது அதன் ஆங்கிலத்தலைப்பு. இந்த நூலை உருவாக்குவதில்

(15ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாசியாவில் சிறுவர்களின் அவலநிலை

தென்னாசிய நாடுகள் பலவற்றிலும் ஏறக்குறைய 20 லட்சம் சிறுவர்கள் கொத்தடிமைகளாக, மனிதாபிமானமற்றமுறையில் சுரண்டப்பட்டு வருகின்றார்கள். இவர்கள் பெற்றோரைப்பிரிந்து, பட்டினியுடன், அசுத்தமான இடங்களில் படுத்துறங்கவேண்டியிருக்கின்றது. பெரும்பாலான சிறுவர்கள் பெற்றோர் பட்ட கடனுக்காகவே இவ் அவல வாழ்விற்கு உட்படுத்தப்படுகின்றார்கள். சமூகத்தின் அடித்தளமக்கள், மற்றும் சமய, இன சிறுபான்மையோர், சமூகக்குழுக்கள் ஆகியோர் மத்தியிலிருந்து வந்த இந்தச் சிறுவர்களுக்கு எதிர்காலமென்பது இருள் சூழ்ந்ததாகவேயுள்ளது.

இந்நாடுகளில் சிறுவர்களை இந்த அடிமை வாழ்விலிருந்து பாதுகாக்கப் போதிய சட்ட ஒழுங்குகள் கிடையா. இங்கே பணபலமும் அதிகாரமும் ஆதிக்கம் செலுத்தக்கூடியதாக இருப்பதால், இருக்கக் கூடிய சட்டங்களும் சரிவரப்பயன் படுத்தப்பட முடியாதவைகளாகவேயுள்ளன. சிறுவர்களுக்கான கட்டாயக்கல்வியின் முழுதான அமுலாக்கம் பற்றி ஆசியநாடுகள் பலவும் போதிய அக்கறை காட்டுவதில்லை.

அழகான பாரசீகக் கம்பளம் சிறுவர்களால், அவர்களது பிஞ்சுக்கரங்களால் மட்டுமே நெய்யக் கூடியதென்று நியாயம் கற்பித்துக்கொண்டு, இந்தியாவில் மட்டும் ஆயிரக் கணக்கில் சிறுவர்கள் இக்கம்பள உற்பத்தியில் ஈடுபடுத்தப்

நீலகி

பட்டு வருகின்றார்கள். ஆயினும், இத்தகைய கம்பளங்கள் வளர்ந்தவர்களாலும் அழகாகவும் விரைவாகவும் நெய்யப்பட முடியுமென்று நிரூபித்துக்காட்டப்பட்டுள்ளன.

தென்னாசிய நாடுகளில் கொத்தடிமைகளாக வாழும் சிறுவர்கள் பற்றி அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற மகாநாட்டில், மேற்படி விடயங்கள் அம்பலப்படுத்தப்பட்டன. இந்துத் துறவியும், சமூகசேவகருமான சுவாமி அக்னிவேஸ் என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மகா நாட்டில் பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தென்னாசிய நாடுகளில் நிலவும் வறுமையே இச்சிறுவர்களின் இவ்வடிமை நிலைக்கான பிரதான காரணமாகும். இங்கே வாழும் மக்களில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழேயே வாழுகின்றனர். 800 மில்லியனாக இருக்கும் இந்தியச் சனத்தொகையில் 40% மானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப்பட்டவர்களே. இதனால் இம்மக்கள் கடனில் தங்கியிருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இவர்களது உழைப்பு மாத்திரமன்றி, இவர்களது உடல்களும் கடன் கொடுத்தவர்களுக்கே சொந்தமாகின்றன. தம்மால் இக்கடனைத் தீர்க்கமுடியாதுபோகவே தமது குழந்தைகளையும் இக்கடனுக்காக இவர்கள் பலியிடவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

''தீவிர சமூக, பொருளாதார, அரசியல் மாற்றம் மட்டுமே இந்தச்சிறுவர்களின் விடுதலைக்கான ஒரே நம்பிக்கை என்பதை நாம் உணர்கின்றோம்.'' என்று, இம்மகாநாட்டு முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிறுவர்களின் இந்த அவல வாழ்விற்கு, உலகவங்கி, மற்றும் சர்வதேச முகவர் நிலையங்களது நடவடிக்கைகளும் காரணங்களாகின்றனவென்றும் இவ்வறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது. பொருத்தமற்ற அல்லது முழு சமூகத்துக்கும் அனுகூலமாகாத திட்டங்களுக்கு நிதியீட்டம் செய்வதன் மூலம் இந்நிதி நிறுவனங்கள் மக்களை மேலும் வறுமை நிலைக்குள்ளாக்குவதன் மூலம் சிறுவர்களின் எதிர்காலத்தையும் சிதறடித்துவிடுகின்றன என்பது, இம்மகாநாட்டில் கலந்துகொண்டவர்களின் கணிப்பாகும்.

இம்மகாநாட்டினை ஏற்பாடு செய்த அக்னிவேஸ் அவர்கள், கொத்தடிமைகளாகவுள்ளவர்களுக்கு வாழ்வளிப்பதை நோக்கமாகக் கொண்ட, 'கொத்தடிமைகள் விடுதலை முன்னணி' என்ற ஒரு அமைப்பையும் அமைத்துள்ளார். இதுவரை 33,000 சிறுவர்களும் வளர்ந்தோர்களுமான கொத்தடிமைகளை இந்த அமைப்பு விடுதலை செய்துள்ளது. அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களுக்குப் பண உதவி செய்து வீடுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளதாம் இந்தமுன்னணி. □

# ஒருமித்த கருத்து: ஸ்டாலின் பாணி

திமித்ரி ஷெபிலோவ் (1905 இல் பிறந்தவர்) தமது வாழ்நாளில் லெனினது கூட்டாளிகளில் பலரைச் சந்தித்திருக்கிறார். லெனினது துணைவியார் நதெஷ்தா குருப்ஸ்கயா

## வாக்குமூலம்

வுடனும் லெனினுடைய சகோதரி மரியா உலியனோவாவுடனும் அவருக்குப் பரிச்சயம் உண்டு. கட்சியின் ''செல்லப் பிள்ளை''யான நிக்கொலாய் புகாரின் ஆற்றிய உரைகளைச் செவிமடுத்திருக்கிறார். தலைசிறந்த புரட்சி வீரர்களான ஜெர்ஜின்ஸ்கி, புருன்ஸே, கொலந்தாய், ஜினோவியேவ், ரைகோவ், காமெனேவ், டிராட்ஸ்கி போன்றோரின் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார். ஸ்டாலினைச் சுற்றி இருந்தவர்களை, குறிப்பாக சோவியத் யூனியனின் புரொகுரேட்டர்-ஜெனரலாக இருந்த வைஷின்ஸ்கியை அவர் நன்கு அறிந்திருந்தார்.

ஷெபிலோவ் நினைவு கூர்கிறார்: ''அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதில் இந்த நபர் மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார். பூர்ஷுவா இடைக்கால அரசாங்கத்தின் ஒரு கமிசார் என்ற முறையில் அவர், 1917 இல் லெனினைக் கைது செய்வதற்கான ஓர் உத்தரவில் கையெழுத்திட்டார். தீவிர மென்ஷிவிக்காக இருந்தார். இருந்தபோதிலும் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ப்பதற்காக ஸ்டாலின் தனிப்பட்ட முறையில் பரிந்துரை செய்த ஒரே நபர் வைஷின்ஸ்கிதான்.''

லெனினுக்கு நெருக்கமானவர்களையும், அவருடன் சேர்ந்து கட்சியைத் தோற்றுவித்தவர்களையும் ஸ்டாலின் அதிசமாக வெறுத்தார் என்பது ஷெபிலோவின் கருத்தாகும். மத்தியக் கமிட்டி உறுப்பினர்களையும், வெவ்வேறு ஆண்டுகளில் கட்சிக் காங்கிரசுகளுக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகளையும் பற்றிப் பிரசுரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள், லெனினுடைய பழைய தோழர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டனர் என்பதைக் காட்டுகின்றன. வைஷின்ஸ்கி போன்றவர்களின் நேரடிப் பங்கெடுப்புடன் அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன.

பல ஆண்டுகளாக ஸ்டாலின் மிகச்சிறந்த கட்சி உறுப்பினர்களையும் அறிவாளிகளையும் ராணுவத்தினரையும் அழித்தொழிந்து வந்தார். அக்காலத்தில் செத்துமடிந்த தொழிலாளர், விவசாயிகளின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. தணியாத ரத்தவெறியுடன் கொடூரமான முறையில் அவர்கள் நிர்மூலமாக்கப்பட்டனர்.

''எமது கண்களுக்கு எதிரிலேயே பல விஷயங்கள் நடந்து கொண்டிருந்த அச்சமயத்தில் எங்களுக்குத் தெரிந்ததும், எங்களால் செய்ய முடிந்ததும் என்ன?'' என்று திமித்ரி ஷெபிலோவ் கேட்கிறார். ''சற்றே கற்பனை செய்து பாருங்கள்: 'மக்களின் எதிரிகளுடைய' வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புரொகுரேட்டர் வைஷின்ஸ்கி பேசத் தொடங்கினார். ஒவ்வொரு பிரதிவாதிக்கும் ஒரு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தார், எல்லாமே முறையாக இருந்தன. இந்த வழக்கு விசாரணையைப் பற்றி செய்தி ஏடுகள் செய்திகளைத் தாங்கிவந்தன. இவற்றை நம்பாதிருக்க முடியவில்லை. தாங்கள் 'மக்களின் எதிரிகள்' தானா என்று கேட்கப்பட்டபோது புகாரின், காமெனேவ், ரைகோவ், ஜினோவியேவ் முதலானோர் 'ஆம்' என்று பதிலளித்தனர். கவிழ்ப்பு நடவடிக்கைகள், பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தயார் செய்தல், மற்றும் இதர குற்றங்கள் புரிந்ததாக அவர்களே ஒப்புக் கொண்டனர். வெளிநாட்டுச் செய்தியாளர்களும் நாங்களும் வியப்படைந்தோம்; இது உண்மையாக இருக்க முடியுமா? சித்திரவதைக்குப் பின்னர் ஜினோவியேவும் காமெனேவும் ஸ்டாலினிடம் கொண்டு செல்லப்பட்டனர் என்பதையும், அவர்களிடம் அவர் ''டிராட்ஸ்கிக்கு எதிராகச் சாட்சியம் கூறுங்கள். நீங்கள் உயிருடன் இருப்பீர்கள்'' என்று கூறியதையும் அச்சமயத்தில் யார்தான் அறிவர். ஸ்டாலின் சொன்னபடி அவர்களும் நடந்து கொண்டனர். அவர்கள் அங்கேயே அப்போதே சுட்டுக் கொல்லப்பட்டனர். பின்னர் ஸ்டாலினது உத்தரவுகளை நிறைவேற்றியவர்கள் அனைவரும் தடயங்கள் எதுவும் இருந்துவிடக்கூடாதே என்பதற்காகச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

''ஸ்டாலின் இறந்த பின்னர் நடைபெற்ற மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டம் ஒன்றில், தாம் கொல்லப்படுவதற்கு முன் ஸ்டாலினுக்கு புகாரின் எழுதியகடிதம் ஒன்று எமக்கு வாசித்துக் காட்டப்பட்டது. புகாரின் எழுதினார்: ''கோபா, (ஸ்டாலினது புனை பெயர்) அன்பு நண்பரே, நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்பது உமக்குத் தெரியும். என்னை ஏன் அழித்துவிட விரும்புகிறீர்கள்? என்னைக் கொன்று விடாதீர்கள்! என் வாழ்வின் இறுதி நாட்களைக் கழிக்க ஆர்க்டிக் கடற்கரைக்கு என்னை அனுப்பி விடுங்கள். வடபுலத்து மக்களுடன் வாழ்ந்து மார்க்சிய-லெனினிய உண்மையின் வெளிச்சத்தை அவர்களிடையே பரப்பப் பாடுபடுவேன். என்னை உயிருடன் விட்டு விடுங்கள்.''

புகாரினை அங்கேயே, அப்போதே சுட்டுவிட உத்தரவிட்டதுதான் ஸ்டாலினுடைய பதிலாக இருந்தது.



எம். ரொமாதின் வரைந்த ஸ்டாலினின் ஓவியம்

ஜனநாயகம், கூட்டுத்துவம், பொது விவாதங்கள் முதலிய உண்மையான ஜனநாயக வடிவங்களை ரஷ்யாவின் உழைப்பாளி மக்கள் அறிந்திருக்கவில்லை என்பதனால்தான் ஸ்டாலினுடைய தனிப்பட்ட எதேச்சாதிகாரமும் வெகுஜனக் கொலைகளும் சாத்தியமாயின என்று திமித்ரி ஷெபிலோவ் கருதுகிறார்.

லெனின், கட்சி, மக்கள் ஆகியோரின் ''சார்பாகவே'' அனைத்தையும் ஸ்டாலின் செய்து வந்தார் என்ற உண்மையில்தான் இச்சோகக் கதை அடங்கியிருக்கிறது என்று திமித்ரி ஷெபிலோவ் வலியுறுத்தினார். ஆகவே லெனினது யுகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட முறையில் ஸ்டாலினது ஆட்சியில் கட்சியின் எல்லாப் பிளீனங்களிலும் மாநாடுகளிலும் காங்கிரசுகளிலும் எல்லாப் பிரச்சினைகளுமே ''ஒருமித்த கருத்தின்'' மூலம் தீர்க்கப்பட்டன. வாக்கெடுப்பின் முடிவுகள் எப்போதுமே ஏகோபித்த கருத்துக்களாக இருந்தன. யாரேனும் ஒருவர் மீதமுள்ள அனைவரையும் எதிர்த்து வாக்களிக்கத் துணிந்தால் அவர் கட்சிக்கும் எதிராகச் செயல்படுவதாகக் கண்டிக்கப்படுவார். ஸ்டாலினது ஆட்சியின் அரசியல், வரலாற்று, தார்மீக விளைவுகள் மத்தியகால விசாரணைகளை விட ஆபத்தானவையாக இருக்கும் என்று தாம் உறுதிபட நம்புவதாக திமித்ரி ஷெபிலோவ் கருதுகிறார்.

நன்றி:
புதுப்புனல் (ஜூன் 89)
(சோவியத் தூதரகச் செய்தித் துறை வெளியீடு—சென்னை) □

---

**ஸிஸேரியன்**

பெண்கள் கர்ப்பமடைந்து, பிள்ளை பிறக்கும் வேளையில் அது பிறக்க ஏதாவது கோளாறு ஏற்பட்டால் சத்திர சிகிச்சை செய்து பிள்ளையை வெளியே எடுப்பர். இச்சத்திர சிகிச்சை 'ஸிஸேரியன்' என ஆங்கிலத்தில் கூறப்படும். இது வந்தது இப்படித்தான்.

ரோமானிய வீரன் ஜூலியஸ் ஸீஸர் பிறக்கும் வேளை அவனது தாயின் வயிற்றில் சத்திர சிகிச்சை செய்தே, அவனை எடுத்தனராம். அதுவே முதல் குழந்தைப் பேற்று சத்திர சிகிச்சையாக கருதப்படுகின்றது. அவனது பெயரான ஸீஸரில் இருந்து பிறந்ததே 'ஸிஸேரியன்' என்ற சொல்லாகும்.

— தவபாலன்

---

# பறக்கும் தட்டில் வந்திறங்கிய வேற்றுக் கிரக வாசிகள்

வொரோனேஸ் என்ற ருஷ்ய நகரத்தில் வேறு கிரக வாசிகள் என்று நம்பப்படுபவர்கள் தரையிறங்கியதாக செய்திகள் சோவியத் பத்திரிகைகளில் பரவலாகப் பிரசுரிக்கப்பட்டன.

இச் சம்பவம் உண்மையென்று சோவெட்ஸ்கயா குல்தூரு ஊர்ஜிதம் செய்கிறது.

அந்நியர்கள் செப்டம்பர் 27ந் திகதி சாயந்தரம் தரையிறங்கினர். பட்டணத்து பூந்தோட்டத்தில் இவர்கள் இறங்கிய போது ஸென்யா பிலினேவ் மற்றும் யூல்யா ஷோலோகோவா என்ற மாணவர்கள் அங்கே இருந்தனர்.

அப்பகுதியில் ஜன நடமாட்டம் இருந்தது. அநேகர் பஸ் தரிப்பு நிலையத்தில் நின்றனர். பிள்ளைகள் உதைப்பந்தாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர்.

ஆறரை மணியளவில் வான வெளியில் இளஞ் சிவப்பு நிறத்தில் ஏதோ பிரகாசித்தது. பின்னர், 10 மீட்டர் விட்டமான, கருஞ் சிவப்பு நிறத்தில் பந்து போன்றதொன்று புறப்பட்டது.

பந்து உருவமான இந்த அமைப்பு, சிறிது நேரம் வட்டமிட்டது, பின்னர் மறைந்தது. சற்று நேரத்திற்குப் பின்னர் அது மீண்டும் திரும்பியது; மீண்டும் வட்டமிட்டது.

அவ்விடத்தில் இருந்த மக்கள் அதை நோக்கி ஓடினர்.

பந்து போன்ற அமைப்பைத் திறந்துகொண்டு ஒரு உருவம் வெளியே வந்தது.

மனித உருவம் கொண்ட முக்கண் படைத்த அந்த ''ஆள்'' மூன்று மீட்டர் உயரமாயிருந்தது. வெள்ளி நிறமான மேல் அங்கி உடுத்திருந்தது; செப்பு நிறமான ''பூட்ஸ்'' அணிந்திருந்தது.

தரையிறங்கிய நபர் சுற்றும் முற்றும் பார்த்தார். ''பந்து''விருந்து மேலும் இரண்டு ''ஆட்கள்'' — ஒன்று ரோபோட் ஆக இருக்கவேண்டும்.

முதல் ஆள் எதையோ சொன்னான். 30 x 50 சென்டிமீட்டர் அளவான பிரகாசிக்கும் முக்கோணம் தோன்றியது. தோன்றிய மாத்திரத்தே மறைந்தது.

ரோபோட்டை ஒரு ''ஆள்'' தொட்டதும் இயங்க ஆரம்பித்தது.

பார்த்துக் கொண்டிருந்த பையன்களில் ஒருவன் பீதியுற்று கதறினான். ''ஆட்களில்'' ஒருவர் அவனைப் பார்த்தார். பையன் மௌனமாகினான்; அவனுக்கு அசைய முடியவில்லை. அந்த ஆளின் கண் பளபளவென்று ஒளிர்ந்தது. பார்த்துக் கொண்டிருந்த யாவரும் கத்தினர். சற்று சென்றதும் அந்த ஆட்களும் பந்தும் மறைந்தன.

ஐந்து நிமிஷங்கள் கழிந்த பின் அவை மீண்டும் தென்பட்டன. கையில் துப்பாக்கி போன்ற குழாய் ஒன்று இருந்தது. சுமார்—ஐம்பது சென்டிமீட்டர் நீளம் இருக்கும். பதினாறு வயதான அந்த பையனை நோக்கிக் குழாயைக் காட்டியதும், பையன் மறைந்து விட்டான்.

அந்த ஆள் பந்துக்குள்ளே சென்றான், உடனே அது நகர்ந்தது. அதேசமயத்தில் மறைந்த பையன் மீண்டும் தோன்றினான்.

''இந்தச் சம்பவத்தை'' நம்பவே முடியவில்லை என்று சோவெட்ஸ்கயா குல்தூரு நிருபர் ஈ.எஃரிமோவ், வொரோனேஸ் நகரத்தில் இருந்து எழுதுகிறார். ''இதை விளக்கப்படுத்த முடியாது, ஆனால் நிச்சயமாக, சந்தேகத்திற்கிடமின்றி ஏதோ நடந்தது'' என்று நிருபர் மேலும் எழுதுகிறார்.

வொரோனேஸ் நகரத்தில் யூஎஃப்வோ இறங்கியதை அநேகம் பேர் கண்டனர்.

நகரத்தின் பூட்டிலின் வீதி வாசிகள் இந்த யூஎஃப்வோ சம்பவத்தை செப்டம்பர் 23ந் திகதி முதல் 29ந் திகதி வரை கண்டதாக அறிவிக்கின்றனர்.

இந்த அதிசயமான சம்பவத்தைக் கண்ட அனைவரையும் ராணுவத்தினரும் பத்திரிகையாளர்களும் பேட்டி கண்டுள்ளனர்.

அந்த அதிசயமான ஆட்களைப் பற்றியோ, பந்தைப் பற்றியோ அவர்கள் பேட்டிகளில் முரண்பாடுகள் கிடையாது.

நகரத்துக் குழந்தைகள் பீதியுற்றுள்ளனர்.

இதற்கிடையில் விஞ்ஞானிகளும், பௌதிகவியலாளர்களும், உயிரியலாளர்களும் இச் சம்பவத்தைக்கவனமாக ஆராய்ந்து வருகின்றனர். □

# சிந்தனை மேடை — 2

## புலம் பெயரும் ஈழத் தமிழர்

“ஒரு சமூகத்தின் முதுகெலும்பு இளைஞர்களே”. இக்கருத்தானது இலங்கையின் வடக்கு — கிழக்குத் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் பொறுத்தும் மாறுபாடாக இருக்க முடியாது. அதே பெறுமானத்துடன் நோக்கும்போதுதான் இப்பிராந்தியங்களிலிருந்து வெளிநாடுகளை நோக்கிச் செல்லும் இளைஞர்களையும், யுவதிகளையும் பற்றிய நிலையினை மதிப்பிட முடியும். குறிப்பாக 1970 களில் கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய தளங்களில் இவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பே, ஆரம்பத்தில் வெளிநாடு பற்றிய ஒரு வழியைக் கொடுத்தது. ஆயினும் 1980 களின் பின் இப்பிராந்தியங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள், அமைதியற்ற ஏனைய சூழல்கள், இளவயதினர் எப்படியாவது வெளிநாடுகளுக்கு சென்றால்தான் உயிர் வாழ முடியும் என்ற மனோநிலையைத் தோற்றுவித்தது. இந்நிலையானது சமூகத்தில் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் பல்வேறு மாற்றங்களையும் தோற்றுவித்தது.

### பொருளாதார தாக்கம்

வெளிநாடுகளில் தொழில் புரிவோர் அதிகளவு பணத்தை இங்கு அனுப்பிய போதிலும், நீண்ட காலத்தில் அது பாதிப்பையே கொடுக்கும் நிலையிலுள்ளது. சமூகத்தளத்தில் ஒரு வீக்க நிலையினையே இப்பொருளாதார மாற்றம் ஏற்படுத்தி வருகிறது. வெளிநாட்டுப் பணமுள்ளோர் உள்நாட்டில் காணிகளையும் வீடுகளையும் போட்டிபோட்டு வாங்குவதால் இதுவரைகாலமும் அவற்றிற்கு இருந்துவந்த பெறுமானம் அதிகரிக்கிறது. இந்நிலையில் உள்நாட்டில் உழைப்போரால் நிலைமையைச் சமாளிக்க முடியாதுள்ளது. இதைவிட நீண்ட காலமாக நல்ல விளைநிலங்களாகப் பயன்படுத்தப்பட்ட காணிகளில் புதிதாக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதால், எதிர்காலத்தில் விளைநிலங்கள் அருகிவிடும் வாய்ப்புண்டு. அதேவேளை விளைநிலத்திற்கு உகந்ததாக அல்லாத, ஆனால் வீடுகள் கட்டக்கூடிய காணிகள் இப்பிராந்தியங்களில் அதிகமாக இருந்தபோதிலும் போக்குவரத்து, மின்சாரம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இதைவிட சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் சீதனப் பிரச்சினைகூட, இவ்வாறான வெளிநாட்டு உழைப்பால் மேலும் அதிகரித்திருப்பதுடன், அன்பளிப்பு (Donation) என்ற புதிய ஒரு முறையும் அரங்கத்திற்கு வந்துள்ளது. இதனால் உள்நாட்டு உழைப்பாளர்கள் தமது பெண்பிள்ளைகளுக்கு ‘மாப்பிள்ளை’ தேடுவது மிகவும் சிரமமாயுள்ளது. இவ்வாறு பொருளாதார ரீதியில் சமூகத்தில் புதிதாக எழுச்சிபெற்று வரும் ஒரு புதிய வர்க்கம் சமூகத்தளத்தில் மேலுமொரு தாக்கத்தையே ஏற்படுத்துவதாயுள்ளது. வெளிநாட்டு உழைப்பின் மூலம் அடிமட்டக் குடும்பங்கள் சில தம்மைப் பொருளாதாரரீதியில் ஸ்திரப்

ஏ. வி. என்.

படுத்த முடிகிறது. அதைவிட அவர்கள் தாய் நாட்டிற்கு வந்த பின்பும்கூட, விவசாயம், பண்ணைகள் போன்ற துறைகளில் தமது முயற்சிகளை மேற்கொள்கின்ற போதும், பெரும்பாலான வெளிநாட்டு உழைப்பாளர்கள் ஆடம்பரமான வாழ்க்கையே எட்டிப்பிடித்துத் தொங்குவதால் உள்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கான சூழல் மந்தமாகவேயுள்ளது.

### அரசியல் ரீதியான தாக்கம்

இலங்கையின் பெரும்பான்மையினரான சிங்கள இளைஞர்கள் வெளிநாடு செல்வது குறைவாக இருப்பதால், தொடர்ச்சியான தமிழ் இளைஞர்களின் வெளியேற்றம் எதிர்காலத்தில் எமது பிரதேசங்களை இழப்பதற்கே வழிவகுக்கும். குறிப்பாக, அவ்வாறான இளைஞர் வெளிநாடுகளிலேயே தமது திருமணத்தை வைத்துக்கொள்வதும், அந்தந்தநாட்டுப் பிரஜைகளாகத் தம்மை மாற்றிக் கொள்வதும் மேற்சொன்ன கருத்துக்கு வலுவூட்டுவதாகவே அமைகிறது. யூதமக்கள் பல்வேறு நாடுகளிலும் சிதறி வாழ்ந்தபோதும் தமக்கென ஒரு நிலம் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்பதை உணர்ந்ததும், இஸ்ரேலை நோக்கி ஓடிப்போனார்கள். அந்தளவுக்கு நாட்டுப்பற்று தமிழர்களின் சமூக சிந்தனையில் வளரவில்லை என்றே சொல்லலாம். சமகாலத்தில் வெளிநாடுகளில் வாழ்வது சரியாகப் படலாம், ஆனால் எதிர்காலத்தில் அந்தந்தநாடுகளில்எமதுதனித்துவத்தை இழந்து இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழலாமே தவிர, தமிழருக்குரிய தனித்துவத்தைப் பேண முடியாது. இந்தக் காலப்பகுதியில் தமிழ் இளைஞர்கள் மத்தியில், இவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு நல்ல தூரதிருஷ்டியான சிந்தனை வளராவிட்டால், வெளிநாடுகளிலோ சொந்த நாட்டிலோ எதிர்காலத்தில் சுபீட்சமாக வாழமுடியாத நிலைக்கே இட்டுச் செல்லப்படுவோம்.

### மூளைசாலிகள் வெளியேற்றம்

வடக்கு — கிழக்கு தமிழர்கள் மத்தியில், வெளிநாடுகளிலிருந்து அறிவியல் ரீதியான சிந்தனைகளை இங்கு கொண்டு வந்து சேர்க்கும் மரபு மிகக் குறைவாகவேயுள்ளது. அதேவேளை வெளிநாடுகளுக்குச் செல்லுகின்ற வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், எழுதுவினைஞர்கள் போன்றோருக்கு பிரதியீடாக உள்நாட்டில் சேவையாற்றுவதற்காக வெளிநாடுகளிலிருந்து இவ்வாறான தொழில் விற்பன்னர்களை இறக்குமதி செய்வதால், நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயில் கணிசமான அளவு வெளிப்பாய்ச்சல் ஏற்படுவதால், தேசிய வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி உள்நாட்டில் முழுமக்களையுமே பாதிக்கிறது. அதேவேளை, தமிழர்கள் மத்தியில் நீண்டகாலம் நிலவி வருகின்ற கல்விப்பாரம்பரியத்தினுடைய வெளியீடுகளாக அமைகின்ற மூளைசாலிகள் தொடர்ந்தும் வெளியேறுகிறார்களே தவிர, மீண்டும் சொந்த நாட்டிற்கு வந்து பங்களிப்புச் செய்வோர் மிகச் சிலராகவே உள்ளனர். வெளிநாடு சென்றோர் மேலும் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக, இங்குள்ள அமைதியின்மையையே விரும்புகின்றனர். குறிப்பாக தமது கடவுச் சீட்டுக்களைப் புதுப்பிக்கவும், அந்தந்த நாட்டுப் பிரஜைகளாகத் தம்மை மாற்றிக் கொள்ளவும், இங்குள்ள அரசியற் சூழல் பிரதான கருவியாக அமைந்து விடுகிறது. அந்தவகையில் மூளைசாலிகள் வெளியேற்றம் சொந்த மண்ணிற்கு ஒரு பின்னடைவையே கொடுத்து வருகிறது.

### கலாசாரம்

அண்மைக் காலங்களாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேலைத்தேய கலாசாரத்தின் தாக்கம் அதிகமாயுள்ளது. இந்த ஆடம்பர வாழ்க்கைக்கு உள்ளூரில் உழைப்பவர்களால் ஈடுகொடுக்க முடியாதுள்ளது. இந்நிலையில் பல்வகைப்பட்ட உணவு, உடை, பொழுதுபோக்குகள், போதைவஸ்துக்கள் ஆகியவற்றின் பாவனையானது பாரிய தாக்கம் செலுத்துவதாயுள்ளது. ஏற்கனவே பலமிழந்து வருகின்ற கலாசாரச் சூழல் மேலும் சீரழியவே இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக அமையும்.

### அறிவியல்

வெளிநாடுகளில் உள்ளோர் இத்துறையில் தம்மை வளர்த்து, சொந்த நாட்டிற்குப் பங்களிப்புச் செய்வது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. பணத்தை உழைப்பதிலேயே அவர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர். உதாரணமாக வெளிநாட்டிலிருந்து வருகின்ற புத்தகங்களையோ, ஏனைய அறிவியல் சார்ந்த கருவிகளையோ கொண்டு வருவது குறைவாகவே உள்ள அதே வேளையில் வீட்டுப் பாவனைப் பொருட்கள், வேறுபுதிய இயந்திரங்கள் (Photo Stat இயந்திரம் போன்றன) போன்றவற்றை, தமது வருமானத்தை மையமாக வைத்தே கொண்டு வருகின்றனர். அறிவியல் சார்ந்த அம்சங்கள் உடனடியாக இலாபத்தைக் கொடுக்காதிருப்பதைத்தான் அவர்கள் அத்துறையில் முயற்சியெடுக்காததற்கான பிரதான காரணமாக கொள்ளலாம்.

### ஆரோக்கியம்

இங்கிருந்து வெளிநாடு செல்வோர் திரும்பி வரும் போது அதே தன்மையுடன் இருப்பதில்லை. குறிப்பாக உளவியல் ரீதியான மாற்றம், இளவயதில் மேலைநாட்டு, அல்லது வேறு நாட்டுப் பண்பாடுகளுடன் தம்மை இணைத்துக் கொண்டதால் சுதேச பண்பாடுகளுடன் ஒத்துப் போவதில் சிக்கலாக உள்ளது. போதைவஸ்து போன்ற நடவடிக்கைகளை அதற்கு அடையாளம் காட்டலாம். அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணப் பகுதியில் போதை வஸ்துப் பாவனை அதிகரித்து வருவது, சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து வெளிநாடு செல்லும் இளைஞர் யுவதிகளால், தமது அடிமட்ட வாழ்விலிருந்து பொருளாதார ரீதியில் மாறமுடிந்தாலும், ஏனைய துறைகளில் அவர்கள் வாழ்க்கை மந்தமாகவே காணப்படுகின்றது. எவ்வாறு நோக்கினும் உள்நாட்டில் இக்குறிப்பிட்ட வயதினரின் வெளியேற்றமானது பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. இதனால், எதிர் காலத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் மிகப் பாதகமான சூழலையே, எல்லா துறைகளிலும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனவே, இளைஞர்களின் வெளியேற்றமானது ஒரு சில சாதகமான நிலைகளையும் தாண்டி, பாதகமான சூழலையே தோற்றுவிப்பதாயுள்ளது. □

---

# காதலுக்கு நிறை இல்லை!

மைக்கல் இடெல்மன் என்ற இளைஞனின் உடல் நிறை 1008 இருத்தல். இவன் காதலி பிரெண்டா வேடிலின் நிறை 420 இருத்தல்.

நாங்கள்தான் உலகின் மாபெரும் இளம்சோடியென நினைக்கிறேன். நான் மைக்கலை விரும்புகிறேன். நாங்கள் இருவரும் நிறை குறைப்பது பற்றி ஆலோசிக்கிறோம் என்கிறாள், ..0 வயதான பிரெண்டா.

நிறையைக் குறைக்க பிரெண்டா நிறையத் தண்ணீர் குடிக்கிறாள்; கொழுப்புச்சத்து இல்லாமல் புரதச்சத்துடனான உணவை உண்கிறாள்.

இந்த பிரமாண்டமான சோடி நியூயோர்க்கில் உள்ள ‘ஒறுபேட் ஜாக்கா ஹெல்த் கொம்பிளெக்சி’ல் வசிக்கிறார்கள்.

இருபத்துநான்கே வயதான மைக்கல் அவனது வீட்டிலிருந்து சட்டரீதியாக அகற்றப்பட்டு, அறுபதுபேர் கொண்ட ஒரு குழுவினால், ட்றக் ஒன்றில் ஏற்றப்பட்டு கொண்டு போய் விடப்பட்டான்.

ஏழு வயதில் 154 இருத்தல் எடை கொண்டிருந்த மைக் பத்து வயதானபோது, பாடசாலையிலிருந்து விலக்கப்பட்டு வீட்டில் விடப்பட்டான். அன்றிலிருந்தே அளவுக்கதிகமான உணவு வகைகளைத்தான் விரும்பியபடி உண்டு கொழுத்தான்.

உடல் பெருத்து வந்த போது, அவன் கவலையும் வளர்ந்தது. கடைசியாக படுக்கையில் கிடந்தான்.

என் தசைநார்கள் வலுவிழந்துவிட்டன. என்னால் அசையமுடியவில்லை என்று சொல்லிக் கவலைப்படுவான்.

தனிமையில், கட்டிலே தஞ்சமெனக் கிடந்து ரீ.வி. பார்க்கும் மைக்கல் ஒருநாள் பிரெண்டா என்ற, தன்னைப்போல் பெரும் உடலமைப்பைக் கொண்ட பெண், உடல் எடையைக் குறைக்கும் வழிவகை பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டதைப் பார்த்தான்.

அவள்மேல் காதல்கொண்ட மைக், அவள்தான் தனக்குப் பொருத்தமானவள் என்று எண்ணினான். ரீ. வி. நிலையத்தை தொலைபேசியில் அழைத்து அவளுடைய விலாசத்தைக் கோரினான்.

பிரெண்டா மைக்கலைப் பார்த்தபோது இவர் ஒரு சவால் என நினைத்தாள். தன்னால் அவருக்கு உதவமுடியும் என்று தீர்மானித்தாள்

இருவரும் சேர்ந்து தமது எடைக்கு எதிராகப் போரிடத் தீர்மானித்தனர்.

பிரெண்டா மேலும் 252 இருத்தல் எடையைக் குறைக்கத் திட்டமிட்டாள். மைக் படுத்திருக்கும் கட்டிலருகே மற்றொரு பலம் மிக்க கட்டிலைப் போடச்செய்து, இருவரும் சேர்ந்து எடைக் குறைப்பு முறைகளை ஆராய்ந்தனர்.

நான் இதே தோற்றத்துடனிருந்தாலும் என்னை பிரெண்டா மணந்துகொள்வாள் என்று கூறும் மைக், அதுதான் உண்மைக் காதல் என்கிறான்.

நான் வெறும் கொழுத்த மனிதனல்ல. நான் பிரச்சினை ஒன்றைக் கொண்டுள்ள மனித இனம். நான் இந்த உடலில் சிக்கிக்கொண்டேன்; இதிலிருந்து என்னை விடுதலைசெய்ய பிரெண்டாவினால் மட்டும் முடியும்.

ஏனையகாதலர்போல் நாமும் நடந்துகொள்ள விரும்புகிறோம். ஆனால் நாம், உடல்நிறை பெருமளவு குறையும்வரை காத்திருக்க வேண்டும் என்கிறான், மைக்.

— கண்ணன் □

---

### விரைந்து வா . . . !

நண்பா !<br>
நீயேன்<br>
நேற்றைகளை நினைத்தே<br>
நொந்து போகிறாய் ......<br>
வா ...<br>
நானும் நீயும்<br>
நல்ல நாளைகளைத்<br>
தேடுவோம் ...<br>
விரைந்துவா ...<br>
நமக்காகவும்<br>
நமது சமூகத்திற்காகவும்<br>
மேலும் மேலும்<br>
நடக்கவேண்டியிருக்கும்.

— நல்லூர்தாஸ் □

# ஜெகதீஸ்வரி நாகேந்திரன்:

## ஆங்கிலத்தில் இலக்கியம் படைக்கும் ஈழத் தமிழ்ப் பெண்மணி

கலைச்சாரல்

ஜெகதீஸ்வரி நாகேந்திரன் ஆங்கிலத்திலே கவிதை எழுதும் ஓர் ஈழத்துப் பெண்மணி. இவர் சித்திரமும் தீட்டுவார். மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 70களின் கடைக்கூறில் "The Independent" (ரெஜி மைக்கல் என்ற தமிழ்ப் பத்திரிகையாளர் இந்த வார இதழுக்கு ஆசிரியராக இருந்தார்.) போன்ற இலங்கைப் பத்திரிகைகளில் இவர் கவிதைகள் அதிகம் வெளிவந்தன.

பிரிட்டனில் இருந்து ஆண்டுதோறும் வெளியாகும் அனைத்துலகக் கவிதைத் தொகுப்பிலே, இவருடைய கவிதைகள் நான்கு தடவை வெளிவந்திருக்கின்றன.

நியூஸிலாந்திலிருந்து வெளியாகும் "மோஞ" என்ற சர்வதேச கலை விமர்சன ஏடு, 1978ஆம் ஆண்டிலே இவருடைய கவிதைகளைப் பிரசுரித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள இலிஞேய், சிக்காக்கோவிலுள்ள ட்ரைடன் (Triton) கலை, அறிவியல் கல்லூரி ஆண்டுதோறும் நடத்தி வரும் அகில உலகக் கவிதைப் போட்டியிலே, 1980ஆம் ஆண்டு இவரது கவிதை ஒன்று பரிசைப் பெற்றது. "Passage" என்ற வெளியீட்டிலும் இக்கவிதை (பல் பறவைச்சரணாலயம் பற்றியது) பிரசுரமாகியது.

சென்னையிலுள்ள ஆக்க எழுத்துக்கான தாகூர் நிறுவனம் வெளியிட்ட அமல்கோஸின் சர்வதேசக் கவிதைத் தொகுப்பிலும், ஜெகதீஸ்வரியின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இலங்கையின் ஆக்க எழுத்து என்ற ஏட்டிலே, 1984ஆம் ஆண்டு இவருடைய கவிதைகள் சில வெளியாகின.

கடந்த தசாப்த காலத்தில், இவருடைய இயற்கை சம்பந்தமான ஓவியங்கள், இலங்கை தேசிய கலாபவனத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஓர் இந்துவான ஜெகதீஸ்வரி, கொழும்பிலே கல்வி பயின்ருர். இவருக்குப் 17 வயதாய் இருக்கையில், இவருடைய தாயார் தமது 38ஆவது வயதில் இறந்து போனதால், படிப்பைத் தொடர முடியவில்லை. எஸ்.எஸ்.சி. (S. S. C.) பரீட்சையிலே முதலாவது பிரிவில் இவர் சித்தியடைந்திருந்தார். ஆங்கிலம், உலகவரலாறு, இலக்கியம், பண்டைய மேஞட்டுப் பண்பாடு ஆகிய பாடங்களில் விசேஷ சித்தி பெற்ருர். இவரைவிடப் பதின்மூன்று வயது கூடிய ஒரு டொக்ரரை மணஞ்செய்துகொண்டார். இவர்களுக்கு நான்கு புதல்வர்களும், இரண்டு புதல்விகளும் பிறந்தனர். இவர்கள் யாவரும் உயர்தொழில் புரிகின்றனர்.

மணம் முடித்து 25 வருடங்களுக்குப்பின் தான் இவர் எழுதத் தொடங்கிஞர். முதலிலே சிறுகவிதைகள், கட்டுரைகளை எழுதத் தொடங்கிஞர். மனித உரிமைகள், பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் இழைக்கப்படும் அநீதிகள் ஆகியன பற்றி எழுதிஞர்.

தமிழிலே சமீபகால ஈழத்துப் படைப்புகளைப் படித்து வரும் ஜெகதீஸ்வரி, கோகிலா மகேந்திரன், கமலா தம்பிராஜா ஆகிய இரு பெண் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பாராட்டுகிருர்.

1981ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே யாழ்ப்பாணப் பொதுநூலகம் தீ வைக்கப்பட்டபோது அவர் எழுதிய கவிதை வருமாறு:

Brute force and Barbarism
Death valley and Vandalism
Charred bears
Books in Cinders
The soul of a people because a burning brand,

The father's lifeblood ebbed away
When he saw his children in flames.
You decent man of learning

**கே. எஸ். சிவகுமாரன்**

You've seen books burning
The land is filling
with rivers of blood,
The beast of hatred is unleashed
and roams unchecked
The vultures hover above
blood blackened towns
and villages
Rare books irreplaceable
Human flesh in fragments
All lost forever
And voices of doom
Echo beyond the river.

பெரும் பாலான நவீன தமிழ் இலக்கியம் சலிப்படையவைப்பதாக ஜெகதீஸ்வரி கூறுகிருர். "பெரும்பாலான எழுத்தாளர்கள் பூர்ஷுவா பயன் மதிப்புகளைப் பேணுபவர்கள். திரும்பத் திரும்ப ஒரே விஷயங்களைத் தான் அவர்கள் எழுதுகிருர்கள். செக்ஸ் பிரச்சினைகள், விரக்தி (மனமுறிவு), தன்னிரங்கல், பக்தி போன்றவை பற்றியே இவர்கள் எழுதுகிருர்கள்." இவ்வாறு கூறும் ஜெகதீஸ்வரி, இந்தத் தமிழ் எழுத்து, இலங்கைத் தமிழ் எழுத்தா, தமிழ் நாட்டு எழுத்தா என்று குறிப்பிடவில்லை.

பிறமொழியாகிய ஆங்கிலத்தில் எழுதுவதே தமக்கு இலகுவாய் இருப்பதாக ஜெகதீஸ்வரி கூறுகிருர். அதே சமயம் சில தமிழ்ப் பாடல்களைக் குறிப்பாகச் சங்ககாலப் பாடல்களைத் தாம் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதாகவும் அவர் தெரிவிக்கிருர்.

மறைந்த சி. வி. வேலுப்பிள்ளை அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், மலைநாட்டுத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றி அவர் பெரும்பாலும் எழுதிஞர் என்றும் அவர்களுடைய துன்பங்கள், துயர்கள், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி ஆகியவற்றை அவர் சுட்டிக் காட்டிஞர் என்றும், ஜெகதீஸ்வரி குறிப்பிடுகிருர்.

தமிழ் இனத்தைச் சேர்ந்த முதுபெரும் ஆங்கிலப் பத்திரிகையாளரான ரெஜி எஸ். மைக்கல் நடத்திய "தி இன்டிபென்டன்ட்" என்ற ஏட்டிலே 100க்கும் அதிகமான கட்டுரைகளை ஜெகதீஸ்வரி நாகேந்திரன் எழுதியிருக்கிருர்.

ஆர். எஸ். மைக்கல், மேர்வின் டி சில்வா, எஸ். பி. அமரசிங்கம், லூஷியன் ராஜகருணநாயக்க போன்ற ஆங்கிலப் பத்திரிகையாளரின் எழுத்துக்களைத் தாம் விரும்பிப் படிப்பதாகக் கூறுகிருர் ஜெகதீஸ்வரி.

சென்னையிலுள்ள ஆக்க எழுத்துக்கான தாகூர் நிறுவன அதிபர் அமல்கோஸ் இலங்கை வந்தபொழுது தமது நிறுவனத்தில் ஒப்புநோக்காளர் பதவியைத் தந்ததாகவும், ஆனுல் அவருடைய கணவர் டொக்ரர் நாகேந்திரன் அதனை விரும்பவில்லை என்றும் குறிப்பிடுகிருர். இவருடைய கணவர் சில ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார்.

நாகசாகி பல்கலைக்கழகத்தில் பொருளாதார பீடத்திலே விரிவுரையாளராகப் பணிபுரிகிருர், அமெரிக்காவைச் சேர்ந்த கறுப்பர் லீரோய் ரொபின்சன். பொருளாதார பீடம் நான்கு வெவ்வேறு பெயரையுடைய பருவகால ஏடுகளை ஆங்கிலத்தில் வெளியிட்டு வருகிறது. லீரோய் ரொபின்சன். 'இலங்கைக் கலாசாரக் கூறுகள்' என்ற தலைப்பிலே ஈழத்து எழுத்தாளர்கள், கலைஞர்களைத் தபால் மூலம் பேட்டி கண்டு, அவ்வேடுகளில் வெளியிட்டு வருகிருர். அவற்றில் ஒன்ருக ஜெகதீஸ்வரி நாகேந்திரனைப் பேட்டி கண்டார். அந்தப் பேட்டியிலிருந்து பெறப்பட்டவையே இதுவரை நீங்கள் படித்த விபரங்கள். □

## 'திசை'யின் சிறுகதைப் போட்டி இரண்டாம் பரிசுக் கதைபற்றி...

"திசை சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதையைப் படித்ததும் திகைத்துப் போனேன்." – வளாக வீதியிலிருக்கும் 'இரத்ன. விக்ன. ராஜ்.' அவர்கள் போட்டிக் கதைகள் பற்றி திசை ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வாசகமே மேலே தரப்பட்டுள்ளது. கடிதத்தில் அவர் திகைப்புற்றுக் குறைப்பட்டுக் கொள்ள வந்த விஷயம், டானியல் அன்ரனியின் படைப்பான "ஒரு வெறும் மனிதனின் மரணம்" எனும் சிறுகதையும் கலைவாதி கலீல் அவர்களின் இரண்டாவது பரிசு பெற்ற "மையித்துக்கள் துயில்கின்றன" எனும் கதையும் உள்ளடக்க அமைவில் அதிக ஒத்ததன்மை உடையன என்பதுதான். அவரது இந்த வாசகத்தில் ஓரளவு உண்மை உண்டு என்பதை நடுவர் குழு நிராகரிக்கவில்லை.

போட்டிக்கு வந்த கதைகள் யாவும் தனித்தனியாகப் பரிசீலனை செய்யப்பட்டன. பின்னர், பரிசுக் கதைகளைத் தீர்மானிப்பதற்காக இடம் பெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி விடயம் நீண்ட நேர சர்ச்சைக்கு உட்படுத்தப்பட்டது. இதுபற்றி எழுத்துமூல அறிவித்தல் எதுவும் திசையில் வெளியிடப்படாத போதும், திசை அலுவலகத்தில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் உரைநிகழ்த்திய நடுவர்களில் ஒருவராகிய திரு. க. சட்டநாதன் இவ்விடயம் தொடர்பாகக் குறிப்பிட்டது, இரத்ன.விக்ன.ராஜ். தொட்ட பிரச்சினை பற்றி ஏற்கனவே நடுவர்கள் அறிந்திருந்தார்கள் என்பதையே காட்டுகிறது.

"ஒரு சாதாரண மாணவனுன (பட்டப்பின்படிப்பு) என் அறிவுக்கு எட்டியது, துறைபோன நடுவர்கள் கண்ணிற்படாமை அதிசயமே!" — என ஆதங்கப்படும் நண்பர் இரத்ன. விக்ன. ராஜ். அவர்களுக்கு இது விஷயம் தெரியாமற் போனமைக்கான காரணம் உண்டு என்பதை மனங்கொண்டு, ஏன் இக்கதைக்குப் பரிசில் வழங்கப்பட்டது என்பது பற்றித் தெளிவுபடுத்துவது நடுவர்குழுவின் கடமை என்பதை உணர்கிருேம்.

இரு கதைகளிலும் அடிச்சரடாக இழையோடும் கருத்துக்களில் ஒரு பொதுத்தன்மையும் ஒற்றுமையும் காணப்பட்ட போதும், அக்கருத்துக்கள் கையாளப்படும் முறை, கதை நகர்த்தப்படும் பாங்கு, கதை அமைப்பு, பாத்திர உருவாக்கம் போன்றவற்றைக் கருத்தில் எடுத்துப் பார்க்கும் போது கதையில் பொதிந்துள்ள விசேட வேறுபாடுகளைக் கவனம் கொள்ளலாம்.

ஏழ்மையுற்ற ஒருவரின் மரணம்; மரணவீட்டில் மதத்தின் அதிகாரம்; அதற்கு இளைய தலைமுறையினர் காட்டும் எதிர்ப்புக்குரல் ஆகியவை, கதைப் பின்னலில் காணப்படும் ஒற்றுமை எனலாம்.

கதைகள் வளர்க்கப்படும் முறையில் இருகதைகளும் பெரிதும் வேறுபடுகின்றன. 'மையித்துக்கள் துயில்கின்றன'வில் — மரணம் கதை ஆரம்பத்திலேயே சம்பவித்து விடுகிறது. 'ஒரு வெறும் மனிதனின் மரணம்' கதையில் நடுப்பகுதிக்கும் அப்பால்தான் நிகழ்கிறது. டானியல் அன்ரனியின் கதையில் மத அதிகாரத்தை எதிர்ப்பதில் ஒரு கூட்டுணர்வு தென்படுகிறபோதும், பிரதான பாத்திரமான சின்னவன் இவ்வுணர்வு அலைப்புகளில் ஐக்கியப்படாது ஒதுக்கம் கொள்ளும் 'விருத்தெரியாப் பொடியஞக'த்தானிருக்கிருன். ஆனுல் கலைவாதி கலீலின் கதையில் மரணித்த சகாப்தீனின் புதல்வி ஷர்மிலாவிடம் தன்னெழுச்சியாக அவ்வுணர்வு உருவம் கொள்கிறது. தனிநபர் ஒருவர் – வாய்மூடி மெளனித்து நிற்கும் சமூகத்தைப் பார்த்துக் கோபமும், கசப்பான ஒருவகைப் பரிகசிப்பும் கொள்வது கதையில் பொருத்தமாக அழுத்தம் பெறுகிறது.

உண்மையில், 'ஒரு வெறும் மனிதனின் மரணம்' கதையின் முற்பகுதி வேறுவகையாக வளர்ச்சி பெற்றிருக்கக் கூடும். ஆனுல், 'மையித்துக்கள் துயில்கின்றன' அதிகபட்ச இறுக்கமும் செறிவுமுடையதாயிருப்பதால் வேறுவகையாக வளர்ச்சி பெற்றிருக்கக்கூடிய சாத்தியப்பாடு இல்லை என்றே கூற வேண்டும்.

பொதுக் கருத்துக்களைக் கொண்ட படைப்புகளை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்துவதில் கட்டமைப்பு, ஆக்க முறைமை என்பன பிரதான பங்கு வகிக்கின்றன. இவ்வேறுபாட்டினை நடுவர்குழு மனம் கொண்டது. அதனுலேயே 'மையித்துக்கள் துயில்கின்றன' பரிசுக்குரியதாகியது.

— நடுவர் குழு □

### பீதி

யுத்தக்
கொடுஞ் சூறைக்கு
இரையாஞர்
இளைஞர்.

அன்னையர்
மனைவியர்
அழுகின்ருர்
அவர் நினைவால்.

தளிர்த்தது புல்
செத்தவரின்
புதல்வர்களும்
வளர்ந்து விட்டார்.

மணப் பெண்ணை
அன்னையைக்
கவ்விற்று
புதுப்பயம்.

— றசூல் கம்ஸத்தோவ்
தமிழில்:
ஸஹீன் □

## எங்கள் வாழ்வும்...
## எங்கள் வளமும்...

எங்கள் வாழ்வின் களம் விரிந்தது
ஏங்கள் வாழ்வின் கணம் உயர்ந்தது
எங்கள் மனம் பரந்து அகன்றது
எங்கள் உயிர் அமிர்தம் ஆனது.

நாங்கள் ஒன்ருய் கூடியே வாழ்ந்தோம்
நாங்கள் ஆடிப் பாடியே வளர்ந்தோம்
நாங்கள் மோகன இராகம் இசைத்தோம்
நாங்கள் முகாரி இராகமும் பாடினேம்.

எங்கள மொழி உலகு பரந்தது
எங்கள் இனம் கடல் கடந்தது
எங்கள் கலை கடவுளைக் கண்டது
எங்கள் உடல் உழைப்பால் மதர்த்தது.

நாங்கள் வாழ்வை கவிதை ஆக்கினேம்
நாங்கள் உயிரை இசையாய் மீட்டினேம்
நாங்கள் கல்லைக் கடவுளாய் மாற்றினேம்
நாங்கள் தமிழால் காவியம் செதுக்கினேம்.

நாங்கள் பாடினேம் நாங்கள் ஆடினேம்
நாதஸ்வரத்தால் இன்னிசை பரப்பினேம்
புல்லாங்குழலால் உயிரை வருடினேம்
மத்தள அடியால் மனதை உசிப்பினேம்
மேளத்து நாதத்தால் மெய் சிலிர்ப்படைந்தோம்
சலங்கையின் ஒலியால் விதிர் விதிர்ப்
படைந்தோம்.

எங்கள் கலைகள் எங்கும் நிறைந்தது
எங்கள் கலைகள் உணர்வைச் சேர்ப்பது
எங்கள் கலைகள் உயிரை வளர்ப்பது
எங்கள் கலைகள் செயலைப் படைப்பது

— சண்முகன் □

## பிரதியுபகாரம்

பிரதியுபகாரம் செய் !

அது
மனிதன் பண்பாடு.

ஓரவஞ்சகமாய் நடந்து கொள்ளாதே
நன்மைக்கு மட்டும்
பிரதியுபகாரம் செய்வதால் !

ஓரவஞ்சகம் !
அதுவும் மனிதப் பண்பின் விரோதி

தண்ணீருக்கு தண்ணீராய்
நெருப்புக்கு நெருப்பாய்
நன்மைக்குப் போலவே
தீமைக்கும் பிரதியுபகாரம் செய் !

பன்னீர் அடிப்பவனுக்கு
பன்னீரை
சிறுநீர் தெளிப்பவனுக்கு
சிறுநீரைப்
பானற தெறிக்கிறது

இயற்கை எப்போதும்
நிதானமாய்த் தான் இருக்கிறது.

உன்னையும் தன்னுள் அடக்கிய
இயற்கைக்கு முரணய்
ஏன் நீ மட்டும் ?

தண்ணீருக்குத் தண்ணீராய்
நெருப்புக்கு நெருப்பாய்
பிரதியுபகாரம் செய் !

— எஸ். பி. சிவனேஷ் □

## அறிந்த சுருக்கம்

எம்மைச் சூழ தடியுடன் பலபேர்..!

நான் சாகப் பயந்தேன் ...,
நண்பர்களும் சாகப் பயந்தார்கள் ...,
அயலவர்களும் சாகப்பயந்து
சந்தர்ப்பங்களில்
ஒழிந்து கொண்டார்கள் ... !

இப்போது —
சாகப் பயந்த அனைவருமே
ஒவ்வொருவராகச்
செத்துக் கொண்டிருக்கிருேம் ...!!

— நற்பிட்டிமுனைபளீல் □

# தூவானம்

- கலை இலக்கியக் களத்தின் ஆய்வரங்கு
- வாசிக்கிறவரெல்லாம் வாசகரல்ல

1987—88 இல் ஈழத்தில் வெளிவந்த தமிழ் நூல்களின் ஆய்வு என்றதலைப்பில்,இரண்டு நாள் ஆய்வு அரங்கும் கலந்துரையாடலும், இரண்டு கிழமைகளின் முன்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது. கலை இலக்கியக் களம் அமைப்பினர் இதை ஒழுங்கு செய்திருந்தனர்.

பல்வேறு பிரிவுகளில்அமைந்த 15ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன பொருத்தமானவர்களைக் கொண்டு ஏற்கனவே கட்டுரைகளை எழுதிப்பெற்று, இவ்வாருன ஆய்வரங்கினை ஒழுங்கு செய்வதில் பல சிரமங்கள் உண்டு. ஆய்வரங்க நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ததோடு, வருகை தந்திருந்தோருக்குச் சிற்றுண்டி, தேநீர், மதிய உணவு போன்றவற்றையும் சிறப்புற வழங்கி உபசரித்த சிரமத்தையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இவற்றையெல்லாம் நன்கு நிறைவேற்றிய களத்தினரையும், அவர்களிற்கு உறுதுணையாயிருந்த ஏனையோரையும் எவ்வளவு பாராட்டினலும் தகும்.

ஆய்வுக் கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் எல்லாக் கருத்துக்களும் எல்லோரையும் திருப்திப்படுத்திவிட முடியாது என்பது உண்மை. ஆயினும் அவையோர் குறிப்புரையின்போது ஒரு சிலரே கலந்து கொண்டனர். அதிலும் இரண்டாம்நாள் பொதுக் கலந்துரையாடலின்போது தான், சற்று அதிகமானேர் கலந்துகொண்டனர். அப்போது 'சூடான' கருத்துக்களும் வெளிப்பட்டன. கட்டுரைப் பிரதிகள் முன்னதாகவே சபையோருக்கு வழங்கப்பட்டிருந்தால், அவற்றை வாசித்துவிட்டுக் கலந்துரையாடலில் கலந்து கொள்வது சுலபமாக இருந்திருக்கும். அத்தோடு கட்டுரைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்து, ஒவ்வொருவருக்கும் கொடுத்த 20 நிமிட நேரத்தைச் சிறிது அதிகரித்திருந்தால்.பல சிரமங்களைத் தவிர்த்திருக்கலாம். நேரம் போதாமல், கட்டுரை படித்தவர்கள் அந்தரப்பட்டார்கள். குறுகிய நேரத்துள் அதிக எண்ணிக்கையிலான கட்டுரைகளைக்காது கொடுத்துக் கேட்கவேண்டும் என்றிருந்தமை, பார்வையாளர்களிற்குச் சுமையாகவும் அமைந்துவிட்டது. ஆய்வரங்கு என்று வரும்போது ஒரு நாள் நிகழ்ச்சியாக அமைவதே நல்லதென நினைக்கிறேன். உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் சோர்வின்றி, மிக்க அவதானத்துடன் சபையோர் பங்குகொள்ள அது உதவியாயிருக்கும்.

கலை, இலக்கியக் களம் அமைப்பு 1986 இல் இருந்து செயற்பட்ட விபரங்கள் அடங்கிய சிறு பிரசுரமொன்று கைக்குக் கிடைத்தது. அதைப் படித்தபோது, இந்த அமைப்பின் செயற்பாட்டுத் திறன் மீது மதிப்புக்கலந்த பாராட்டுணர்வே எழுந்தது. தொடர்ந்து இவ்வாறு இயங்கி வரும் அமைப்புக்கள் எம்மிடம் அதிகம் இல்லை. இரண்டாம் நாள் கலந்துரையாடலின்போது, உணர்ச்சி வசப்பட்ட ஒரு எழுத்தாளர், ''இது ஒரு அமைப்பே அல்ல'' என்று குறிப்பிட்டது சரியானதல்ல ; உணர்ச்சி வசப்பட்டதால்தான் அவர் இவ்வாறு பிழையாகக் கூறியிருக்கவேண்டும்.

எது எப்படியிருந்தபோதிலும், களம் தொடர்ந்தும் தனது வழியில் செயற்படுமென எதிர்பார்க்கலாம்.

"எழுதுகிறவரெல்லாம் எழுத்தாளரல்ல என்பது போல், வாசிக்கிறவரெல்லாம் வாசகர் அல்ல'' என எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒருமுறை குறிப்பிட்டார்.

# நிலாம்பரன்

உயர்ந்த இலக்கிய இரசனை என்பது நல்ல நூல்களுடனை பரந்த அளவிலான — தொடர்ச்சியான பரிச்சயத்தினலும், சொந்த அனுபவங்களினலும் பக்குவமடைகிறது. பொழுதுபோக்கு மனுேபாவம், மேம்போக்கான இரசனை, உணர்வுச் செறிவினுள் அமிழமுடியாத மந்த மனேநிலை, வேறு கலை வடிவங்களில் அக்கறையின்மை என்பன இந்த உயர்ந்த இரசனைக்கு நிச்சயம் உதவப்போவதில்லை.

சாமானியர்கள் சாமான்யப் படைப்புகளில்தான் திருப்தியுறுவார்கள். குமுதம், ராணி, கல்கி, ஆனந்த விகடன் இரசிகர்கள்–சாண்டில்யன்களை, புஷ்பா தங்கதுரைகளை, சுஜாதாக்களை, ராஜேந்திரகுமார்களை, குரும்பூர் குப்புசாமிகளைத் தான் இரசிப்பார்கள். தமிழை வளப்படுத்தும் ஜானகிராமன், சுந்தரராமசாமி, மௌனி, ஷண்முகசுந்தரம், அசோகமித்திரன், வண்ணநிலவன், பாவண்ணன், அஸ்வகோஷ் போன்ற படைப்பாளிகளின் எழுத்துக்கள் அவர்களுக்குச் சுவாரஸ்யம் தருபவையாக இராது. மாருக, போர் அடிப்பதாகத்தான் இருக்கும்; 'என்ன சார் ஒண்ணுமே புரியலயே?' என்றுதான் சொல்வார்கள். போர் அடிப்பதாயும் புரியவில்லையென்றும் கூறும் இந்த "இரசிகர்கள்'' பல இலட்சக்கணக்கில் இருந்த போதும், உண்மை இவர்களுக்கு எதிர்ப்பக்கத்தில் தான் இருக்கிறது. இலக்கிய வரலாறு இதை உறுதிப்படுத்தியபடிதான் நகர்ந்து செல்கிறது, இந்த இலட்சக்கணக்காஞேர் தமது 'மந்த நிலை'க்காக ஒருபோதுமே பெருமைப் பட முடியாது.

குமுதம், ஆனந்தவிகடன், கல்கி, எழுத்துக்களை — எழுத்தாளர்களைக்கிண்டல் பண்ணும் எழுத்தாளர்கள் பலர் இங்கு இருக்கிருர்கள். ஆனல் துரதிர்ஷ்டவசமாக அவர்களிற் சிலர் உயர்ந்த இரசனை பற்றி அக்கறை கொள்பவர்களையும், நல்ல எழுத்தாளர்களையும், நல்லபடைப்புகளையும்கிண்டல் பண்ணத் தொடங்கியிருக்கிருர்கள். (!! ?). 70 களிலேயே தமிழ்நாட்டிலும் இங்கும் தரமான விமர்சகர்களால் நிராகரிக்கப்பட்டு விட்ட மு. வ., காண்டேகர் பாணியில், 1989 இலும் '' பொன்மொழிகளை'' யும் உளவியல் மேற்கோள்களையும் கொட்டி எழுதும் ஒரு எழுத்தாளர், ரஞ்சகுமாரின் ' கோசலை ' சிறுகதை என்ன கூறுகிறதென்று தனக்கு விளங்கவேயில்லை என்று, அண்மையில் கூட்டமொன்றில்பெருமைப்பட்டுள்ளார். 'பொப் பாடல்கள் போல் ரஞ்சகுமார் கோஷ்டியினரின் கதைகள் இப்படித்தான்' என்றும் ஒரு கிண்டல். ரஞ்சகுமார் இன்றுள்ள சிறந்த எழுத்தாளரில் ஒருவர். 'கோசலை' சிறுகதை அண்மைக் காலப் போராட்டச் சூழலையும். யாவருக்கும் பரிச்சயமான அவல உணர்வுகளையும் ஆற்றலுடன் வெளிப்படுத்தி, காலத்தின் கலைப் பதிவெனப் பாராட்டுப் பெற்ற கதை, இந்தக் கதையே விளங்கவில்லையென்ருல், இந்த எழுத்தாளர் பேனையை எறிந்துவிட்டுப் போய் ஏதும் சுவருடன் முட்டிக் கொள்ளலாம். இன்னெரு நல்ல கதையைப் படித்தபோதும், தூக்கம்தான் வந்தது என்றும் அவர் சொல்லியுள்ளார். இன்னெரு சஞ்சிகையில் சில நல்ல கதைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில்'ஒரே இழுவல்; அறுவை' என ஒருவர் (இளம் நாவலாசிரியர்?) குறிப்பிட்டுள்ளார். குமுதம், ஆனந்தவிகடன் இரசிகர்கள் நல்ல படைப்புகளைப் பற்றிச் சொல்வதைத் தான் இந்த '' எழுத்தாளர்களும் '' சொல்கிருர்கள்.

ஆனல் இதில் வேடிக்கை என்னவென்ருல், நல்ல படைப்புகள் தங்களிற்கு விளங்கவில்லையென்பதையும் போர் அடிப்பதையும், இவர்கள்தமது இரசனை முதிர்ச்சிக்கு ஆதாரம்போல் பெருமைப்பட்டுக் கொள்வதுதான் !!

இந்த எழுத்தாளர்களிற்கு ஒன்று சொல்லலாம். உங்கள் படைப்புகளை ' குமுதம் ' இரசிகர்களிடம் கொடுத்துப் பாருங்கள். நீங்கள் முன்பு சொன்னதையே உங்களுக்கும் சொல்வார்கள்: "போர் அடிக்கிறது; ஒரே அறுவை, இழுவல்......'' என்று. அப்படியல்லாது அவர்கள் பாராட்டினலும் நீங்கள் பெருமைப்பட முடியாது : ஏனென்ருல், உங்களின் தரம் குமுதத்தை ஒத்ததுதான் என்று ஆகிவிடுமே! □

## அமைதி நிலவு

அமாவாசை இரவினில்
அமைதி நிலவைத் தேடிடும்
அற்ப மானிடமே
அழிவின் பாதையில்
நின்று கொண்டு
அமைதி என்ருல் ...
அது தோன்றிவிடுமா ?
ஆனல்
என்ருே ஓர் நாள்
அமைதி நிலவு தோன்றும்
அன்றுதான் மானிடத்தின்
பௌர்ணமி நாள்.

— இளியூர்நிக்ஸன் □

திசை THISAI

சிறுகதைப் போட்டி
ஆறுதல் பரிசுக்கதை
— 4 —

மான்குட்டி போல் அவள் துள்ளித் துள்ளி ஓடி வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு ஆகக் கூடினால ஆறு வயது தான் இருக்கும். அவள் பின்னால் அவளை எட்டிப் பிடிப்பது போல், ஆனால் அவளின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாததால் சற்றுப் பின்தங்கியவனாக, அவளை விட இரண்டு வயது சிறியவனான அவளின் தம்பி ஓடி வந்து கொண்டிருந்தான். அவள் வாய் ஏதோ ஒரு பாடலை மழ

# மனிதனைத் தேடி...

லைக் குரலில் மெல்ல மிழற்றிக் கொண்டிருந்தது. அதற்கு இசைவாக அவள் தம்பியும் ராகமிழுத்தபடி ஓடி வந்து கொண்டிருந்தான். அவர்களின் களங்கமற்ற மனங்களைப் போலவே நீலவானமும் நிர்மலமாகக் காட்சியளித்தது. பரந்து விரிந்து கிடந்த வயல் வரம்புகளினூடாக, தடுமாறுமல்· இலாவகமாக, இலயம் பிசகாமல் அவர்கள் ஓடிக் கொண்டிருந்தனர்.

ஜி. பி. வேதநாயகம்

ஓடிய களைப்பில் அவள் நின்று திரும்பிப் பார்த்தாள். தூரத்தே, தென்னை மரங்களாலும் வாழை மரங்களாலும் சூழவர மறைக்கப்பட்ட அவர்களின் குடிசை — வைக்கோல் வேயப்பட்டு மஞ்சளாகத் தெரிந்தது. தாயின் குரல் எட்ட முடியாத தூரத்திற்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அம்மாவை 'உச்சிப் போட்டு' ஓடி வந்து விட்டதை நினைக்க அவளுக்கு சிரிப்பு வந்தது. அவள் சிரித்தாள். அரிசிப் பற்கள் பளீரிட அவள் வாயை அங்காந்தபடி அழகாக, ஆனந்தமாகச் சிரித்தாள். அவள் சிரிப்பதைக் கண்டு அவள் தம்பியும் சேர்ந்து சிரித்தான். அவனது சிரிப்புக்குக் காரணம் வேண்டியிருக்கவில்லை.

வீட்டிலிருந்தால் தூளியிற் தூங்கும் சின்னத் தங்கையைப் பார்த்துக் கொள்ளும்படி அம்மா சொல்லுவாள். அதில் அவளுக்கு இலயிப்பில்லை. அழுதபடி அல்லது மூத்திரம் பெய்தபடி இருக்கும் தங்கையைத் தூக்கி ஆராட்டுவதைவிட இப்படி உல்லாசமாகத் தம்பியுடன் ஓடித் திரிவதில்தான் அவளுக்கு பிரியமதிகம். நல்ல வேளையாக இன்று அப்பாவும் வீட்டிலில்லை. விதை நெல்லு வாங்குவதற்காகவென்று அவர் விடியற் காலையிலேயே புறப்பட்டு 'ரவுனு'க்குப் போய்விட்டிருந்தார். அவர் இருந்தால் ஒன்றில் அவர் முன் புத்தகத்துடன் இருக்க வேண்டும் அல்லது தோட்டத்தில் அவருடன் கூடமாட ஒத்தாசைக்கு நிற்க வேண்டும். இரண்டுமே அவளுக்கு அலுப்புத் தருபவை.

இன்று அவளுக்கு சுதந்திர நாள். அவள் உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சிப் பெருக்கிற்கு எல்லையே இல்லை. அவள் மீண்டும் ஓட ஆரம்பித்தாள். எதிரே, கரும்பச்சையாகக் கவிந்து மறைத்திருந்த காட்டில் இடைக்கிடையே தலைநீட்டிய 'சூரியன்குஞ்சுகள்' அவளை ''வா வா''வென அழைப்பது போல் ஒளி ஜாலங் காட்டின. அந்தக் காட்டைநோக்கித்தான் அவள் ஓடிக்கொண்டிருந்தாள். அங்கேயெல்லாம் போகக் கூடாதென்று தாய் அவளை நெடுகிலும்எச்சரித்தபோதிலுங் கூட அங்கே சென்று, தாழ வளைந்து நிற்கும் மரக்கொப்புகளில் ஏறிக் குதிப்பதுதான் அவர்களுக்கு அலுக்காத ஒரே விளையாட்டு.


காட்டை அண்மிய போது அவள் ஓட்டம் தடைப்பட தீடீரென அவள் நின்றாள். அவள் பார்வை தூரத்தே நிலை குத்திப் பதிந்தது. அவள் பார்வை சென்ற திசையில் தம்பியும் பார்த்தான். அவன் கண்களில் திகைப்பும் மிரட்சியும் கலவையிட்டன. எதிரே ஓர் உருவம் நிலத்தில் மல்லாந்தபடி கிடந்தது.

''வாக்கா திரும்பிப் போயிடலாம்'' அவள் சட்டையைப் பிடித்து இழுத்தபடி தம்பி நின்றான்.

''பொறுடா என்னன்னு பார்ப்போம்.'' அந்த மனிதன் யார்? அவன் ஏன் அப்படிக் கிடக்கின்றான்? என்பதை அறிந்து விட அவாவும் உள்ளார்ந்த ஆர்வத்துடன் அவள் மெல்ல மெல்ல அம் மனிதன் படுத்துக் கிடக்கும் இடத்தை நோக்கி அடியெடுத்து வைக்கலானாள்.

கிட்டச் சென்று பார்த்த போதுதான் அவள் நெஞ்சைப் 'பக்கென' பயம் கௌவியது. அதைத்து வீங்கிய முகமும், இரத்தம் வடிந்து உறைந்த உதடுகளும், சிராய்ப்புற்றுக் குருதி பெருகும் உடம்பும் அலங்கோல ஆடையுமாக அண்ணாந்து கிடந்த அவன் தோற்றம் — அந்நிசப்தவனத்தின் பயங்கரத்தை மிகைப்படுத்துவதாக இருந்தது. திரும்பி ஓடி விடுவோமா என்று தோன்றிய எண்ணத்தை அவள் செயல்படுத்த முனைகையில், அம் மனிதனின் முனகலோசை அவளைத் தடைப்படுத்தியது. அவள் திரும்பிப் பார்த்தாள். இப்போ அவன் கண்கள் சிறிது திறந்த மாதிரித் தெரிந்தன. தலையைத் தூக்க முயன்று, முடியாமல் அவன் தலை மீண்டும் மண்ணில் மோதியது. அவன் அனுங்கத் தொடங்கினான். அவளுக்கிப்போ பயம் போய் விட்டது. அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனுக்காக அழவேண்டும் போல மனத்தில் ஓர் இரக்க உணர்வும் சுரந்தது. அவனுக்குத் தான் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று யோசித்தாள். அவளின் அப்பா சிலவேளைகளில் நல்ல குடிவெறியில் இப்படிக் கிடந்து புலம்பும் போது, அம்மா முகத்தில் தண்ணீரால் விசிறியடித்து உணர்வு வரப் பண்ணுவதை அவள் கண்டிருந்தாள்.

''வாடா தண்ணி எடுத்துக் கொண்டு வருவம்.'' தம்பியை இழுத்துக் கொண்டு அவள் காட்டுப் பாதையை விலக்கியபடி ஓடினாள். மாரியில் சலசலத்தோடும் சிற்றருவி ஒன்று ஓடிய சுவடு மட்டும், கோடு கிழித்தாற் போல் வெண் மணற் பரப்பிட்டுக் காணப்பட்ட ஓரிடத்தில் பரபரவென அவள் மண்ணைத் தோண்டலானாள். பூமாதேவி கருணைக் கண்ணைத் திறந்தாள் போலும். குட்டை நீரால் நிரம்பியது. காட்டுச் செடியொன்றின் பெரிய இலையொன்றைப் பிடுங்கித் தன் தம்பி கையில் நீரைக் கொள்ள ஏற்றவாறு வளைத்துக் கொடுத்தாள். சின்னஞ் சிறு கைகளாற் குட்டையிலுள்ள நீரைக் கோலிக் கோலி இலையை நிரப்பினாள். அவள்மனம் போல் இலையும் நீரால் நிறைந்து தளும்பியது. தம்பியிடமிருந்து அதை வாங்கிக் கொண்டு, ஊற்றுப்படாமல் பதனமாக அடியெடுத்து நடந்து அம்மனிதன் விழுந்து கிடந்த இடத்தை அடைந்தாள்.



உணர்வு வரப்பெற்று அவன் எழுந்து பார்த்த பொழுது அவர்கள் அங்கிருக்கவில்லை. இரண்டு விளாம்பழங்களும் இரண்டு மாம்பழங்களும் மட்டும் அவன் தலைமாட்டில் காணிக்கைப் பொருட்கள் போல் வைக்கப் பெற்றிருந்தன.

அவள் மீண்டும் தம்பியுடன் வீட்டினுள் ஓடி நுழைந்த போது தாயின் அர்ச்சனைக் குரல் தான் அவளை வரவேற்றது.

''ஏண்டி நீ பாட்டுக்கு சுத்திட்டு இப்பதான் வர்றியா. போதாததுக்கு அவனை வேற இழுத்துக்கிட்டுப் போ. நான் தான் தங்கச்சியயும் பாக்கணும், சமையலும் செய்யணும் தோட்டத்தையும் பாக்கணும். மூதேசி, நீ எதுக்கடி பொறந்தே. ஓடுகாலிப் பொணமே நீ செத்தாத் தாண்டி எனக்கு நிம்மதி'' பொரி பொரி என்று அவள் பொரிந்து தள்ளினாள். விழுந்து கிடக்கும் மனிதனைப் பற்றி அம்மாவிடம் சொல்ல வேண்டுமென நினைத்துக் கொண்டு வந்தவள் வாயை மூடிக் கொண்டாள். பசி வயிற்றைக் கிள்ளியது. பேசாமல் குசினிக்குள் போய்க் குந்திக் கொண்டாள்.

''சனியனே இந்தா திண்டு தொலை'' என்ற வசவுடன் அம்மா பீங்கானை அவள் முன் வைத்தாள். சாப்பிடும் போது அம் மனிதனின் முகம் தான் அவள் கண்முன் நிழலாடியது. ''பாவம் அவனுக்குப் பசிக்குமே'' என்று நினைத்துக் கொண்டாள். சாப்பிட்டுக் கைகழுவியானதும் மீந்த சோற்றை ஒரு வாழை இலையிற் சுற்றிக் கொண்டாள். மெதுவாக நழுவி விடலாமென்று தான் அவள் பார்த்தாள். ஆனால் படலையைத் திறந்த போது அது 'கிரீச்'சிட்டு அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது. தம்பிக்குச் சோறு தீத்திக் கொண்டிருந்த அம்மா எழுந்து வர முடியாததால் அங்கிருந்தே சத்தமிட்டாள்.

''அந்த சொறிநாயோட சங்காத்தம் வச்சுக்காதேன்னு கேட்க மாட்டேன்கிறே இரு இரு அப்பா வரட்டும். கொல்ல சொல்றன் உன்னை'' உச்சஸ்தாயியில் கத்தும் போது அவள் குரல் விகற்பமுற்றுக் கீச்சிட்டது.

''இது அதுக்கில்லேம்மா'' என்றபடி அவள் பதிலுக்குக் காத்து நிற்காமல் ஓடியே போய் விட்டாள்.

அவள் கொணர்ந்து தந்த சோற்றை, அகோரப் பசியுடன் 'அவுக் அவுக்' கென அவன் அள்ளி விழுங்கியபோது, அவள் தூரத்தே நின்று அவனையே வியப்புடன் பார்த்தபடி இருந்தாள்.

பசி சொஞ்சம் ஆறியதும் நன்றியுணர்வுடன் அவன் அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தான். வெடித்த உதடுகளுக்கிடையே அச் சிரிப்பு வெகுளித்தனமாக 'வெளிப்பட்டது. அவன் சிரித்ததைக் காண அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது. தைரியமாக அவனை நெருங்கி, ''நீ யார்? எங்கிருந்து வந்தாய்?'' என்று கேட்டாள். அவள் கேள்வி அவனுக்குப் புரிந்தது. ஆனால் மொழி புரியவில்லை. இருவரும் இருவேறு மொழியினர். ஆனால் மொழிக்கப்பாற்பட்ட மனித உணர்வு அவர்களை இணைத்திருந்தது.

அவனது மகளுக்கும் இவளுடைய வயசு தான் இருக்கும். பூ உதிர்வது போல் என்ன மாதிரிச் சிரிப்பாள். வாய் ஓயாமல் எந்நேரமும் எத்தனை 'கிழவிக் கதைகள்' சொல்வாள். 'தான் அப்பா பிள்ளை' என்று சொல்லி செல்லங் கொட்ட மடி மீது ஏறிக் குந்திக் கொள்வாளே. அவளை...... அவளை... ..

அவன் நினைவுச் சக்கரம் பின்னோக்கிச் சுழல ஆரம்பித்தது. அன்று பியதாஸாவின் திருமண அழைப்பிதழ் கையில் கிடைத்தபோது அவன் எவ்வளவு சந்தோஷப்பட்டான். கொழும்பில் அவன் வேலை செய்த காலத்தில் அவன் தங்கியிருந்த வீட்டுக்காரரின் மகன் தான் பியதாஸ. அவன் ஒரு யதார்த்தவாதி. ஒத்த உணர்வுகள் கொண்டோரிடையே நட்பு மலர மொழி ஒரு தடையல்லவே. தியேட்டர், கடற்கரை என்றெல்லா இடமும் அவர்கள் இணைந்தே திரிந்தார்கள். யாழ்ப்பாணத்துக்கு அவன் மாற்றலாகிச் சென்ற பின்னர் கூட அவர்கள் தொடர்பு அறுந்து விடவில்லை. அவனது திருமணத்தின் போது பியதாஸா நாலு நாள் அவன் ஊரில் வந்துநின்று ஒரு 'கலக்குக் கலக்கிப்' போட்டுத்தான்போனான். வழமைபோல் ட்றெயினில் அன்றும் நல்ல 'கிரவுட்' தான். அதில் மனைவிக்கும் பிள்ளைக்குமாக இடமெடுத்துக் கொடுத்து விட்டு, வாசலிற் கொக்குத் தவமியற்றியபடி நின்ற அவன், பியதாஸாவுடன் கழித்த பசுமையான நாட்களைப் பற்றிய நினைவுகளில் மகிழ்ந்து சுகித்திருந்த வேளையில் தான் அந்த எதிர்பாராத சம்பவம், மதுவைப் போல மொழியுங் கூட எவ்வளவு அனர்த்தங்களை விளைவித்து விடலாம் என்று உணர வைத்த இரத்த வெறியாட்டம் நடந்தது.

தனது மகள் யன்னலால் தூக்கி எறியப்பட்ட போது என்ன நடக்கிறதென்று அவனால் உணர முடியவில்லை. மனைவி துகிலுரியப்பட்டபோது அவன் ஓடிக் கொண்டிருந்தான். உயிரைக் கையிற் பிடித்தபடி கண்மண் தெரியாத வேகத்தில் ஒரு பைத்தியக்காரனைப் போல பயந்தடித்து காட்டை ஊடறுத்தபடி அவன் ஓடிக் கொண்டிருந்தான். இந்த இரண்டு நாட்களும் அவன் அவனாகவே இல்லை. இப்போது தான் தெளிவாக அவனால் சிந்திக்க முடிகிறது.

'சீ, கேவலம், இந்த உயிரைக் காக்கவா நான் இப்படி ஓடிவந்தேன்?' நினைக்கும்போது அவனுக்குத் தன் மீதே வெறுப்பு வந்தது. அவன் கண்களினின்றும் உவர்நீர் ஊற்றுக்கள் உதயமாயின. அவன் கேவிக் கேவி அழத் தொடங்கினான். பார்த்துக் கொண்

(14ஆம் பக்கம் பார்க்க)

# மக்களை மயக்கும் பறக்கும் தட்டுகள்

'பறக்கும் தட்டு' இந்த இருபதாம் நூற்றாண்டில் பல் துறை விஞ்ஞானிகளுக்குப் புரியாத புதிராக இருக்கின்ற வஸ்து. விஞ்ஞானம் சூரிய மண்டலத்தின் எல்லையைத் தொடுமளவிற்கு முன்னேறியுள்ளபோதும், விஞ்ஞானத்திற்கு சவால் விடுகின்றது இப் பறக்கும் தட்டு.

1947 ஜூன் மாதம் அமெரிக்காவின் கென்னத் அர்னோல்ட் என்ற வர்த்தகர் ரேனியர் மலைத்தொடரிற்கு அண்மையில், இரவு நேர விமானப் பயணத்தின்போது கண்ட ஒளிரும் பறக்கும் வஸ்துக்களே, இந்த நூற்றாண்டின் முதல் பறக்கும் தட்டுச் செய்தியாகும். இதனைத் தொடர்ந்தெங்கும் பறக்கும் தட்டுத் தகவல்கள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. பலர் பார்த்ததாகக் கூறிய தகவல்கள் பிரசுரமானபோதும், அது பற்றிய ஆதாரபூர்வமான தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இத் தகவல்களைக் கண்டு 'இவை தம் பெயர்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகி தாம் பிரபலமாக வேண்டுமென்ற எண்ணத்தில் பலரும் வெளியிட்ட கட்டுக்கதைகள் என, பல விண்ணாய்வாளர்கள் கேலி செய்தனர். அமெரிக்காவில் ஆரம்பமான பறக்கும் தட்டு விடயம் பல நாடுகட்குப் பரவியது; அந்நாடுகளின் பத்திரிகைகள் இத்தகவல்களை வெளியிட்டன.

பாமரமக்கள் முதல் படித்த மனிதர்வரை பறக்கும் தட்டுகளைப் பார்த்ததாகக் கூறினர். அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த 'ஜிம்மிகாட்டர்' 1969 ஆம் ஆண்டு, ஜோர்ஜியா மாநிலத்தின் 'லீயரி' என்னுமிடத்தில், வானில் நீலம் சிவப்பு வர்ணங்கள் கூடிய பறக்கும் வஸ்து ஒன்று பறந்ததைப் பார்த்தாராம்.

இச் செய்தியைக் கேட்ட விண்ணாய்வாளர்கள், அது பறக்கும் தட்டல்ல புதன் கிரகம் எனக் கூறிவிட்டனர். இது ஒரு சமாளிப்பே தவிர, உண்மையான காரணமன்று. புதன்கிரகம் சூரியனுக்கு அண்மையில் உள்ள கிரகம். கார்ட்டர் கூறிய தட்டு சந்திரனை விடச் சற்று சிறியதாம். புதனையடுத்து வெள்ளிக் கிரகம் அமைந்துள்ளது; இது பூமிக்கு அண்மையிலுள்ளது. இக்கிரகம் பூமிக்கு ஒரு பொட்டாகத் தெரியுமே தவிர, சந்திரனுடன் ஒப்பிடுமளவிற்குப் பெரிதாகத் தெரிவதில்லை. இவ் வெள்ளிக் கிரகமே தெளிவாகத் தெரியாதபோது, பூமியிலிருந்து தொலைவிலுள்ள புதன்கிரகம் எப்படிச் சந்திரன் அளவிற்குத் தெரியும்?

இப்படித்தான், அநேகமான தகவல்களுக்கு விண்ணாய்வாளர்கள் சரியான தகவல்களைக் கூறமுடியாது மழுப்பி விடுகின்றார்கள்.

மக்கள் பார்த்ததாகக் கூறிய தகவல்களை வைத்து ஆய்வதற்காக, பல நாடுகள் விசாரணைக் குழுக்களையமைத்தன.

அமெரிக்காவின் விண்ணாய்வு நிறுவனமான 'நாஸா' இதற்கு UFO எனப் பெயரிட்டு தகவல்களைச் சேகரித்தது. Unidentified Flying Object என்ற ('அடையாளம் காணப்படாத பறக்கும் வஸ்துகள்') தொடரின் சுருக்கமே UFO. 1957 ஆம் ஆண்டில் மட்டும் 1178 தகவல்கள் பதிவாகியுள்ளன. இதில் 701 தகவல்கள், அவ்வாண்டின் ஒக்ரோபர் டிசம்பர் மாதங்களுக்கிடையில் பதிவாகியவை. இன்றுவரை சுமார் 80,000 தகவல்கள் நாஸாவில் பதிவாகியுள்ளன. இவற்றில் சிலவற்றுக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன; அவற்றில் சில இவை.

**தி. தவபாலன்**

பல நாடுகளில் பறக்கும் தட்டுகளால் கிராமங்கள் அழிக்கப்பட்டன. கால்களின் துணையுடன் பூமியில் தரையிறங்கி புதிய கதிர்வீசலால் வயல்களில் பயிர் செய்ய முடியாதபடி செய்தன. பறக்கும் தட்டு வாசிகள், பலரை மயக்கி ஆய்வுகளைச் செய்தனர். வெகு அண்மையில் பிரெஞ்சுப் பெண்மணி ஒருவரை மயக்கி, அவரைச் செயற்கையாகக் கர்ப்பம் தரிக்கச் செய்ததாகவும் அவருக்குப் பெரிய காதுகளுடன் விகாரமான குழந்தை பிறந்ததாகவும், பல பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாயின. ஹிப்னடிசத்தில் ஒருவரின் உள் மனத்தை அறிய முடியும். ஹிப்னடிசம் மூலம் அப் பெண்மணியை ஆராய்ந்தபோதும், பறக்கும் தட்டுச் செயற்கைக் கர்ப்பத்தையே கூறியுள்ளார்.

இதுபோல பல ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்துள்ளன. 1978 இல் இலங்கையின் ஹெந்தலையிலும் இது தெரிந்ததாம்.

பறக்கும் தட்டு நடமாட்டம் அதிகமாயுள்ள இடத்தை ஆராயச்சென்ற பல விமானங்கள் மர்மமானமுறையில் வானில் மறைந்தன.

ஆரம்பகாலத்தில் இத்தட்டுகள் மிகுந்த ஒளிர்வுடையனவாக இருந்தன. அதனால் அதனைப் படமெடுக்க முடியவில்லை எனக் கூறினர். பிற்காலத்தில் அவை படம்பிடிக்கப்பட்டன. பல தெளிவற்றும், அலங்கோலமாகவும் இருந்தன. இப்படங்கள் சில இயற்கை நிகழ்வுகளைக் காட்டின.

பிரேசில் நாட்டில் ஒரு முறை காற்றின் காரணமாக முகில்கள் வட்டமாகத் திரண்டு காணப்பட்டன. அதை அவர்கள் பறக்கும் தட்டு என நம்பினர்.

ஒரு தடவை கடற் பறவைகள் வானில் பறந்து சென்றன. அவை பறந்த கோணம் பல தட்டுகளை ஒத்திருந்தன. அதையும் பறக்கும் தட்டுகள் என நம்பிப் பலர் ஏமாந்தனர்.

இப்படிப் பறக்கும் தட்டு என ஏமாற்றிய இயற்கை அம்சங்களும் உண்டு.

வானில் சென்ற விண்வெளி வீரர்கட்கும் இத்தகைய தட்டுகள் தென்பட்டன. பூமியிலிருந்த ரேடர்களிலும் அவை தட்டுப்பட்டன என தரைக் கட்டுப்பாட்டு நிறுவனங்களும் கூறின. இவ்வடிவம் பலதரப்பட்ட தகவல்கள் ஆதாரபூர்வமாகக் கிடைத்ததும், பன்னாட்டு விஞ்ஞானிகள் பல முடிவுகளைக் கூறினர்.

பறக்கும் தட்டுகள் பூமியில் நாட்டுக்கு நாடு உளவுபார்ப்பதற்காக விடப்பட்ட சாதனங்கள் என, ஒருபகுதியினர் கூறுகின்றனர்.

உளவு பார்ப்பவர்கள் தமக்குத் தெரிந்த மனிதர்களை ஏன் பரிசோதிக்கவேண்டும்? அணுகுண்டை ஒத்த கருவிகளாலும் அழிக்க முடியாதனவற்றை இவை எப்படி அழித்தன? இதுவரை அறியப்படாத கதிர்வீசலை எந்தநாடு வைத்திருக்கின்றது? இது போன்ற கேள்விகளை இன்னொரு தரப்பினர் எழுப்பினர்.

19 ஆம் நூற்றூண்டின் இறுதியில் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநில விவசாயிகள், தாம் பறக்கும் தட்டைப் பார்த்ததாகக் கூறினர். அதை ஆதாரமாகவைத்து அமெரிக்க இராணுவத்தினர் 1948 இல் பறக்கும் தட்டைச் செய்து இயக்கினர். அது ஒரு அடிதானும் நகரவில்லையாம். ஆகவே அமெரிக்காவிலும் முன்னேறிய நாடு இருக்கவேண்டும். அவைதான் பறக்கும் தட்டுகளை ஏவின என, அமெரிக்கா முடிவுசெய்தது. அத்துடன் வானியலில் முன்னேறிய ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா போன்றநாடுகளை உளவுபார்க்க ஆரம்பித்தது. இதற்குள் அந் நாடுகளும் பறக்கும் தட்டுகளைப் பார்த்ததாகத் தகவல்களை வெளியிட ஆரம்பித்தன. இதனால் பூமியிலுள்ள நாடுகளினால் இவை செலுத்தப்படவில்லை என தற்காலிகமாக சமாதானம் செய்யப்பட்டது.

பிரபஞ்சத்தில் எண்ணற்ற நட்சத்திரங்கள், கிரகங்கள் உலவுகின்றன. அவற்றில் உயிர்வாழ்வன உள்ளனவா? ஏன் நமது அண்டைக்கிரகமான செவ்வாயில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியம் உள்ளது. ஆனால் அவை எதுவும் இன்றும் நிரூபிக்கப்படவில்லை.

ஆகவே இந்தப் பிரபஞ்சத்தில் உயிர் இனங்கள் உள்ளனவா இல்லையா என்ற உண்மை அறியப்படும்வரை, நம்மைவிட முன்னோடிகளான வேற்றுக் கிரகவாசிகளே நம்பூமியை ஆராயப் பறக்கும் தட்டுகளில் வருகின்றனர் என, நம்பிக் கொண்டிருக்கவேண்டும். 1954 இல் பிரான்ஸ் இதற்கு விசாரணைக்குழு அமைத்தது. 1958 இல் ரஷ்யாவும், 1978 இல் ஐக்கியநாடுகள் சபையும் பறக்கும் தட்டுகளை ஆராய, விசாரணைக்குழுவை அமைத்தது. இன்றுவரை பறக்கும் தட்டு, பறக்கும் தட்டுவாசிகள் மக்களை துப்பாக்கி காட்டிமிரட்டினர் என்ற செய்திகள் வெளியிடப் பட்டவாறு இருக்கின்றன. எத்தனை விசாரணைக்குழு அமைத்தபோதும் இன்றுவரை இது UFO தான்.

20 ஆம் நூற்றூண்டில் பரபரப்பாக இருக்கும் இது 20 ஆம் நூற்றூண்டிலேயே அறியப்படுமா, அல்லது 21 ஐயும் கடக்குமா? □

# அங்கிங்கெனாதபடி

ஆழ்ந்த சோகம் ஊடுருவித் தெரியும் கண்கள்; எனினும் தீட்சண்யமானவை. கறுப்பு அமெரிக்க முகம்; கைகளில் கிற்றார். முதல் பார்வையிலேயே ட்ரேஸி ச்சப்மான் (Tracy Chapman) எனும் புதிய கறுப்பு அமெரிக்கப் பாடகியின் முதலாவது L.P. இசைத் தட்டின் வெளிப்புற அட்டை, வித்தியாசமானதாக இருந்தது. பாடல்களோ கறுப்பு அமெரிக்க மக்களின் துன்பங்களையும், அவலத்தையும் — குறிப்பாகக் கறுப்பு அமெரிக்கப் பெண்களின் — துல்லியமாக எம்முள் எழுப்புகின்றன:

ராத்திரி ஒரு அலறல் ஒலி கேட்டேன் / அவருக்குப் பின்னாலோ / உரத்த குரல்கள் / இன்னொரு தூக்கமிழந்த இரவு/ எனக்கு ... / எல்லாம் முடிந்த பிறகுதான் / பொலிஸ்காரர் வருவார்கள் / வருவதாகத் தீர்மானித்திருந்தால் ...... / ராத்திரி ஒரு அலறல் ஒலி கேட்டேன் ... /

**ஏகாந்தன்**

சென்ற வருடம் இலட்சக் கணக்காக விற்பனையான ட்ரேஸி ச்சப்மானின் The Fast Car என்ற இசைத்தட்டின் முக்கியமான அம்சம், அதிலுள்ள பெரும்பாலான பாட்டுக்களுக்கு கிற்றார் மட்டுமே பின்னணி இசை, ஒரு பாடலுக்கு எவ்வித பின்னணி இசையும் இல்லை; தனியே பாடல் மட்டும் கவிதையின் ஆழத்துடன் மனதில் இறங்குகிறது.

கடந்த சில வருடங்களாக மேற்கின் இசையுலகில் சில 'கிற்றார் ஏந்திய பெண்கள்' செய்து வரும் புரட்சி அபூர்வமானது. இவர்கள் பின்னணி இசையை அதிகளவு பாவிப்பதில்லை. கவிதைக்கும் பாடலுக்கும் பிரதான இடம் வழங்கி தனியே கிற்றார் ஒலியுடன் — அதையும் அவர்களே எழுப்புகிறார்கள் — அற்புதமாக அனுபவப் பரிமாற்றம் செய்கிறார்கள்.

ட்ரேஸி ச்சப்மான், மிஷேஸ் ஷொக்ட் (Michelle Shocked), தான்யா திகாராம் (Tanya Tikaram), சூஸன் வேகா (Suzanne Vega) ஆகியோர் இந்த வகையில் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவர்கள் தீவிரமான பெண்நிலைவாதிகள். பாடல்களில் அவர்களுடைய அநுபவங்கள் கலாபூர்வமாக வெளிப்படுகின்றன.

"ஆர்ப்பாட்டமான பின்னணி இசைக்குள் தோய்ந்த பாடல்களை வெறும் உல்லாச நோக்கங்களுக்காகப் பாடுவதில், எனக்குச் சம்மதமில்லை. எங்களுடைய இசையின் உயிர், எங்களுடைய பாடலிலும் எங்களுடைய அநுவத்திலும் இருக்கிறது. படாடோபமும், நவீன இசைக் கருவிகளும் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய மேற்கு இசை உலகில் வெறும் கிற்றாருடனும் எங்களுடைய பாடலுடனும் மட்டுமே நாங்கள் போரிடுகிறோம்" என்று சொல்கிறார் மிஷேஸ் 'ஷொக்ட்.' இது அவருடைய புனைபெயர். Shocked என்னும் சொல்லைக் காரணப் பெயராகவே பயன்படுத்துவதாகவும் கூறுகிறார். இவருடைய 'காதலும் விஸ்கியும்' என்ற பாடல் குறிப்பிடத்தகுந்தது மட்டுமல்ல; புகழ் பெற்றதுமாகும்.

தான்யா திகாராம் ஆசியாவைச் சேர்ந்தவர் எனினும் மூன்றும் தலைமுறை ஆசியப் பிரித்தானியர். அண்மையில் வெளியான இவருடைய The Cathedral Song எனும் இசைத் தட்டும் முக்கியமானது.

இவர்கள் அனைவருள்ளும் ட்ரேஸி வெளிப்படுத்தும் உணர்வும், கறுப்பு அமெரிக்கப் பெண்நிலை அநுபவமும், அமெரிக்க சமூக அமைப்பின் விமர்சனமும் உண்மையில் அற்புதமானவை. குறிப்பாக, அவருடைய The Fast Car இசைத் தட்டிலுள்ள "அவர்கள் புரட்சியைப் பற்றிப் பேசுகிறார்கள்", "மன்னிக்கவும் என்பது மட்டுமே நீ சொல்லக் கூடியது", போன்றவை.

அமெரிக்க ஆங்கில உச்சரிப்பு, அதுவும் கறுப்பு அமெரிக்கர்களுடையது பலவகைப்பட்டது. எடுத்த எடுப்பில் விளங்கிக் கொள்வதில் மிகுந்த சிரமம் தரக்கூடியது. எனினும் இசைத்தட்டோடு கூடவே பாடல்களின் வரிகளும் கிடைக்கின்றன. இவற்றை வாசித்த பிற்பாடு கேட்பது மிகுந்த இலகுவாயிருக்கும். வெள்ளை இனவெறியர் பற்றிய ட்ரேஸியின் ஒரு பாடல் இப்படி முடிகிறது:

அவர்கள் அமெரிக்காவைக் கொல்கிறார்கள்
அமெரிக்காவின் கனவுகளையும் கொல்கிறார்கள்...... □

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

பென்ரலற், டிலக்ஸ், டியுகோ

முதலிய சகலவிதமான பெயின்ற் வகைகளுக்கு சிறந்த இடம்

முருகன் ரேடர்ஸ்

21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

# கம்பூச்சியாவில் படைவிலகல்

## நலிவடையும் "படை உதவி" வாதம்

கம்பூச்சியாவிலிருந்து வியற்ஞமிய படைகள் வெளியேறியமை ஆனது "படை உதவி" வாதச் சகாப்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதான ஒரு கோடுகாட்டி என எண்ணலாம்.

பொதுவாக "படை உதவி" என்பது ஆதிக்கவாதத்தின் ஒரு கோட்பாடு. அது முலாம் பூசப்பட்ட ஓர் அழகிய வார்த்தை. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பு வல்லாதிக்க வாதம் இக்கோட்பாட்டினை உருவாக்கியது. வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கினை நோக்கினுல் இக்கோட்பாட்டின் தோற்றத்தினையும், இதன் இன்றைய கையறு நிலையினையும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

ஐரோப்பியர் தமது ஆதிக்க நலன்களுக்காக கி.பி. 16 ஆம் நூற்ருண்டில் உலக நாடுகளுக்குப் பரவத் தொடங்கினர். முதலில் ஐரோப்பியர் புதிய நாடுகளைக்கண்டறிதல்என்னும்

□ சரணயன் □

கருத்தை முன்வைத்தனர். இவ்வாறு புதிய நாடுகளைக் கண்டு பிடித்ததும் குடியேற்ற வாதம் எனும் கோட்பாட்டினை முன்வைத்தனர். அதாவது கண்டுபிடிக்கப்பட்ட புதியநாடுகளில் ஐரோப்பியர்களை குடியேற்றுவது. இவ்வாறு ஐரோப்பியர்களால் குடியேற்றப்பட்ட நாடுகள்தான் அமெரிக்கா, கனடா, ஒஸ்ரேலியா போன்ற பல.

இரண்டு காரணங்களை முன்னிட்டு ஆதிக்க வாதத்தில் மேலும் ஒரு புதிய பரிமாணம் ஏற்பட்டது. அதாவது மேலும் புதிய நாடுகளில் குடியேற்றங்களைச் செய்வதற்குப் போதிய சனத்தொகை ஐரோப்பியரிடம் இல்லாமையினுலும் பல புதிய நாடுகளில் சனத்தொகை நெருக்கமாகக் காணப்பட்டமையாலும் குடியேற்றம் என்ற வடிவத்தை கைவிட்டு தமது நாட்டின் இராணுவத்தின் மூலம் இக்குறித்த நாடுகளைக் கைப்பற்றி ஆட்சி புரிவதன் மூலம் இந்நாடுகளில் பொருளாதார இலாபத்தை திரட்டுவது. இதற்கு இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, வியற்நம் போன்ற பல ஆசிய நாடுகள் உதாரணம்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து ஐரோப்பியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் சுதந்திரமடைந்தன. தமது நேரடி இராணுவ பலத்தினுல் இந்நாடுகளைத் தொடர்ந்தும் ஆளமுடியாத நிலையிற்தான் இந்நாடுகளை விட்டு ஐரோப்பியர் வெளியேற வேண்டி ஏற்பட்டது. இவ்வாறு தமது நேரடி இராணுவ பலம் தோல்வி அடைந்த பட்சத்தில் ஆதிக்க வாதிகள் மேலும் ஒரு புதிய வழியைக் கண்டறிந்தனர். அந்தப் புதிய வழிதான் நவகொலனித்துவ வாதம். இது திரைமறைவில் நின்று ஆளும் முறை. விஞ்ஞான — தொழில் நுட்பம், பொருளாதாரம் போன்ற ஆதிக்கங்களைத் தமது கையில் வைத்திருப்பதன் மூலம் இந்நாடுகளின் அரசியற் பொரு



கம்பூச்சியாவிலிருந்து வெளியேறும் வியற்னும் படைகள்

ளாதாரக் கொள்கைகளை தமது ஆதிபத்திய நலனுக்கேற்ப நடாத்தும் முறைமையாகும். ஒரு வகையில் உள்நாட்டு அரசாங்கம் என்பது அந்நிய ஆதிபத்திய சக்திகளின் பொம்மை அரசாங்கமாகவே அமைந்திருந்தன. இதற்கு எதிராகவும் தேசியவிழிப்படைந்து மக்கள் போராடத் தொடங்கினர். அப்போது இந்தப் பொம்மை அரசாங்கங்களை காப்பாற்ற வேண்டிய தேவை ஆதிபத்திய சக்திகளுக்கு ஏற்பட்டன. ஆதலினுல் உள்நாட்டுப் பொம்மை அரசுகளுக்கு நேரடிப் "படை உதவி" அளிப்பதன் மூலம் தமது ஆதிபத்தியத்தை நிலைநாட்ட முயற்சித்தனர். இவ்வாறு பொம்மை அரசுக்கு உதவும் பெயரிற்தான் வியற்ஞமில் அமெரிக்க படை இருந்தது. அதாவது பதவியில் பெயரளவில் உள்நாட்டு ஆட்சியாளன் இருப்பான், வெளிநாட்டு இராணுவம் அங்கு நிற்கும். இவ்வாறு அமெரிக்காவும் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இக்கொள்கைக்கு தம்மை உட்படுத்தின. இக்காலத்தில் ஸ்ராலினும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மீது இவ்வாருன படை உதவிக் கொள்கையை பின்பற்றினுர். அத்தகைய கொள்கையின் விரிவாக்கந்தான் ஆப்கானிஸ்தானுள் சோவியத் படைகள் பிரவேசித்தமையும், கம்பூச்சியாவுக்குள் வியற்ஞமிய படைகள் பிரவேசித்தமையும். படை உதவி வாத உத்தியின் இன்னுேர் அம்சம் படைத்தளங்களை அமைத்தல்என்பது. (அதேவேளை படைத்தளங்களை அமைத்தல் என்பது வேறு பல சர்வதேச அரசியல் இராவப் பரிமாணங்களையும் கொண்டுள்ளது).

இத்தகைய போக்கு பிராந்திய வல்லரசுகளுக்கும் தொற்றிக்கொண்டது, அல்லது இரண்டாந்தர வல்லரசுகளுக்கும் தொற்றிக் கொண்டது எனலாம். பொம்மை அரசுகளுக்கு உதவியாக அந்நிய இராணுவம் நிற்கும் பட்சத்தில் அது உள்நாட்டு வெளிநாட்டு ரீதியிலான எதிர்ப்பைப் பெற்று இறுதியில் தோற்கடிக்கப்படுவதான ஒரு வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது. பொம்மை அரசுகளுக்கு ஊடாகவோ அன்றி நேரடியாகவோ ஒரு அந்நிய இராணுவம் நிலைகொள்ள முடியாத உலகச் சூழல் தற்போது பெருமளவிற்கு வளர்ந்துள்ளது எனலாம்.

இதனை வரலாற்று ரீதியாக சற்று நோக்குவோம். வியற்ஞமில் அமெரிக்கப்படை துரத்தப்பட்டது, ஆப்கானில் சோவியத் படைகள் துரத்தப்பட்டன, வியற்ஞமின் மீது 1977 ஆம் ஆண்டு சீன படையெடுத்தது. இதன் உள்நோக்கம் அங்கிருந்த மொஸ்கோ சார்பு அரசைக் கவிழ்த்து தமது உதவியுடன் தமது சார்பு அரசை உருவாக்குவதுதான். ஆனுல் அந்தப் படையெடுப்பு வெற்றிகொள்ள முடியாமல் பெரும் இழப்பின் மத்தியில் சீனப் படைகள் பின்வாங்கின. இப்படையெடுப்புக்கான காரணம் பற்றி டெங் - கியாஓ - பிங் ஒரு புது விளக்கமளித்தார். அதாவது வியற்ஞமிற்கு ஒரு பாடம் படிப்பிக்கும் நடவடிக்கை (Punitive action) தான் தமது இராணுவ நடவடிக்கையேயொழிய அது ஆக்கிரமிப்பல்ல எனக் கூறினுர். உண்மையில் அதில் பாடம் படித்தது சீனுதான். படை எடுப்பைத் தொடர முடியாமற் தோல்வியடைந்துதான் டெங் பின்வாங்கினுர். பின்பு கம்பூச்சியாவுக்குள் புகுந்த வியற்ஞமியப் படைகளும் 11 வருடங்களின் பின்பு எதிர்ப்பின் மத்தியில் இன்று வெளியேறி உள்ளன.

பொதுவாக அந்நியப் படைகள் இன்னெரு நாட்டில் "உதவி" என்பதன் பேரில் தங்கி இருப்பதற்கு இன்று உலகில் எதிர்ப்புக்கள் மிகக் கணிசமான அளவு உள்ளன. எனவே படை உதவி வாதம் எனும் கோட்பாடு இன்று பெருமளவு நலிவடைந்து வருகின்றது என்று கூறலாம். அதற்கு இறுதியாக கம்பூச்சியாவில் நிகழ்ந்துள்ள வியற்ஞமியப் படை விலகல் ஒரு முக்கிய மைல் கல்லாகும். அந்நியப்படைகள் பல இலட்சக் கணக்கில் மக்களைக் கொன்று குவிக்கலாம். ஆனுல் மக்களை அடிபணிய வைக்க அக் கொலைகளால் முடியவில்லை. இறுதியில் அந்நியப் படைகள் மக்கள் போராட்டத்தின் முன்பு மண்டியிடுகின்றன. □

## மனிதனைத்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த அவளுக்குப் பயமாகப் போய் விட்டது. வீட்டைத் திரும்பிப் பார்த்தாள். தூரத்தே அவளின் தந்தையின் உருவம் நிழற் கோடாகத் தெரிந்தது.

"அப்பர கண்டாப் போச்சு" என்றபடி அவள் ஒளிவதற்கு இடம் தேடலானுள். நிறைவெறியில் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார் அவளின் அப்பா. அவர் கையில் ஒரு வேட்டைத் துப்பாக்கி, அவரைப் பின் தொடர்ந்து இன்னும் நாலைந்து பேர் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அவனை நெருங்கி வந்து விட்டார்கள்.

"ஆ, அந்தா அவன்" என்று அவர்களில் ஒருவன் அவனைச் சுட்டிக்காட்டினுன். யாரோ ஒரு மனிதன் அந்தக் காட்டின் கரையில் விழுந்து கிடக்கும் விஷயம், அவள் தம்பி மூலம் அம்மாவுக்கும், அவளிடமிருந்து அப்பாவுக்கும் பின் மற்றவர்களுக்குமாகப் பரவி, அவனைத் தேடிக் கொண்டு இதோ அவர்கள் வந்து விட்டார்கள். அவர்களைக் கண்டதும் அவன் எழுந்துஓடப்பார்த்தான். ஆனுல் அவனுல் முடியவில்லை.

"அடோ உம்ப கௌதடோ"
"கொய்த இந்தலா ஆவே"
"பற தெமலோ கத்தாகொறன்டடோ"

சரமாரியாகக் கேள்விக் கணைகள் அவனை நோக்கிப் புறப்பட்டன. பயத்தாலும் மொழியறியா மடமையாலும் அவன் பேந்தப் பேந்த விழித்தான். தப்பி ஓடி வந்து விட்ட கைதியைப் பார்ப்பது போல அவர்கள் அவனை வன்மத்துடன் பார்த்து நின்ருர்கள். அவளின் அப்பா துப்பாக்கியை சடாரென மடித்து நிமிர்த்தினுர். கண்ணில் வைத்துக் குறி பார்த்த போது தடுமாறி விழப் பார்த்தார். அவனது கும்பிட்ட கைகள் வட்டத்தினூடாக மங்கலாகத் தெரிந்தது. "ஹோ ஹோ" வென்ற எக்காளச் சிரிப்புடன் துப்பாக்கி விசையில் அவர் கைபதித்தார். சன்னம் சீறிப் பாய்ந்தது. கை துண்டாடப்பட்ட நிலையில் அவன் துடித்துப் புரண்டான். விழுந்து விடாமலிருக்கத் துப்பாக்கியை ஊன்றி இவர் தன்னைச் சமநிலைப்படுத்திக் கொண்டார். அடுத்த ரவை அவன் காலைத் துளைத்துக் கொண்டு போயிற்று. சூடான அந்த வயல் நிலத்தில் அவன் இரத்தம் தெறித்து அதைக் குளிரச் செய்தது. தணியாத தாகத்துடன் அவன் உடம்பினின்றும் பெருகிய குருதிப் புனலை அந்த வரட்டுத் தரை உறிஞ்சிக் கொண்டது. சுற்றி நின்ற கூட்டம் ஜெயகோஷம் செய்து இவருக்கு உற்சாகமூட்டியது. வேட்டை நாய்களாற் சூழப்பட்ட முயற்குட்டி போல் அவன் மொழியிழந்து போனுன். அந்த மனிதனின் மரணம் அவர்களின் மரணம் அவர்களின் மகிழ்ச்சி ஆரவாரமானது. அவனுடலில் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையையும் அவர்கள் செய்தார்கள். அவன் தலையைத் துண்டாடிப் பந்தாடினுர்கள். யார் மீதோ அல்லது எதன் மீதோ அவர்களுக்கிருந்த ஆத்திரத்தை அவர்கள் அவன் உடம்பின் மீது காட்டினுர்கள். அவர்களின் அடிமன உந்தல்களின் வெளிப்பாடாக—வக்கிரங்களின் வடிகாலாக—பலவீனங்களின் பிரதிபலிப்பாக அந்த மனிதனை அவர்கள் பயன்படுத்திக் களித்தார்கள். காட்டுமிராண்டிகளைப் போல், அவனை அவர்களால் கடித்துத் தின்னத்தான் முடியவில்லை. முடிந்திருந்தால் அதையும் செய்திருப்பார்கள்.

அன்று பின்னேரம் மரத்தடியில் மயக்கமாக விழுந்து கிடந்தவளை தூக்கிவந்து கட்டிலிற் கிடத்திய போது அவள் காய்ச்சலுடன் புலம்பிக் கொண்டு கிடந்தாள்...... "மனிதன் மனிதன்"...... என்று, காலைப் பொழுது விடிந்த போதும் கூட அவள் கண் திறக்கவில்லை. அவள் தாயின் ஒப்பாரி இதயத்தைத் தொட்டு உலுக்குமாப்போல உரத்து ஒலிக்கிறது. அதைப் புரிந்து கொள்ளப் பாஷை தேவையில்லை. □

## அன்று என்.எம். கூறியது

1956 ஆம் ஆண்டு பண்டார நாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய போது, கலாநிதி என்.எம். பெரேரா பின்வருமாறு கூறினுர் :

"இதனுடைய பெறுபேறுகளை 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத்தீவு (இலங்கை) அனுபவிக்க வேண்டிவரும். ஒரு ஆயுதம் தாங்கிய போராட்டம் நிகழும்; நாட்டில் இரத்தம் சிந்தப்படும்" □

### 17-10-89 செவ்வாய்

வடக்குக் கிழக்கு மாகாண அரசின் விவசாய புனர்வாழ்வு அமைச்சர் சி. எம். கணேசலிங்கம் தமதுபதவியை இராஜினுமா செய்தார்: சொந்தக்காரணங்களினுலேயே அவ்வாறு செய்வதாக அவர் தெரிவித்தார்□ வட-கிழக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் சேகு இஸ்ஸதீன் கொழும்பில் அண்மையில் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, கண்டனத் தீர்மானமொன்றை வட-கிழக்கு மாகாணசபை நிறைவேற்றியது□ அரசியல்அமைப்பின் 6 ஆவது திருத்தத்தை நீக்க நாடாளுமன்றத்தில்பிரேரனை கொண்டுவர ஈரோஸ் முடிவு செய்துள்ளதாக, ஈ. ஜ. மு. பேச்சாளர் கே. பரராஜசிங்கம் தெரிவித்தார்□ 'மறைந்த யாழ். எம். பி. வெ. யோகேஸ்வரனுக்கு அனுதாபம் தெரிவிக்கும்பிரேரணையின்மீது நாடாளுமன்றத்தில்உரையாற்றிய ஹலீம் இஷாக் எம். பி., யோகேஸ்வரன் முஸ்லிம்களுக்கு பலசேவைகளைச்செய்தவர் என்று குறிப்பிட்டார்□ இந்தியப் படையினர் 200 டிரக்குகளில் மட்டக்களப்பிலிருந்து வெளியேறி திருமலைக்குச்சென்றனர்□ பம்பலப்பிட்டி நகைக்கடையில் பட்டப் பகலில், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் ரொக்கமும் நால்வரால் கொள்ளையடிக்கப்பட்டன□

### 18-10-89 புதன்

இந்தியப்படையினர் வெளியேறியதும் வடகிழக்கில் சட்டம் ஒழுங்குபேணுதல் மாகாண முதலமைச்சரின் பொறுப்பில் இருக்கும் என, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினபத்திரிகையாளர் மாநபட்டில் தெரிவித்தார்□ த. வி. கூட்டணி எம். பி. யாக மாவை சேனுதிராஜா சத்தியப் பிரமாணம் செய்தார்□ வட-கிழக்கு மாகாண சபையின் காணி, விவசாய, புனர்வாழ்வு அமைச்சராக பி. ராஜரத்தினம் பதவியேற்ருர்□ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளை எவரும் சந்தித்துப் பேசலாமென, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்□ பொலநறுவை இ. போ. ச டிப்போவுக்குள் நுழைந்த 18 ஆயுத பாணிகள், 52,000 ரூபாவைக் கொள்ளையடித்து, 6 பஸ்களை எரித்துச் சென்றனர்□ காணியற்ருேருக்கு காணி வழங்க, குடியமர்த்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தென்மாகாண முதல்வர் எம். எஸ். அமரசிறி கூறினுர்□

### 19-10-89 வியாழன்

ஜீ. சி. ஈ. (சா/த) பரீட்சைக்குவிண்ணப்பிக்கும் முடிவு திகதி, இம்மாதம் 31 வரை நீடிக்கப்பட்டது□ இளைஞர் அமைதியின்மையை ஆராய எழுவரடங்கிய ஜனுதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது; பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் தலைவராக இருப்பார்□ தமிழர் பிரச்சினை தீராதவரை நாட்டில் அமைதி தோன்ருது என, மாவை சேனுதிராஜா தனது நாடாளுமன்ற கன்னிப் பேச்சில் குறிப்பிட்டார்□ அதிகாலை போத்தலை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டபோது, ஒரு பொலிஸ்காரர் கொல்லப்பட்டார்: இன்னெருவர் படுகாயமடைந்தார்□ மலையக மக்களின் கல்விவளர்ச்சிக்கென தனியாகசர்வகலாசாலை தேவையென எம். எச். எம். அஷ்ரப் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்□

### 20-10-89 வெள்ளி

அம்பாறை மாவட்டத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட இந்தியப்படையின் ஒரு பிரிவு திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம், தாயகம் சென்றது □ இம்மாதம் 24ஆம்திகதியுடன் அம்பாறை இந்தியப் படை முற்ருக வெளியேறி, மறுநாள் திருமலையிலிருந்து தாயகம் செல்வர் என, அமைச்சர் ரஞ்சன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்□ அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு, நாடாளுமன்றம் அங்கீகாரம் அளித்தது □ குருத்தலாவை புனித தோமையார் கல்லூரி அதிபர் ஜே. பி. குணரத்தினமும், அவரது மனைவி மனேகரியும் இனம் தெரியாதவர்களால், இரவு சுட்டுக் கொல்லப்பட்டனர் □

### 21-10-89 சனி

வறுமையை ஒழிப்பதற்கான அடிப்படையான திட்டங்கள் மூலமே இளைஞர்களது பிரச்சினையைத் தீர்க்கலாமென, அமைதி வழி காண்பதற்கான கண்காணிப்புக் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகச், செய்தி வெளியானது □ வடக்குக் கிழக்கிலுள்ள 84பொலிஸ் நிலையங்கள் விரைவில் இயங்கும் எனச், செய்தி வெளியாயானது □ அமைச்சர் ரஞ்சன் தலைமன்னர், காரைநகர், காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்குத் திடீர் விஜயம் செய்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆராய்ந்தார் □

### 22-10-89 ஞாயிறு

சிரேஷ்ட பொலிஸ் அதிபர் ரீ. ஈ. ஆனந்தராசா வட—கிழக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார் □ உள்ளூர் வெங்காயம் போதியளவு கையிருப்பிலிருக்கும்போது, வெளிநாட்டிலிருந்து 600 தொன் வரை இறக்குமதி செய்த காரணத்தை விசாரித்தறியுமாறு ஜனுதிபதி உத்தரவிட்டார் □ கஷ்ட முறுபவர்களுக்கு உதவவே வந்துள்ளோம் என, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் தலைவர் பிலிப் கொம்டஸி கூறினுர் □

## ஜே. ஆரின்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜே. ஆர். ஐ. தே. கட்சிக்குள் பெரும் பங்கை வகித்தார். இந்த நூல் இனக்கலவரத்திற்கு பெரும் தூண்டுகோலாக அமைந்தது என்பது டாசி வித்தாச்சி போன்ற நடுநிலைமை எழுத்தாளர்களது கணிப்பாகும்.

இவ்வாருன இனத்துவேஷத்தைத் தூண்டக் கூடிய நூல்களை வெளியிட்டு இனமுரண்பாடுகளை வளர்த்து வந்த ஜே. ஆரின் பணிகளால் இலங்கையில் 1977, 1981, 1983 என இவரது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான இனரீதியான ஒடுக்குமுறைகளும் இனக்கலவரங்களும் மிக மோசமான கட்டத்தை அடைந்தன. முப்பது ஆண்டுகாலம் இனவாதத்தைச் சிங்கள மக்களுக்கு ஊட்டி வளர்த்த ஜே. ஆர். இனவாதம் பெரும் பூதாகரமாக வளர்க்கப்பட்டுள்ளமையையும் அதனை ஜே. வி. பி. சுவீகாரம் எடுத்துள்ளமையையும் தான் வளர்த்த இனவாதத்திற்கு தானே பலிக்கடா ஆகவேண்டிய நிலைமை உருவாகி இருப்பதையும் 1988இல் உணர்ந்து கொண்டார். 1988 ஜனுதிபதி தேர்தலில் தாம் போட்டியிட்டால் தோல்வியடைய வேண்டும் என எண்ணிய ஜே. ஆர். பிரேமதாசாவை யு. என். பி. வேட்பாளராக நியமித்து தாம் அரசியலிலிருந்து ஒதுங்கப்போவதாக அறிவித்தார். ஆக மொத்தத்தில் 1958 இல் ஜே. ஆர். ஊட்டி வளர்த்த இனவாதப் பிசாசு 1988இல் முப்பது ஆண்டுகளின் பின் ஜே. ஆரையே அரசியலிலிருந்து ஒதுங்க வைத்தது.

தீபாவளி வாழ்த்துக்கள்

யாழ்நகரில் ஓர் புதிய உதயம்!

உங்களை பிளாஸ்டிக் பொருட்களுடனும்
சகலவித அன்பளிப்புப் பொருட்களுடனும்
வரவேற்க காத்திருக்கின்றது!

ஒமான்ஸ் பலஸ்

(நவீன பிளாஸ்டிக் அன்பளிப்பு பொருட்கள்
விற்பனையாளர்கள்)

சென்ற் அன்ரனீஸ் இன்டஸ்ரியல் குரூப்

தயாரிப்பான ANTON பிளாஸ்டிக் பொருட்களை
விற்பனை செய்வதில் நாம் முன்னணியில் திகழ்கின்ருேம்.
நீங்கள் பிளாஸ்டிக் பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் கொள்வனவு செய்வதற்கு
அது - இது என்று அலட்டிக்கொள்ளாமல்
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

நீங்கள் இதுவென்று பெயரிடுங்கள்
நாங்கள் பெற்றுத்தருவோம்.

ஒமான்ஸ் பலஸ்
404/1, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலைய முன் மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கு அதி விசேட கழிவு!
பிளாஸ்டிக் வகைகள் என்றவுடன் ஒ....வென்று அலையாமல்
— ஒமான்ஸ் பலஸை நாடுங்கள்.

விளம்பர வடிவமைப்பு:
செனித் ஜோ. எகட்டன் யாழ்.

## மனித....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் ஆதித்திருச்சபையில் புகழ்பெற்ற கிறீஸ்தவனுன சின்னப்பர் கூறுகிருர்: "இனி யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை. அடிமையென்றும் உரிமைக் குடிமகனென்றும் இல்லை. ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை. கிறீஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" (கலா. 3:28).

மக்கள் சமத்துவத்துடன் வாழ அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படல் அவசியம். அதாவது அவர்கள் நீதியுடன் வாழவேண்டும். இதை வலியுறுத்தும் முகமாக, கிறீஸ்தவத்தின் மாபெரும் தலைவர் இயேசு தமது மலைப்பொழிவில்: "நீதியின்பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்ருேர்" (மத். 5:6) என்று மறைவாழ்வில் நிறைவு பெற நீதி அத்தியாவசியம் எனப் போதித்துள்ளார்.

### முதன்மையான மனித உரிமையும் மதங்களும்

மனித உரிமைகளுள் முக்கியத்துவம் வாய்ந்தது உயிரைப் பாதுகாக்கும் உரிமை. சமயம் என்ற பெயருக்கு அருகதையுள்ள எந்தவொரு சமயத்தினதும் முக்கிய நற்பண்புகளுள் ஒன்று உயிர்கள்மேல் கொண்டுள்ள மதிப்பு. உயிர், சிறப்பாக மனித உயிர் அனைவராலும் மதிக்கப்பட வேண்டுமென மதங்கள் யாவும் ஒருமித்துக் குரல் எழுப்புகின்றன. □

## மூன்ருவது....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைக் கொண்டு ஒருவரின் உடல்நலம் மனநிலை போன்றவற்றைக் கணித்து விட முடியுமாம். திபேத்திய நூல்கள் கூறுகின்ற இக்கருத்து இன்றைய உளவியல் முடிவுக்குப் பொருந்துவதை எண்ணும்போது மிகவும் வியப்பாக இருக்கிறது.

'லோப்சாப்ரம்பா' என்ற திபேத்திய ஞானி தாம் மூன்ருவது கண் பயிற்சியைத் தம் ஆசிரியர்களிடமிருந்து பெற்ற பிறகு, தூய வாழ்க்கை வாழும் அந்த ஞானுசிரியர்களின் உடல் பொன்னிறக் கதிர்களாகத் தமக்குத் தோற்றமளித்ததாக எழுதியிருக்கிருர்.

மேலும் கோபம் மிகுந்த நிலையில் ஒருவனைப் பார்க்க நேர்ந்த போது உடல் சிவப்பு நிறக்கதிர்களால் சூழப்பட்டிருந்ததைக் கண்டதாகவும் கூறுகின்ருர்.

மின்காந்த சக்தி புகாத கொங்கிரிட் அறைக்குள்ளிலிருந்து கூட எண்ணங்களை வெளியில் அனுப்ப முடியும் என்று சொல்கிருர்கள்.

இந்தத் துறையிலே நம் முன்னோர்கள் மிக உயர்ந்த நிலையினை எட்டி இருந்தார்கள்.

நன்றி: சக்தி □

## ஞாயிறு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*அறத்தீ, அறிவுத்தீ, உயிர்த்தீ, வீரத்தீ, வேள்வித்தீ, சினத்தீ, பகைமைத்தீ, கொடுமைத்தீ — இவையனைத்தையும் தொழுகின்ருேம். இவற்றைக் காக்கின்ருேம். இவற்றை ஆளுகின்ருேம். தீயே, நீ எமது உயிரின் தோழன். உன்னை வாழ்த்துகின்ருேம்.*

*நின்னைப்போல் எமதுயிர் நூருண்டு வெம்மையும் சுடரும் தருக. தீயே, நின்னைப்போல் எமதுள்ளம் சுடர் விடுக. தீயே, நின்னைப்போல் எமதறிவு கனலுக, ஞாயிற்றினிடத்தே தீயே, நின்னைத்தான் போற்றுகின்ருேம். ஞாயிற்றுத் தெய்வமே, நின்னைப் புகழ்கின்ருேம், நினதொளி நன்று. நின்செயல் நன்று. நீ நன்று*

பாரதியார் □

தோழமையுள்ள தீபாவளி வாழ்த்துக்கள்

பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்
சென் பீற்றர்ஸ்
நெல்லிரசம்
தரம் — தராதரம் — நிரந்தரம்
நெல்லி ரசத்தில் போலிகள் இல்லை என்பதை
நினைவில் கொள்ளுங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

சிவகுமார் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்தி)

சந்தைப்படுத்துவோர்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங்
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Zenith Ads
Joe Egerton WE DON'T COPY OTHERS

திசை
THISAI

# இசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே"*

## மலையக மக்கள்

அன்றிலிருந்து இன்றுவரை மலையக மக்களின் வாழ்க்கை என்பது ஒரு துன்ப வரலாருகவே நிலைத்துவிட்டது.

நாடிருந்தும் அவர்கள் நாடற்றவர்கள். முழு உழைப்பாளிகளாய் இருந்தும் அதற்குரிய ஊதியம் பெருதவர்கள். இந்நாட்டின் பிரஜைகளாய் இருந்தும் பிரஜா உரிமை மறுக்கப்பட்டவர்கள். இலங்கையின் வளமே அவர்கள் கையிலிருந்தும் அவர்கள் வாழ்க்கை 'லயங்' களில்தான். உலகிலேயே பெரும் தொழிற்சங்க அமைப்பு அவர்களுக்கிருந்தும் அதிகம் சுரண்டப்படுபவர்கள் அவர்களே.

எடுப்பார் கைப்பிள்ளைகளாக, அவர்கள் தமது தலைமைகளாலும் இந்நாட்டின் பேரின அரசியல்வாதிகளாலும் காலத்க்குக் காலம் பந்தாடப்படுபவர்கள்.

இந்நாட்டின் முழுப்பொருளாதாரச் சுமையையே அவர்கள் தம் உழைப்பால் தாங்குபவர்களாக இருந்தும் அவர்கள் இந்நாட்டுக்கு ஒரு சுமையாகவே சிங்கள அரசியல் வாதிகளால் கணிக்கப்படுபவர்கள். இந்நாடே அவர்கள் உழைப்பின் முதுகெலும்பில் தொங்கிக் கொண்டிருந்தும் அவர்கள் முதுகெலும்பை உடைப்பதிலேயே சிங்கள் அரசியல்வாதிகள் கவனம்.

இது இலங்கை அரசியலில் வேடிக்கையானதும் வேதனைக்குரியதுமான அம்சமும் முரண்பாடுமாகும்.

இன்று மீண்டும் அவர்களுக்கு நெருக்கடி. தென்னிலங்கையில் தீவிரவாதிகளின் பொருளாதார நாசவேலைகள் மலையக மக்கள் தொழில் புரியும் தேயிலை, றபர் தோட்டங்களைப் பாதித்துள்ளதால் அவர்களில் பலர் தொழில் இழந்து அந்தரப்படும் நிலை.

தீவிரவாதிகள் கட்டவிழ்த்துவிட்ட இந்திய எதிர்ப்பு வாதமும் அவர்கள் இடங்களையே முதலில் சுவை பார்த்தது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக, தற்போது தென்னிலங்கைத் தீவிரவாதிகள், மலையக இளைஞர்களையே தமது போராட்டத்தின் பலிக்கடாக்கள் ஆக்க முனைந்துள்ளனர்! இது எதிர்கால மலையக இளம் சந்ததியினரையே அழிக்கும் திட்டமிட்ட சதியாகும். இதுகாலவரை அவர்களைத் தொடர்ந்த துன்ப, முரண்பட்ட வரலாற்றின் உச்ச வெளிக்காட்டலாக இது அமைந்துள்ளது.

இந்நிலையில் அவர்களை வைத்துப் பிழைக்கும் தலைமைகள் பேசாமல் மௌனம் சாதிப்பது இன்னும் வேதனைக்குரியதாகும்.

ஆனால் மலையக மக்களின் இந்நிலையை, தமிழ்பேசும் இனத்தின் உரிமைக்காகப் போராடும் தமிழீழமக்களின் தலைமைகள் கவனத்திற் கொள்ளவேண்டும். ஏற்கனவே தமிழீழப் போராட்டக் குழுக்கள் இவர்கள் நிலைபற்றிக் குரல் எழுப்பியுள்ளன. ஆனல் இது இன்னும் தீவிரம் அடைய வேண்டும்.

எப்படி மூன்றும் உலக நாடுகள், முதலாம், இரண்டாம் உலக நாடுகளின் சுயலாப வேட்டைகளின் களமாகப் பாவிக்கப் படுகின்றனவோ, அவ்வாறே தமிழீழத்தின் மூன்று முக்கிய சக்திகளான தமிழர், முஸ்லிம்கள், மலையகமக்கள் ஆகியோர் இலங்கைப் பேரின அரசியல்வாதிகளின் சுயலாபப் பகடைக்காய்களாகச் சிதருமல் இருக்க நாம் ஆவன செய்ய வேண்டும். □

எமது சுவையான தீபாவளி வாழ்த்துக்கள் !

எமது ஸ்பெஷல் தயாரிப்பான
கோழிப் புரியாணியை
சுவைத்து மகிழுங்கள்

**சாம்பவீஸ்**
**கூல் அன் கோப்பி பார்**

இல. 46 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# வடக்கு, கிழக்கு அரசாங்க ஊழியர்களுக்கு இடர் செலவுப்படி?

வடக்கு, கிழக்கு அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்தின் பரிந்துரையின்படி இடர் செலவுப் படி (றிஸ்க் எலவுன்ஸ்) வழங்குவதென்று சமீபத்தில் சுற்று நிருபம் ஒன்று அரசாங்கத் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஜுலை 89 இல் இருந்து அரச ஊழியர்களுக்கு இடர் செலவுப் படியாகத் திரட்டிய சம்பளத்தில் அரைவாசி வழங்குவதென்றும், ரூபா 500/=க்கு மேல், குறைந்த சம்பளக்காரருக்கு வழங்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல், அரசாங்கத்தின் பரிந்துரைக்கும் மேலாக நிதியொதுக்கீடும், திறைச்சேரியின்அனுமதியுமில்லாமல் இக் கொடுப்பனவை வழங்க முடியாதாம்.

இதே வேளையில், கிளிநொச்சிக் கல்வித் திணைக்களம் நிதி ஒதுக்கீடும், அனுமதியுமில்லாமல் இடர் செலவுப் படியை, வங்கியில் வைப்பில் இருந்த பணத்தைக் கொண்டு வழங்கியுள்ளது புதிய சிக்கல்கள் தலைதூக்கவே வழங்கிய பணத்தை மீளப்பெறும் வேலையை அத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறதாம்.

இது இப்படியிருக்க, இதே அளவில் இடர் செலவுப் படியை மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோரும், ஏன் தங்களுக்கும் வழங்கப்படக்கூடாது என்று கேட்கிறுர்கள்.

## மார்க்கிரட் தட்சரின் இரட்டை வேடம்

கோலாலம்பூரில் நடைபெற்ற கொமன்வெல்த் நாடுகளின் மாநாட்டில் தென்னுபிரிக்க ஒடுக்கு முறைப் பிரச்சினை முக்கிய அம்சங்களுள் ஒன்ருக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதில் தென்னுபிரிக்க அரசுக்கு எதிரான பொருளாதாரத் தடை பற்றிய தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தில் கைச்சாத்திட்டவர்களுள், பிரித்தானியப் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரும் ஒருவர்.

இவ்வாறு கைச்சாத்திட்ட ஒரு மணி இடைவெளியின் பின்பு, பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது,மேற்படி தீர்மானத்தை தட்சர் குறை கூறினர். பயனற்றதும் தேவையற்றதும் என்ற அர்த்தமுள்ள வார்த்தைகளையும் பிரயோகித்துள்ளார்.

திருமதி தட்சர் இதயபூர்வமாக தென்னுபிரிக்க வெள்ளை இனவாதத்தின் பக்கமே நிற்கிறுர். இவரது பேட்டி பிரச்சார ரீதியாக தென்னுபிரிக்க அரசுக்கு ஆதரவு தேடிக் கொடுக்கும் பாங்கானது. தவிர்க்க முடியாத சூழலில் தீர்மானத்துக்கு மாநாட்டில் ஆதரவு தெரிவித்தபோதிலும், வெளியில் அத்தீர்மானத்தைப் பலவீனப்படுத்த வேண்டும் என்றே விரும்பியுள்ளார். இவர் உண்மையில் தனது பலவீனத்தைத்தான் பறைசாற்றி உள்ளார்.

## மலையக மக்கள் பலிக் கடாக்கள்?
## தலைமைகள் மௌனம்

மலையகத்தில் பல தமிழ் இளைஞர்கள், ஜே. வி. பி. யினரின் மலையக தமிழ் மக்கள் பற்றிய தெளிவற்ற கொள்கையினுல் ஒரு வகை மிரட்டலுக்குள்ளாகி, ஜே. வி. பி. யில் சேர்ந்து வீணே பலியாகி வருகின்றனர்.

தமது மனவிருப்பத்தினுலோ அல்லது கொள்கை விருப்பத்தினுலோ அவர்கள் ஜே. வி. பி யில் சேரவில்லை. மலையகத்தமிழ் மக்கள் வேலை நிறுத்தம் செய்யவும், இடம் விட்டுப் பெயரவும் நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றனர். அதுபோலவே ஜே. வி. பி. யில் தமிழ் இளைஞர்கள் சேர்வதும் நிர்ப்பந்தத்தினுலேதான் எனவும் தெரியவருகிறது அவ்வாறு சேர்ந்த தமிழ் இளைஞர்களை போராட்டத்தில் முன்னணிக்கு விட்டுப் பலியிடுவதன் மூலம் பாரபட்சம் காட்டப்படுவது பரவலாகத் தெரியவந்துள்ளது.

மலையகத்தில் கொல்லப்படும் இளைஞர்களில் பலரும் மலையகத் தமிழ் இளைஞர்களே என்றும், ஆனல் வெளியில் ஜே. வி. பி. பட்டியலில் அவர்கள் உள்ளவர்கள் என்று பரவலாக அறியவருவதால் அந்த உண்மை மறைந்து போய்விடுகிறது.

இப்படி மரணமாகும் மலையகத் தமிழ் இளைஞர்களின் மரணங்கள் பற்றி மலையகத்தலைமைகள் மௌனம் சாதிக்கின்றன. தமது பிரச்சினைகளைச் சரிவரத் தீர்ப்பதற்குப் போராடத் தீர்க்கமான கொள்கைகளைக் கொண்டிராத இத்தலைமைகள் இவ்விளைஞர்களின் மரணங்கள் குறித்துப் பொறுப்பற்றிருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை.

## யுத்த முனையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரால் சிங்கள கிராமவாசிகளுக்கு மலையகத்தில், பதுளை உட்பட்ட பல இடங்களில் அரசு காணிகளைப் பகிர்ந்தளிக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்குப் பொறுப்பாக எஸ். ரி. எவ். எனப்படும் விசேஷ அதிரடிப்படை செயற்படும். இந்நடவடிக்கையின் மூலம் தமிழ்க் குடியிருப்புக்கள் பெரிதும் உதிரியாக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் ஒரு புறம் மலையக மக்களின் தலைமையை அரசு தனது கைக்கு எடுக்கிறது, மறுபுறம் மலையக மக்களை அழிக்கிறது.

## உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் இலங்கைக் கிளை

உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் இலங்கைக் கிளைத் தலைவரான பேராசிரியர் சு. வித்தியானந்தனும் அதன் செயலாளர்களில் ஒருவரான கலாநிதி ஜேம்ஸ் இரத்தினமும் அதன் ஸ்தாபகரான வண. சே. தனிநாயகம் அடிகளாரும் மறைவுற்றமையாலும், பொறுப்பாண்மைக் குழு உறுப்பினரில் பலர் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றமையாலும், இந்த இலங்கைக் கிளைப் பொறுப்பாண்மைக் குழுவின் கூட்டம் சமீபத்தில் கூட்டப்பெற்று, புதிய செயற் குழுவும் பொறுப்பாண்மைக் குழுவும் தெரிவு செய்யப்பட்டன.

முன்னைய செயற்குழுவின் பிரதம அங்கத்தவர்களாகிய திரு. வி, எஸ். துரைராசாவும் திரு. கே. சச்சிதானந்தமும் டொக்ரர் எஸ். சபாரத்தினமும் புதிய செயற் குழுவில் முக்கிய இடம் பெறுகிருர்கள். இது மட்டுமன்றி, நீண்ட கால உறுப்பினர்களில் வேறுபலரும் பொறுப்பாண்மைக் குழுவில் தொடர்ந்து அங்கம் வகிக்கிருர்கள்.

**YARL**
**CHINESE RESTAURANT (PVT) LTD.**
யாழ் சைனீஸ் றெஸ்ற்ருறன்ற்
முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தற்போது ஓடர்கள் இரவு 7.50 வரை
ஏற்றுக்கொள்ளப்படும்.

60க்கு மேற்பட்ட சைன மற்றும் உணவு வகைகளைத் தவிர வெள்ளிக்கிழமைகளில் மாலை அப்பமும் புதன், ஞாயிற்றுக் கிழமைகளில் சைனீஸ் றேல்ஸ்சும் பெற்றுக்கொள்ளலாம்.

தங்குமிட வசதியும் உண்டு

பாவனையில் உள்ள பிறிஜ் ஒன்றும் டீப் பிறீசர் ஒன்றும் விற்பனைக்கு உண்டு.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 27-10-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office. Sri Lanka. Under Q. J 78/89.